பாரத தேவி

நிர்வாக ஆசிரியர் வ. ரா. தனிப்பிரதி 2 அணா

மலர் 1 | ஞாயிறு 6-8-'39 | இதழ் 5

நடந்த கதை	... ...	2
சோடு மாற வேண்டுமா?	... ...	3
பகைவனுக்கு அருள்வாய்!	... ...	8
சட்டமறுப்புக்குக் கட்டியமா?	... ...	10
ஜீவ நதி	... ...	13
பெற்றோரின் பள்ளி	... ...	14
கலைஞான வரலாறு	... ...	17
பரதேசத்தபால்	... ...	21
துக்கம் எதற்காக?	... பொன்னி	24
ஆராய்ந்து செய்வோம்	... சிட்டு	26
ஆசையும் காய் வளர்ப்பும்	... சாவி	28
அதிருஷ்டம்	... வ. ரா.	30
பிச்சைக்காரன் மகள்	... மணி	33
பெரியார் வாக்கு	... ...	37
தியாகம்	... அசுவதி	40
மலர் கொய் தோழி	... ...	43
ஆகஸ்ட் மாதம் 1௳	... வ. ரா.	44
புதிய மனிதன்	... ...	48
என்ன அத்தாட்சி?	கு. ப. ராஜகோபாலன்	49
நக்ஷத்திர குணதிசயங்கள்	... ...	54
ஆளுக்குள் ஆளு; எத்தனை ஆளு?	... ...	57
ரோட்டு—ரயில் போட்டி	... கரிச்சான்	60
எங்கள் 'மாணி'	... வரதன்	63
முதல் கச்சேரி	...சி. ரா. சேஷாத்திரி	66
அகத்தியன்	... ...	71
கரிநூல் ஆராய்ச்சி	... வெ. ம.	78
சிப்பாய் இதயம்	... சி. சு. செல்லப்பா	82
தெனாலிராமன் தொழில்	... சதயம்	88
சரித்திரம் எழுதும் சித்திரக்காரன்	... ...	91
படாடோபம்	... சஞ்சாரி	93
குளத்தங்கரை உலகம்	அ. கி. ஜெயராமன்	95
விமர்சனம்	... ...	98
சினிமா சமூகம்	... ...	99
திரைப்படச் செய்திகள்	... ...	100
உயிருள்ள சரித்திரம்	... காகா கலேல்கர்	102
ஒரு நிமிஷக் கதைகள்	... ...	104

நடந்த கதை

கும்பகோணத்திலிருந்து திருச்சிக்குப் போய்க்கொண்டிருந்தேன், கேஸ் விஷயமாக. தஞ்சாவூர் ஸ்டேஷனில் ரயில் போய் நின்றதும் ஜன்னலை இறக்கிவிட்டு அரைச் சீப்பு வாழைப்பழமும் ஒரு சேர் முந்திரிப் பருப்பும் வாங்கினேன்.

காலை எட்டு மணி.

காலேஜ் மாணவன் போன்ற ஒருவன் வெகு நேர்த்தியாக உடை அணிந்திருந்தான். பிளாட்பாரத்தின் ஓரத்தில் என் பக்கமாக வந்து நின்றுகொண்டான்.

"ஸார், பர்ஸ் எங்கோ தவறிவிட்டது ஸ்டேஷனில். டிக்கட்டுக்கு இரண்டணு குறைகிறது. தயவு செய்து உதவ முடியுமா? அவசரமாக திருச்சினுப்பள்ளி போகவேண்டியிருக்கிறது" என்று மிகவும் மரியாதையாகக் கேட்டான்.

உடனே இரண்டணு கொடுத்தேன் கோர்ட் வேலைமுடிந்ததும்.

மாலை வண்டியில் திரும்பிவிட்டேன். சுமார் ஏழரை மணிக்கு வண்டி தஞ்சாவூருக்கு வந்தது. மறுபடியும் குழந்தைகளுக்காகக் கொஞ்சம் முந்திரிப் பருப்பு வாங்கினேன்.

திடீரென்று மறுபடியும் அந்த யுவன் என்முன் தோன்றினுன்.

"ஸார், பர்ஸ் எங்கோ—" என்று பழைய கதையை ஆரம்பித்தான்.

முதலில் அவன் என் முகத்தை அவ்வளவு சரியாகப் பார்க்கவில்லை. நான் உடனே ஒன்றுமே சந்தேகிக்காதவன் போலக் கூடிய வரையிலும் பாசாங்கு செய்து கொண்டு "சற்று நேரம் இருங்கள். சில்லறை மாற்றித் தருகிறேன்" என்று சொல்லிவிட்டு ரயில்வே போலீஸ்காரன் யாராவது கண்ணில் படுகிறுனு என்று தேடலானேன்.

"மாற்றுங்கள். இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிவிட்டு அவன் வேகமாகக் கூட்டத்தில் நுழைந்து இஞ்சின் பக்கம் போனுன்.

பத்து நிமிஷங்கள் கழிந்தன. வண்டிகூடப் புறப்பட்டுவிட்டது. அவன் வரவில்லை.

வண்டி மெதுவாக 'ஸ்பீட்' எடுத்துக்கொண்டு ஸ்டேஷன் பிளாட்பாரத்தைத் தாண்டுகிற சமயம். ஒரு மின்சார விளக்கின் அடியில் அவன் நின்று கொண்டிருந்தான். என் கம்பார்ட்மென்ட் அவன் அருகில் வருகிறவரையில் காத்துக்கொண்டிருந்தான்.

"நீர்தான் கெட்டிக்காரர் என்று உமது நினைப்போ? போங்காணும்!" என்று அவன் அவசரமாகச் சொன்ன வார்த்தைகள் என் காதில் வந்து விழுந்தன.

அவன் சொன்னதில் தப்பென்ன? அவன்தான் கெட்டிக்காரன்.

சோடு மாறவேண்டுமா?

“அஹிம்சை வழி பிடிக்காவிட்டால், அதைப்பற்றி காங்கிரஸ்காரர்கள் கலந்து யோசித்து, அதை மாற்றவோ அல்லது அதை வைத்துக் கொள்ளவோ, முடிவு செய்ய வேண்டும்” என்று மகாத்மா காந்தி, நாட்டினருக்கு யோசனை கூறுகிறார்.

“சத்தியாக்கிரக வழியில், ஒரு சாண் ஏறினால், ஒரு சாண் சறுக்கி விழவேண்டியிருக்கிறது. அதனால், நிலைத்த, உருவான பயனைக்காண முடியவில்லை” என்று ஸ்ரீ எஸ். சீனிவாஸ அய்யங்கார் உள்ளிட்ட பல பெரியார்கள், சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள்.

சத்தியாக்கிரக வழி, சாண் ஏறி, சாண் சறுக்கி விழும் வழியா? அப்படியானால், 1919-ஆம் ஆண்டில், நமது நாடு இருந்த இடத்திலேயே, யாதொரு மாறுதலுமில்லாமல் இப்பவும் நின்றுகொண்டிருக்கிறதா? மாறுதல் இல்லாமல் இல்லை என்பதை யாவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். ஆனால், எதிர்பார்த்த அளவு, சத்தியாக்கிரக வழியினால், பயன் கிடைக்கவில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள்.

சாந்த வழியில்லாமல், பலாத்கார வழியைப் பின்பற்றி, தங்கள் அடிமைத்தனத்தைப் போக்க முயன்ற நாடுகள், விரைவிலே விடுதலை பெற்றனவா? பலாத்கார முறையைக் கையாண்ட அயர்லாந்து தேசம், சுமார் நூற்று இருபது வருஷங்களுக்கு அதிகமாக, விடுதலைப் போராட்டம் செய்திருக்கிறது.

இதாலி ஆஸ்திரியாவின் கீழ், அடிமைப்பட்டுக் கிடந்தகாலத்தில், சுமார் நூறு வருஷத்துக்குமேல், சுதந்திரத்துக்காகப் போராடியிருக்கிறது. தற்போது ஜெர்மனி என்று பொதுப்படையாக நாம் எல்லோரும் பேசுகிறோமே, அது ஒன்று சேர்வதற்கு சுமார் இருநூறு வருஷங்கள் பிடித்தன.

போலந்து நாடு, சுமார், நூறு வருஷங்களுக்குமேல், ...
விடுதலைப் போராட்டத்தை நடத்திவர, கடைசியில், 1914-ம் ஆண்டு, ஐரோப்பியப் போரின் மூலமாக, அதற்கு ஒருவாறு விமோசனம் ஏற்பட்டது. அதன் சுதந்திரம், இன்னும் நிலைத்த சங்கதியாக, கண்ணில் படவில்லை. "தராசு முனையில்" தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே, பலாத்கார வழியால், விரைவில் பயன் கிடைக்கும் என்று கனவு காண்பது தவறு. விரைவிலே, பலாத்கார வழியால் பயன் கிடைக்கும் என்று காரணம் சொல்லி, அஹிம்சை முறையை மாற்றப் பார்ப்பது தவறு என்பதை மேற்கூறிய ருசுக்கள், கண்டிப்பாய்க் காண்பிக்கும்.

உலகமுழுதும் பலாத்காரத்தை நேர்வழி என்று ஏற்றுக் கொண்டிருக்கும்பொழுது, இந்தியாவுக்கு மட்டும் தனிவழியாவது என்று சிலர் வாதாடலாம். இந்தியாவுக்குத் தனி வழி உண்டு என்பதில் சந்தேகமே இல்லை. இதைப்பற்றி, பின்னர், விரிவாகப் பேசுவோம்.

அயர்லாந்தில் "ஸின்பீன்" கட்சியை ஸ்தாபித்த ஆர்தர் கிரிபித் என்ற பெரியார், "நமக்குச் சிறந்தவழி அஹிம்சை வழி தான். அந்த அஹிம்சையை, ஒத்துழையாமை மூலமாக காண்பித்தால், பிரிட்டனது பிடிப்பினின்றும் அயர்லாந்து விடுதலை அடைந்துவிடும்" என்று அடிக்கடி, சுட்டிக் காண்பித்திருக்கிறார்.

பலாத்காரத்தில் தோய்ந்திருக்கும் ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் பலர், இப்பொழுது பலாத்காரத்தையும் போரையும் விரும்பவில்லை. பலாத்காரவழி, நாகரிகமில்லாதவழி, என்கிறார்கள். அநாகரிகவழி, என்பது ஒருபுறமிருக்கட்டும். பலாத்கார மார்க்கம் சிக்கனம் கொண்டவழியா என்று பார்த்தால், அது சிக்கனவழியல்ல.

உலக சரித்திரத்தைப் புரட்டிப்பார்க்கின், எத்தனை மகா யுத்தங்கள் இதுவரையிலும் நிகழ்ந்திருக்கின்றன என்பதை கணக்கெடுத்துவிடலாம். இந்தப் போர்களின் மூலமாக ஏற்பட்டிருக்கும் பொருள் நஷ்டம், உயிர் நஷ்டம், அறிவு நஷ்டம், நாகரிக நஷ்டம்—இவைகளைக் கணக்கெடுத்துப் பார்த்தால், பயங்கரமாயிருக்கும்.

ஒவ்வொரு அரசாங்கமும் எந்தக் கடமையைத் தனது முதல் கடமையாகக்கொண்டு, அரசியல் நிர்வாகத்தை நடத்தி வருகின்,

றது? பொருளையும் உயிரையும் காப்பாற்றிக் கொடுத்து, அமைதியை நிலைநாட்டுவதே தனது முதல் கடமை என்று சொல்லிக் கொள்ளும் அரசாங்கங்கள், போரின் மூலமாக, பொருளையும் உயிரையும் அமைதியையும் எவ்வளவு கேவலமாக மதிக்கின்றன என்பது வெட்டவெளிச்சமாகி வருகின்றது.

உயிரையும் பொருளையும் தியாகமாகக் கொடுத்துவிட்டால், அதிலே பெருமை உண்டு. உயிரையும் பொருளையும் நாசமாக்கி, மனிதர்களின் உள்ளத்தில் பயத்தை உண்டாக்கி, காரியத்தைச் சாதித்துக்கொள்ள நினைக்கும் பலாத்கார வழியில், சிக்கனமும் இல்லை, கௌரவமும் இல்லை. தகப்பன் தேடிவைத்த பொருளை, பொறுப்பில்லாமல் செலவு செய்யும் மைனர்களைப்போல, அஹிம்சை வழியை, கேவலமாகப் பேசுவதில் பயனில்லை.

காட்டில் வாழ்ந்த மனிதன், மதத்தின் மூலமாகவும் ஸயன்ஸ் மூலமாகவும், நாகரிகமடைந்து, முன்னேற்றம் அடைந்து வருகிறான் என்று சொல்லுவது உண்மையானால், பலாத்கார வழிக்கு அடுத்தபடியாக வரவேண்டியது அஹிம்சை வழிதானே? சேனையையும் போலீசையும் மனதில் எப்பொழுதும் தியானம் செய்து கொண்டு, கும்பிடும் பேர்வழிகள்தான் அஹிம்சை வழியைக் கேவலமாகப் பேசுவார்கள்.

ஹிரணியனைப்போல அகம்பாவம் படைத்தவர்கள், சாந்த சொரூபியான பிரகலாதன் மூலமாக, மாற்றமடையவேண்டும் அல்லது மறையவேண்டும். யோசிக்கும் திறமை இல்லாத சிலர், தனி மனிதன் செய்யவேண்டிய அத்தனை பொறுப்பான வேலைகளையும் போலீஸ்காரனிடமும் சிப்பாயினிடமும் கொடுத்துவிட வேண்டும் என்று நினைப்பதும் சொல்லுவதும் தவறாகும்.

மனிதன் அநாகரிக நிலையில் இருப்பதற்கு அடையாளத்தை எதிலே பார்க்கலாம்? மனிதன் கைக்கொண்டு வந்திருக்கும் பலாத்கார முறையிலே பார்க்கலாம். மனிதன் தன் கடமையைத் தானே செய்து, சகோதர மனிதனைத் திருத்தவேண்டியிருக்க, அவனை தண்டோபாயத்தால் பயமுறுத்திக் கீழ்ப்படியச் செய்ய, போலீஸ்காரனிடமும் சிப்பாயினிடமும் ஒப்படைப்பது நாகரிக மாகாது.

பலாத்கார வழியால், நிலைத்த சமாதானமும் உறவும் ஏற்பட்டதாக, சரித்திரத்தில், இதுவரையிலும் காணமுடியவில்லை. முடிந்த ஒரு போர், இன்னொரு போருக்கு விதையாக இருக்கிறதல்லாமல், சமாதானத்தை நிலைநாட்டுவதாக இல்லை.

"போரையே ஒழிக்கும் போர்" என்று 1914-ம் வருஷத்திய போருக்கு, அப்பொழுது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த ஸ்ரீ லாய்ட் ஜ்யார்ஜ் பெயர் கொடுத்து அழைத்தார். 1914-ம் வருஷப்போர், போரை ஒழித்ததா? அதற்குப் பின்னர், அபிஸினியைப் போர், ஸ்பானிய உள்நாட்டுப்போர், சீன—ஜப்பானியப் போர், இவைகள் நேரவில்லையா? இப்பொழுது, டான்ஸிக்கில், நாஜி உறுமலைப்பார்த்தால், பயங்கரமா யிருக்கிறது.

மோட்டார் அரசன் என்று பெயர் படைத்திருக்கும் ஹென்றிபோர்ட், கண்காட்சி யொன்றில் பேசுகையில், "ஏன் வெடிகுண்டுகளையும் துப்பாக்கிகளையும் காட்சிச் சாமான்களாக, எந்த நாடும், கண்காட்சிக்கு அனுப்புவதில்லை? காரணம் இது தான். இந்த சாமான்களை அனுப்புவதற்கு, அந்தந்த நாடுகள் வெட்கப்படுகின்றன" என்று சொல்லியிருக்கிறார்.

வெடி குண்டையும் விஷக்காற்றையும் துப்பாக்கியையும் உயர்ந்த குணம் கொண்ட மனிதர்கள், ஒருபொழுதும் பெருமையாகப் பேசமாட்டார்கள். மனிதனுடைய கீழ்த்தரமான ஆசைகளுக்குத்தான், இவைகள் அடையாளங்கள்.

உடையிலும் பேச்சிலும் எழுத்திலும் நாகரிக உயர்வை வேண்டும் ஐரோப்பியர்கள் போரைப் பெருமைப்படுத்திப் பேசுவதில், அர்த்தமே இல்லை. உலகத்தில், அதிகமாகச் சண்டை செய்து, அதன் கொடிய பயன்களை அனுபவித்துப் பார்த்தவர்கள் வெள்ளைக்காரர்கள். அவர்களில் உயர்ந்தவர்கள், அஹிம்சை வழிதான் சிறந்த வழி என்று சொல்லும்பொழுது, பலாத்காரத்தைப்பற்றி அதிகமாக அனுபவம் இல்லாத இந்தியர்கள், அதைப் புகழ்ந்து பேசுவதில் பொருள் இல்லை.

ஏழை பணத்தை பெருமையாகப் பேசுகிறான். ஆனால், செல்வத்தின் தன்மையை, அவன் அனுபவத்தின் மூலமாகப் பார்த்திருக்கிறானே? பணத்தால் எல்லாவற்றையும் சாதித்து விடலாம் என்று தரித்திர நிலையில் இருப்பவன், கனவு கண்டு கொண்டு இருக்கலாம். திரண்ட பணம் அவன் கைக்கு வந்த பின்னர்தான், தான் கண்ட கனவு எவ்வளவு தவறு என்பதை அவன் கண்டு கொள்ளுவான்.

இந்தியா சம்பந்தப்பட்ட வரையிலும், அஹிம்சை வழியை காந்தியைப் போன்ற ஒரு சிலர் நடத்தையில் அனுஷ்டித்து வந்திருக்கிறார்கள். மற்றவர்கள் வாயால் அஹிம்சையைப்பற்றி

பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள். அதனாலேதான், அஹிம்சையின் அற்புதத்தன்மை, பலருக்கு இன்னும் விளங்கவில்லை.

"காந்திக்கு சுயராஜ்யத்தில் இருக்கும் பக்தியைக் காட்டிலும் அஹிம்சையிலேதான் அதிகமான பக்தி. அவர் சுயராஜ்யத்துக்காகப் பாடுபடவில்லை. அஹிம்சையை உலகில் ஸ்தாபிப்பதற்காகத்தான் பாடுபடுவார்" என்று சிலர் குதர்க்கவாதம் செய்கிறார்கள்.

அஹிம்சை முறையைக்கண்டு வெளிப்படுத்தியவர் காந்தி. ஆனால், அஹிம்சை என்ற பொக்கிஷம், உலகத்தின் பொக்கிஷமல்லவா? ஆகவே, வாதத்தில், காந்தியை மறந்து விட்டு, அஹிம்சை முறையைப்பற்றி, ஆராயவேண்டும்.

உலக நிகழ்ச்சிகளையும் உலகத்தின் போக்கையும் கவனித்துப் பார்த்தால், இனி, உலகம் பலாத்காரத்தைக் கையாண்டால், அது அழிந்துபோகும் என்பதில் சந்தேகமில்லை. உலகம் நாகரிக முற்போக்கில் தடைபட்டுப் போகும் என்பதில் சந்தேகமே இல்லை. மனிதன் பாடுபட்டுத் தேடும் பொருளும் அறிவும் நாசமாய்ப் போவதைத் தவிர, வேறு பயனைக் காண முடியாது. ஆகவே, பலாத்கார வழிக்கு, இந்தியா 'வோட்' கொடுக்கக் கூடாது.

மேலும், இந்தியா, பல நூற்றாண்டுகளாக, பல சந்தர்ப்பங்களில், சாத்விக வழியை கையாண்டு, அதில் பதமும் பயிற்சியும் பெற்றிருக்கிறது. புத்தன் சாத்விகத்தின் திருவவதாரம். இந்தியாவின் கலைகளில், சாத்விகத்தைப் புகழ்ந்திருப்பதைக் காணலாம். இலக்கியத்திலும் அப்படியே. தினசரி நடையுடை பாவனைகளிலும், பெரியவர்கள், அஹிம்சையைத்தான் வற்புறுத்தியிருக்கிறார்கள். அஹிம்சைக்காற்றில்தான், இந்தியர்கள் வளர்ந்து வந்திருக்கிறார்கள். இந்தியாவின் அஸ்திவாரம், அஹிம்சையில்தான் கட்டப்பட்டிருக்கிறது. அதனாலேதான், காந்தி சொன்னதை, இந்தியா காது கொடுத்துக் கேட்டு, அதை அனுஷ்டானத்தில் கொண்டு வரப்பார்க்கிறது.

அவசரபுத்தியினால், அஹிம்சை வழியை ஆராயாமல் தள்ளப் பார்ப்பது தவறு. இந்தியாவின் வழி, உலகத்தின் எதிர்காலவழி அஹிம்சை வழிதான். ஆகவே, அஹிம்சை சோட்டிலிருந்து இந்தியா மாறவேண்டாம்.

“பகைவனுக் கருள்வாய்!”

ராஜ்கோட் போராட்டத்தை சத்தியாக்கிரகத்திற்கு ஒரு பரீட்சை பூமி என்று காந்திஜி அப்பொழுது அடிக்கடி சொன்னார். அது முடிந்ததுமே, அதாவது அந்தப் போரின் முதல் அங்கம் முடிந்தவுடனே காந்திஜி அதிலிருந்து தனக்கு ஒரு “புது ஒளி” தென்பட்டிருப்பதாகச் சொன்னார்.

அதன் பயனாக சமஸ்தானப் போராட்டத்தை நிறுத்தினார். எங்கெங்கே சமஸ்தான பிரஜைகள் காந்திஜியின் யோசனைப்படி போர் நடத்தினார்களோ, அங்கெல்லாம் திடீரென்று போராட்டம் நிறுத்தப்பட்டது.

அப்படிப் போராட்டத்தை நிறுத்துவதை ஒரு “புது வழி” என்று சொன்னார். போரை நிறுத்துவதே போராட்டத்தில் ஒரு “புது வழி” என்று அவர் சொன்னதில் ஆச்சரியமில்லை. உண்மையாகவே அது புது வழி தான் என்பதை யார் மறுக்க முடியும்?

“புது ஒளி” யென்றும், “புது வழி” யென்றும் காந்திஜி கூறியதைப் பலர் கேலி கூடச் செய்தார்கள். சுபாஷ் சந்திரபோஸே அதைக் கண்டித்தார். சமஸ்தானப் போராட்டம் அதனால் தடைப்பட்டு பலவீன மடைந்து விட்டது என்று பலர் கூச்சலிட்டார்கள். ஜவஹர்லால் நேருகூட காந்திஜியின் போக்கு தனக்கு அர்த்தமாகவில்லை என்றார்.

அவர் போக்கு அவருக்குத் தான் அர்த்தமாகும்—முதலில். பிறகு நாம் அவருடைய செய்கையை முன் செய்கைகளுடன் ஒத்துப் பார்த்தால்தான் அது நமக்கு விளங்கும். அது அவருடைய முன் செய்கைகளின் தொடர்புதான் என்பது துலங்கும்.

ஏனெனில், அவருடைய செய்கை ஒன்றுமே தனிச் செய்கை அல்ல; அந்தரத்தில் நிற்பதல்ல — தற்காலிகமான செய்கையல்ல. அவர் எது செய்தாலும் அது அவருடைய ஜீவியக் கொள்கையுடன் பிணைக்கப் பட்டுதான் இருக்கும். அவருடைய “புது ஒளி” கூட பழைய ஒளியின் புது உருவம்தான்—புது வழியே பழைய வழி தான்—சீர்ப்படுத்தியது.

பிரஜைகள் தங்கள் பலத்தின் அறிகுறியாக சமஸ்தானாதிபதிகளுக்குக் கொஞ்சம் பணிந்து அவர்களுக்கு “மூச்சுவிடும்” அவகாசம் கொடுக்கவேண்டியது அவசியம் என்று காந்திஜி ராஜ்கோட்டில் கண்டார். சமஸ்தானப் போரில் அந்த கட்டம் வந்துவிட்டது. பிரஜைகளுக்கு விழிப்பும் பலமும் ஆதரவும் சத்தியத்தின் ஒத்துழைப்பும் வந்துவிட்டது.

சமஸ்தானாதிபதிகள் பழைய நிலையிலேயே இருந்தார்கள். அவர்களும் சீர்திருந்துவதற்கு அவர்களுக்கு அவகாசம் தரவேண்டும். அதற்குப் பிறகும் சீர்திருந்தா விட்டால்தான், தர்ம யுத்தம் ஆரம்பிக்கவேண்டும்.

தணிந்து போவது சக்தியின்மையின் அடையாளம் அல்ல. காந்திஜி தணிந்தால் பலவீனத்தாலா தணிகிறார்? அதேபோல, சமஸ்தானப் பிரஜைகள் தங்கள் கோரிக்கைகளை மட்டுப்படுத்திக்கொண்டு சமரஸமூலம் சமஸ்தானாபதிகளை அணுகவேண்டும் என்று காந்திஜிசொல்லும்போது, காந்திஜியே ஒவ்வொரு பலத்த போராட்டத்திற்கு முன்பு பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு "முழங்கால் வணங்கி" நல்ல வார்த்தை சொன்னது யாருக்கு நினைவு வாராமல் இருக்கும்?

"பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே!" என்று பாரதி பாடினார். சத்தியாக்கிரகியும் அதே மாதிரிதான் எப்பொழுதும் தன் நெஞ்சுக்குச் சொல்லிக்கொள்ளுகிறான்.

காந்திஜி சமஸ்தானப் பிரஜைகளின் இயக்கத்தை நிறுத்திவிட்டுச் சும்மா இருந்து விடவில்லை. சமஸ்தானாபதிகளை சமரஸபுத்தியோடு அணுகி சில சாத்தியமான தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளும்படி பிரஜைகளுக்கு உபதேசிக்கிறார். சமஸ்தானாதிபதிகளையும் தாராள புத்தியுடன் பிரஜைகளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்கிறார். இன்னது செய்ய வேண்டும் என்றுகூடச் சொல்லுகிறார்.

சமஸ்தானங்களில் தற்காலம் தலைவிரித்தாடும் துராக்கிரகம் ஒழிந்து, முதலில் சட்டத்தின் கட்டுப்பாடு இருதாரத்தாருக்கும் ஏற்படட்டும் என்பது காந்திஜியின் அபிப்பிராயம். சத்தியாக்கிரகத்தைக்கொண்டே துராக்கிரகத்தைக் கைமுறித்து விடமுடியாது என்பதல்ல; அதற்குத் தேவையான பலம், தபஸ், ஜனங்களிடத்தில் இல்லை; எனவே, ஓரளவு சட்டத்தின் உதவியும் சத்தியாக்கிரகத்திற்குப் பூர்வ பீடிகையாக இருக்கவேண்டும் என்பது காந்திஜியின் கருத்து.

இதுதான் காந்திஜி கடைசியாக ராஜ்கோட்டில் கண்ட "புது ஒளி"யோ என்று நமக்குத் தோன்றுகிறது. ராஜ்கோட்டில் காந்திஜி தானே தனிமுறையில் தலையிட்டார்; அவருடைய தபஸ் சில்லறையாக அங்கே விரயமாயிற்று. அதற்குகந்த அளவு பலன் ஏற்படவில்லை. எனவே, ஜன சமூகத்தின் சத்தியாக்கிரக பலத்திற்கு, அது பரிபூரணமாக வேலை செய்வதற்கு, ஓரளவு நீதி நியதியின் பூமி தேவை என்று காந்திஜி கருதுகிறார் என்று நினைக்கிறோம்.

அன்று கவி ரவீந்திரர் சொன்னது போல அவர் போன வழி போவோம். அவர் வகுத்த பாதையில் நாம் கொஞ்ச தூரம் போய்விட்டோம். இனி திரும்புவது பிசகு என்பதுமட்டுமல்ல; திரும்பவே கூடாது. ஏனென்றால், வேறு பாதை இல்லை.

சட்டமறுப்புக்குக் கட்டியமா?

சென்ற செவ்வாய்க்கிழமை யன்று, பம்பாய் நகரத்தில் பூரண மதுவிலக்கு தேவி, பொலிவுடன் தோன்றிவிட்டாள். மது விலக்கு ஆரம்பமாகிவிட்டது என்ற நல்ல செய்தியைக் கூற — கூவ — அந்தச் செய்தியைக் கேட்க—சுமார் மூன்று லட்சம் ஜனங்கள் கூட்டம் கூடினர்களாம். அதாவது பம்பாய் நகரில்வாழும் மக்களில் மூன்றிலொன்று பேர்கள் கூடிவிட்டார்களாமே!

மதுவிலக்குக்கு எதிர்ப்பு இருக்கிறது என்றும், அதை அனேகர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் ஒரு புகார் சொல்லப்பட்டது. அந்தப் புகார் வீண் புரளி என்பது, இந்தக்கூட்டத்தின் குத்து மதிப்புத் தொகையிலிருந்து தெளிவாகின்றது.

மூன்று லட்சம் மக்களின் பேராதரவைக்கொண்ட இயக்கம், ஏற்பாடு தோல்வியடைந்துவிடும் என்று சொன்னுல், இந்த உலகத்தில் மனிதர்கள் குடியிருக்கத் தேவையில்லை. சந்திர மண்டலத்துக்குக் குடியேறி விடலாம்.

மேற்சொன்ன கூட்டத்தில், சர்தார் படேல் தலைமை வகித்துப் பேசுகையில், "மது விலக்குப் பிரச்னை ஒன்றினுலேயே, காங்கிரஸ் வாழும் அல்லது சாகும்" என்று பந்தயங் கூறியதைப்போல பேசியிருக்கிறார்.

காங்கிரஸ் ஏன் சாகும்? காங்கிரஸ், ஒருக்கால் தற்கொலை செய்துகொண்டாலும் செய்து கொள்ளலாம். ஆனுல், காங்கிரஸைக் கொன்று, சாக அடிப்பதற்கான வல்லமை படைத்த ஸ்தாபனம், இந்த உலகில், இப்பொழுது இல்லை. காங்கிரஸை யாரும் அழிக்க முடியாது. இந்தியர்கள் அழிந்துபோனுல்தான், காங்கிரசுக்கும் மரணம் ஏற்படலாம்.

சில இங்கிலீஷ் படித்த நண்பர்கள், மதுவிலக்கைப்பற்றிக் கேலி செய்வது எல்லாரும் அறிந்த விஷயம். மதுவிலக்கு சுயராஜ்ய சாதனமாவது என்று அவர்கள் புரளி செய்கிறார்கள். அவர்களுக்கு, சுயராஜ்யம் என்றால் என்ன என்று தெரியவில்லையோ என்னவோ?

ஜர்மனியில் நடைபெறும் அரசியலை சுயஆட்சி என்று பார்வைக்கு சொல்லிவிடலாம். அது உண்மையான ஜனநாயகத்தைத்

தழுவிய சுய ஆட்சியா? ஜர்மனியிலும் இதாலியிலும் அரசியல், ஒருக்கால், திறமையாக நடைபெற்றாலும் நடைபெறலாம். ஆனால், அந்த அரசியல்கள் ஜன நாயகத்துக்கு இசைந்தவைகள் அல்ல என்று அரசியல் நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

இதாலியில் நடைபெறும் சுய ஆட்சியைப்போல, இந்தியாவுக்கும் வேண்டுமா? சுய ஆட்சி என்றால் அன்னியர் வசத்திலிருந்து விடுதலை என்று இவர்கள் அர்த்தம் செய்து கொள்ளுவார்களாகில், இந்த நண்பர்கள் இங்கிலீஷ் பாஷை மோகத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டிருக்கலாம்.

இங்கிலீஷ் படித்த இந்தியர்கள் தங்களை உயர்ந்த கூட்டம் என்றும், தனிக்கூட்டம் என்றும் எண்ணிக்கொண்டு திண்டாடுவதால், அவர்களுக்கு பாமர மக்கள் என்ற பொது ஜனங்களைப்பற்றிய வாழ்க்கையில் சிரத்தையே இருப்பதில்லை. ஆகவே, அதைப்பற்றி, அவர்கள் சிந்தனை செய்வதுமில்லை.

ஒரு ரூபாய் பணத்தை மிகக் கேவலமாக மதிக்கும் இங்கிலீஷ் படித்த நண்பர்கள், இதே ஒரு ரூபாயை ஏழைத் தொழிலாளியும் அவன் குடும்பத்தாரும் எப்படிக் கருதுகிறார்கள் என்பதைப் பற்றி யோசித்ததுண்டா? அல்லது விசாரித்துப் பார்த்ததுண்டா?

தொழிலாளர்களுக்கு அதிகமாகக் கூலிகொடுக்க வேண்டும் என்று ஆலை முதலாளிகளுக்கும் மற்றும் பெரியதனக்காரர்களுக்கும் சொன்னால், அவர்கள் லேசிலே, சம்பளத்தை உயர்த்துகிறார்களா? அவர்கள் தங்கள் தங்கள் நஷ்டத்தை, கணக்கு மூலமாகக் காண்பிக்கத் தயாராயிருக்கிறார்கள்.

இந்த நிலைமையில், ஏழை எளியவர்களுக்கு, அவர்கள் சம்பாதிக்கும் பணம் கெட்ட வழியில் செலவாகிப்போகாமல் தடுத்து, அதைக் குடும்பத்துக்கு உபயோகமாகும்படி செய்தால், பெரிய புண்ணியம் அல்லவா? இந்த புண்ணியமான தொண்டை, மேற்கொண்டவர்களை, இங்கிலீஷ் படித்த நண்பர்கள் நையாண்டி செய்வதும் மதுவிலக்கு இயக்கத்தைக் கேலி செய்வதும் மிகவும் பரிதாபகரமான வேலையாகும்.

எல்லாரும் ஆகாயக்கோட்டை பிடிப்பதற்காக யோசனை செய்கிறாப்போலப் பேசுகிறார்களே, மண் சம்பந்தமான யோசனைகள் அற்பமானவைகளா? குடியினால் நேரும் ஆபத்துக்களையும் குற்றங்களையும் மேல் நாட்டில், கணக்கு எடுத்து, புள்ளி விபர வரலாறுகளுடன் வைத்திருக்கிறார்கள்.

இந்த நாட்டில், இப்பவும், யாரையும் "குடியன்" என்று சொன்னால், அவன் தலை குனிந்து கொண்டு வெட்கப்படுகிறான் அல்

லது ஆத்திரப்படுகிருன். குடிப்பது தவறு என்று அவன் உணர்கிருன் என்று தானே, இதைக் கொள்ளவேண்டும் ?

ஆகவே, இந்த நாட்டில், குடியை ஒழிப்பது மிகவும் லேசான வேலே என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். குடி என்பதே, நடுவில் வந்த பழக்கம். அதை ஒழித்து, நாடுமுழுவதும் விவேகத்தையும் நல்ல பழக்கத்தையும் பரப்பினுல், நம் நாடு உயர்ந்து போகும். இது உறுதி. நல்லவன் தான் உயர்ந்தவன். உயர்ந்தவன் என்ருல் நல்லவன் என்றுதான் அருத்தம்

ஜனநாயகத்துக்கும் போதை வஸ்துக்கும் வெகுதூரம். ஒவ்வொருவனும் தனது பொறுப்பை, அறிவினுல் அறிந்துகொள்ள வேண்டும். அந்த அறிவை, போதையினுல் கெடுத்துக்கொண்டு, பொறுப்பை இழந்து விடலாமோ ? ஆகவே, மது விலக்கு, மனிதனே உயர்த்தும் சாதனங்களில் ஒன்று.

மது விலக்கை வெற்றிபெறச் செய்யவேண்டுமானுல், அதற்குப் பணம் வேண்டும். அந்தப் பணத்துக்காக, மத்திய அரசாங்கத்தோடு (தில்லியோடு) மல்யுத்தம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடும். மத்திய அரசாங்கம் வருமான வரி போன்றதை மாகாணத்துக்கு ஒதுக்கிக்கொடுத்து விட்டாலும் சரி, அல்லது ராணுவச் செலவைக் குறைத்து, அந்தப்பணத்தைக் கொடுத்தாலும் சரி, மது விலக்கு நிறைவேறிவிடும்.

மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கங்களின் விண்ணப்பத்துக்கு இணங்கவில்லேயாயின், சத்தியாக்கிரக மட்டமறுப்பு தொடங்க நேரிடும் என்று சர்தார் வல்லபாய் படேல் எச்சரிக்கை கொடுத்திருக்கிருர். ஆகவே மது விலக்கு, சுயராஜ்ய சாதனமல்லவா ?

உப்பு சத்தியாக்கிரக மூலமாய், மாகாண சுய ஆட்சி வந்தது. மதுவிலக்கு சத்தியாக்கிரகம் நேர்ந்தால், ஏன் பூரண சுயராஜ்யம் கிடைக்காது ? போர் என்பதும் போராட்டம் என்பதும் போர்க்களத்தில்தான் இருக்கவேண்டும் என்றும், அதற்குகுண்டு துப்பாக்கி வேண்டுமென்றும் மயங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு மது விலக்கு சத்தியாக்கிரகப் போர் கண்ணில் படாமலிருக்கலாம்.

ஆனுல், பொது ஜனங்களின் உள்ளத்தை, கண்ணுடிபோல கண்டறிந்து, அதற்காக உழைக்கும் காந்தியை யாரும் ஏய்க்கமுடியாது, பயமுறுத்தவும் முடியாது. உப்பு, மதுவிலக்கு முதலிய குடியானவன் ஆயுதத்தால், சுயராஜ்யம் கொண்டுவரும் வித்தகனல்லவா அவர் ?

———

ஜீவ நதி

நதி எங்கே உற்பத்தியாகிறது என்று வாத்தியார் கேட்டால், மலையிலே என்று உடனே, பையன் பதில் சொல்லுவான். மலையிலே பிறப்பது நதி. என்றாலும், மலையைப்போல, இருக்கிறதா நதி? தாயைப் பார்த்து மகளைக் கொள் என்ற பழமொழி, மலை—நதி விஷயத்தில் பொய் என்று தோன்றுகிறது.

குழந்தைக்குப் பெற்றோரிடம் பிரியம் உண்டு என்பார்கள். ஆனால், இந்த நதியைப்பாருங்கள். நதி மலையில் பிறக்கிறதுதான் தாமதம். அது தாயோடு இருக்கச் சம்மதிக்காமல், வேகமாய்ப் பாய்ந்து ஓடி, கடலோடு போய்க் கலந்துவிடுகிறது.

ஜீவநதியின் பெருமையை வர்ணிப்பது முடியாத காரியம். தாயின் தன்மையை, யாராவது, மனதுக்குத் திருப்தி வரும்படியாக, இதுவரையிலும் வர்ணித்திருக்கிறார்களா? தாயைப்போலவே, ஜீவநதியும். மலையிலே பிறந்த நதி, கடலுக்கு ஓட்ட ஓட்டமாய் ஓடினாலும், நடுவழியில், எத்தகைய தியாகத்தைச் செய்துகொண்டே போகிறது!

வரண்ட பூமியா? இதோ நான் வந்து உன்னைக்குளிரச் செய்கிறேன் என்கிறது நதி. வற்றின கிணறா? ஆகா! ஏங்க வேண்டாம். இதோ வந்துவிட்டேனே உன் ஊற்றைப் பெருக்க என்று நதி, அபயம் அளிக்கிறது. உலர்ந்து போகிற மரமா? "மரமே! என்வருகைக்காகக் காத்துக் காத்து, நீ கண்ணீர் விட்டு, உலந்து போய்விட்டாய். இனி மேல், வாடி வதங்கவேண்டாம்" என்று நதி சொல்லுகிறது.

வெள்ளத்தைக் கண்டால், பறக்கிற பட்சிகளுக்கு ஆனந்தம். கால் நடைகளுக்கு ஆவேசம். சிறுவர்களுக்கு குதூகலம். குடியானவனுக்கு உயிர். ஓடக்காரனுக்கு வரும்படி. ஏக்கமடைந்த மாந்தர்களுக்கு, விடுதலைச் சாதனம். பாய் விரித்திருப்பதைப் போல ஓடும் நீரைக்கண்டு, கலைஞன் பரவசப் படுகிறான்.

நீர்த்துளிகளுக்குள் என்ன ஒற்றுமை? என்ன கட்டுப்பாடு? என்ன வாஞ்சை? முன்னே செல்லும் துளியை, தள்ளிக் கொண்டு பின்னே வரும் துளி, முன்னே போவதில்லை. எறும்புச் சாரியைக் காட்டிலும் அழகாக ஒட்டிக்கொண்டு ஓடும் நீர்த்துளிகளைக் கண்டால், என்ன இன்பம் உண்டாகின்றது!

அலுப்பு சலிப்பில்லாமல், வெள்ளக்காலத்தில், ஜீவநதி ஓடி, உலகத்தைக் காப்பாற்றுகின்றது. வரண்ட காலத்திலே, மணலைத் தோண்டினால், நீர், ஊற்று எடுக்கிறது. பெருந்தன்மை படைத்தவர்கள், எந்தக் காலத்திலும், எந்த வகையாலும் பிறருக்கு உபகாரம் ஒன்றையே, கருத்தில் கொண்டிருப்பார்கள். ஜீவநதியே! உன்னைப்போல, நான் ஜன்மம் எடுக்கக்கூடாதா?

தகப்பனர் கணபதி, ஆபீசிலிருந்து சீக்கிரமாக வீட்டுக்கு வந்து விட்டார். ஆனல், அவர் இன்றைக்கு ஒண்டியாக வரவில்லை. அவருடன் கூட இன்னெருவர் வந்திருந்தார்.

குழந்தைகள் பார்வதியும் பரமசிவனும், புதிதாக வந்திருப் பவரை, உற்று உற்றுப் பார்த்தார்கள். இதற்குள், தாயார் காமாட்சி அம்மாள், வீட்டின் கூடத்துக்கு வந்து சேர்ந்தாள்.

அவளுக்கும் வந்தவர் யார் என்று தெரிந்து கொள்ளவேண்டும் என்று ஆசை. ஆனல், வாய் திறக்கலாமா ? அன்னியர்கள் வந்திருக் கும்பொழுது, குடும்ப ஸ்திரீ வாய் திறக்கக்கூடாது என்று சம்பிர தாயமாயிற்றே ?

குழந்தைகளோ அப்பாவைப் பார்க்கிருர்கள். வந்தவரைப் பார்க்கிருர்கள். தாயாரைப் பார்க்கிருர்கள். தரையைப் பார்க்கிருர் கள். கனைத்துக் கொள்ளுகிருர்கள். கனைத்தது போதாது போல, பரமசிவன் இருமுகின்ருன்.

கணபதி இதையெல்லாம் பார்த்துச் சிரித்தார். வந்தவருடைய முகம் மிகவும் பிரசன்னமாயிருந்தது. "இவர்கள் தாஞ அவர்கள்" என்று தன்னையே கேட்டுக்கொண்டு, சமாதானம் செய்து கொண்டது போலத் தோன்றிற்று.

இவ்வளவு மௌனத்தில், பார்வதிக்கு இருப்புக் கொள்ளவில்லை. "அப்பா! எத்தனை நாளாக ஏய்த்துக் கொண்டு வரக! யாரோ காந்தி சிஷ்யர் ஏதோ சொன்னர் இன்னு சொன்னகளே! அதை இன்னிக்கு நீங்கள் கட்டாயம் சொல்லணும்" என்று பார்வதி, மிக்க குறைவுடன் கேட்டாள்.

"இவர் தான் அவர்" என்ருர் கணபதி. குழந்தைகள் பர பரப்படைந்தார்கள். தாழ்வாரத்துக் கோடியில் நின்று கொண்டிருந்த காமாட்சி அம்மாள், திடீரென்று, ஏதோ ஆபத்து வந்து விட்டதைப் போல, சமையலறைக்குப் போனள்.

"குழந்தைகளா! இந்த மாமாவை நமஸ்காரம் பண்ணுங்கள்" என்ருர் கணபதி. குழந்தைகளின் நமஸ்காரங்களும் வந்தவரின் ஆசீர்வாதமும் முடிந்து விட்டன.

[illegible] நீங்களே அவரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்றார் கணபதி.

"அவர் சொல்லுவதை, அம்மாவும் கேட்க வேண்டாமா" என்று பார்வதி ஆவலுடன் கேட்டாள்.

"அம்மா தான், தாழ்வாரத்திலே கூட நிற்கப்படாது என்று சமையலறைக்குப் போய் விட்டாளே!"

"இல்லே! அப்பா! நான் போய்க் கூப்பிட்டுக் கொண்டு வரேன்" என்றான் பரமசிவன்.

காமாட்சி அம்மாளை அழைத்துக்கொண்டு பரமசிவன் தாழ்வாரத்துக்கு வந்தான். எல்லாரும் உட்கார்ந்து கொண்டார்கள். காமாட்சி அம்மாள் மட்டும் நின்றுகொண்டிருந்தாள்.

"காந்தி ராஜ்யத்திலே, பெண்களுக்குத்தான் செல்வாக்கு. பெண்கள் நிற்கப்படாது" என்று வந்த மாமா சிரித்துக் கொண்டு சொன்னார். காமாட்சி அம்மாள், கூடுமான வரையில் தைரியமான ஸ்திரீ.

"நீங்கள், மாமா! என்னமோ சொன்னீர்கள் என்று இந்தக் குழந்தைகளின் அப்பா, ரொம்ப நாளாச் சொல்லிண்டுவரா" என்று காமாட்சியம்மாள் சொன்னாள்.

"விசேஷமாய் ஒண்ணுமில்லே அம்மா! நமக்கெல்லாம் குழந்தை வளர்க்கிறதற்கு தெரியவே இல்லை என்று நான் ஒருநாள் கணபதியிடம் சொன்னேன். அதை அவர் விடாமல் பிடித்துக் கொண்டுவிட்டார் என்று தோன்றுகிறது."

காமாட்சி :—குழந்தைகள் விளையாட்டுத்தனமாக, எத்தனையோ தப்பான காரியங்கள் செய்துவிடுகின்றன. அவாளை எப்படித் திருத்தறது? நாம, அவாளை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி, அங்கே திருத்துவாளான்னா, அங்கேயும் வழியைக் காணோம். என்ன செய்கிறது?

மாமா :—வாஸ்தவம்தான். பள்ளிக்கூடத்திலே, அவர்கள் என்ன செய்ய முடியும்? விஷமம், வாத்தியார் முன்னாலே, குழந்தைகள் செய்வார்களா? இப்போதிருக்கிற பள்ளிக்கூடத்திலே, அவாளாலே பாடம் ஒண்ணுதான் சொல்லிக் கொடுக்க முடியும்.

பார்வதி :—பாட்டு சொல்லிக் கொடுக்கிறா—மாமா!

மாமா :—ஆமாம்! எனக்குத் தெரியும். நரி, திராட்சைப் பழம் புளிக்கும் இன்னு சொன்ன பாட்டுத்தானே?

பார்வதி :—அந்தப் பாட்டு மாத்திரம் இல்லே! "ம்யூஸிக்" கூட சொல்லித்தரா.

மாமா :—அப்படியா? என்ன பாட்டு?

பரமசிவன் :—சரிகமபா, பாட்டு!

கணபதி :—குறுக்கே பேசப்படாது, தெரியுமா?

பரமசிவன் :—இன்ன பாட்டு சொல்லித்தரா இன்னுகூடச் சொல்லப் படாதா?

மாமா :—நன்னு சொல்லலாம். ஆனல், ரொம்ப கேலியாச் சொல்லப் படாது. பள்ளிக்கூடம்னு, மரியாதை வேண்டாமோ? பக்தி யோடே வாசித்தால்தான், படிப்பு வரும்.

பரமசிவன் :—பள்ளிக்கூடத்திலே, ஒரு மண்ணும் சொல்லிக்கொடுக் கிறதில்லே. வாத்தியார் தூங்காததுதான் மிச்சம். பொடி போட் டுக்கிறதுதான் மிச்சம்.

கணபதி :—என்னடா குறும்பாப் பேசறே!

பரமசிவன் :—காந்தி தாத்தா, பொய் சொல்லப்படாது இன்னு சொல்ரா இன்னு நீங்க சொல்லல்லே!

கணபதி :—ஆமாம்!

பரமசிவன் :—நான் வாத்தியாரைப்பற்றி, நிஜத்தைச் சொல்றேன்.

மாமா திகைத்துப் போனர். கணபதிக்கு, முகத்திலே முத்து முத்தாய் வியர்வை. காமாட்சி அம்மாளுக்கு, ஆனந்தம். பார்வதிக்கு வருத்தம். பரமசிவனுக்கு கொண்டாட்டம்.

மாமா :—ஏண்டாப்பா! நீ பள்ளிக்கூடத்திலே என்னதான் படிக் கிறே!

பரமசிவன் :—பையன்களோடே சண்டை போடறதுதான்.

மாமா :—அப்படியா! வேறே, ஒண்ணும் கிடையாது!

பரமசிவன் :—வாத்தியார் பாடம் சொல்லிக் கொடுப்பார். எங்களுக்கு அது பிடிக்கிறதே இல்லே.

கணபதி :—ஏன்?

பரமசிவன் :—அவாளுக்கு, குழந்தைகளுக்குச் சொல்லித்தரத் தெரி யல்லே. பாடத்தை கதைமாதிரி சொன்னு இன்னு கேக்கலாம்.

மாமா :—கணக்கை, எப்படி கதைமாதிரி சொல்லமுடியும் அப்பா?

பரமசிவன் :—வாத்தியார் மனசு வைச்சால், எல்லாம் முடியும் மாமா! அவாளுக்கு சொல்லித்தரத்தெரியாமே, எங்களைக் கோவிச்சுக் கறா.

பார்வதி :—எங்க வாத்தியார் அம்மா, அழகாச் சொல்லித்தறா. பொம்மனாட்டிகளுக்குத்தான், குழந்தைக்கு படிப்புச் சொல்லித் தரத் தெரியும்.

மாமா :—அம்மா! கேட்டுக் கொள்ளுங்கள். தாயைக் காட்டிலும் குழந்தைகளுக்கு உயர்ந்த வாத்தியார் கிடையாது. வீட்டுப் பள்ளிக்கூடம்தான் மிகவும் சிலாக்கியமானது.

காமாட்சி :—எப்படி?

மாமா :—நாளைக்குச் சொல்லுகிறேன்.

குழந்தைகள் மாமாவைக் கட்டிக்கொண்டார்கள். மாமாவுக்கு பிரம்மானந்தம்.

கலைஞான வரலாறு

(முன் கதைச் சுருக்கம்.)

[கருப்பூர் என்னும் கிராமத்தில் சிவஞான தேசிகன் என்னும் பிராமணன் தன் மனைவியோடு இல்லறம் நடத்திவர, தவத்தன்மையால் தக்க காலத்தில் ஓர் மகனைப் பெற்றனர். அம்மகனுக்கு சுவாமிநாதன் என்னும் பெயரிட்டு, கல்வி பயிற்பித்து அன்போடு வளர்த்து வந்தனர். சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தோங்கிய அம்மறைமகன், பத்தொன்பதாம் வயதில் ஞான மேலீட்டினல், தாய் தந்தையர் செய்வித்த மண ஏற்பாடுகளை வெறுத்து, பெற்றோர் அறியாமல் முனிவர்க்கிடமான வனத்தையடைந்து, அங்கொரு முனிவரையடுத்து, ஞான உபதேசம் உபதேசித்தருளும்படி அவரை வேண்டினன். முதலில் முனிவர் அவனைத் தடுத்து இல்லறத்தினின்றும் நற்கதி அடைவதற்கு மார்க்கமுண்டு என பல உரைத்தும், துறவறத்தையே அம்மறைமகன் வேண்ட, முனிவரும் ஞானம் உதயமாகும் சில உபதேசங்கள் செய்து தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்ருர். இது இப்படியிருக்க, மகன் வரவைக் காணுத தாய் தந்தையர்கள், தவித்துத் துயரில் ஆழ்ந்து, தமது வீட்டுக்கோயிலில் உள்ள விக்ரகவடிவமான உமாதேவியாரின் பாதங்களில் வீழ்ந்து துதித்துப் பிரலாபித்துப் பின்னும் சில புகல்வராயினர்.

சிவஞான தேசிகரும் அவரது மனைவியாரும், தங்கள் மகனது பிரிவாற்ருமல் சோகமுற்றனர். எனினும் ஒருவாறு தேறி, தங்கள் இல்லத்தை விடுத்து, மகனைத் தேடி, வனவழி சென்றனர். வனவழியில் நெடுந்தூரத்தில், ஆசிரமம் ஒன்று அவர்களுக்குத் தென்படவே, அங்கு சென்றனர். அந்த ஆசிரமத்தில் எழுந்தருளியிருந்த முனிபுங்கவர், வந்தடைந்த சதிபதிகளின் மனதைத் தேற்றுவதற்காக, முனிவர் பெருமானுன அகஸ்திய மாமுனி உபதேசம் செய்ததை, தேசிகருக்கும் அவரது மனைவியாருக்கும் எடுத்துச் சொல்ல விருப்பங் கொண்டு, சிலவற்றைச் சொல்லுகின்ருர். சுவாமிநாதனுக்கு உபதேசம் செய்வதிலிருந்து, இன்று கதை.]

"குழந்தாய்! ஆத்ம ஞானம் பிரகாசிப்பதற்கு மனத்தால் உண்டாகும் "நான்" என்னும் அகங்காரம் எழா வண்ணம், அதற்கான விசாரணையில் சதாகாலமும் ஈடுபட்டிருத்தல் வேண்டும். "நான்" என்னும் கர்வம் நீங்கிய விடத்தில்தான், "அறிவு" என்னும் சொரூப ஞானம் பிரகாசித்தோங்கும். அறிவு என்னும் பொருள் நாளுக்கு

நாள் பிரகாசித்தோங்க, "நான்" என்னும் மனம் நாளுக்கு நாள் குறைய, ஞான உதயம் ஏற்படுகிறது.

ஞானம் நாளுக்கு நாள் பிரகாசித்துவர, சச்சிதானந்த சொரூப தரிசனம் கிடைக்க ஏதுவாகும். மேலும் மனத்தில்தான் ஜகமாயை தோன்றுகிறது. மனம் மறைந்தால், ஜகமாயையும் மறைகின்றது. ஜக மாயை மறைந்தால், சச்சிதானந்த சொரூப தரிசனம் எளிதில் கிடைக்கும்.

மனம் என்பது ஆத்ம சொரூபத்தில் உள்ள ஓர் அதிசயமான சக்தி. அது சகல நினைவுகளையும் உண்டாக்குகிறது. அம்மனத்தால் உண்டாகும் நினைவு நீங்கின போது, மனம் என்னும் பொருளை காண்பதில்லை. ஆதலின் நினைவுதான் மனத்தின் சொரூபம். நினைவுகளால்தான் ஜகத்திலுள்ள சகல தோற்றமும் தோன்றுகிறது. இம்மனம் அடங்கினால், இந்த ஜகத்திலுள்ள சகல தோற்றமும் மறைந்துவிடும்.

எனவே மனமென்னும் அம்மாயையை, அதற்கு இருப்பிடமான ஹிருதயத்தில் அடங்கச் செய்தல் வேண்டும். அவ்விருதயத்தில் மனம் எழா வண்ணம் தங்குதற்கான "நான் யார்" என்னும் விசாரணையிலேயே இருத்தல் வேண்டும். அவ்விசாரணை ஒன்றினால்தான் மனமடங்கும். அவ்விசாரணையில் பழகுவது எவ்விதமெனில் மனத்தினால் உண்டான ஜகத்தாசையால் பல வெண்ணங்கள் தோன்றும் போதெல்லாம், அவைகளை முடித்து ஆளுதற்கு உடன் பிரயாசைப் படாமல், "இவ்வெண்ணங்கள் யாருக்குண்டானவை? இதனால் தரும் முடிவான பலன்தான் என்ன?" என்று யோசிக்கத் தொடங்கும் போது அறிவு வெளிப்படுகிறது.

அவ்வறிவு வெளிப்படுவதை யறிந்த மனம் பயந்து தனது இருப்பிடத்திற்குத் திரும்புகிறது. இம்மனமென்னும் மாயை திரும்ப; அறிவென்னும் ஞானம் மேலிட்டு, அதன் முடிவான பலனை நன்கு தெளிவுபடுத்துகிறது. (இதுதான் பகுத்தறிவு எனப்படுவது) இவ்வறிவு ஓங்க "நான்" என்னும் அகங்காரம் அடங்க, "தான்" என்னும் பொருள் "நீ" யாவாய். ஆதலின் "நான் யார்" என்ற விசாரணையிலேயே "தான்" என்ற முடிவு தோன்றுகிறது."

இது இப்படி யிருக்க, சுவாமிநாதனின் தாய்தந்தையர்களுக்கு மற்றோர் முனிவர் உபதேசித்து வரும் தன்மையைச் சில புகல்வோம்.

முனிவர் உரைக்கின்றார் :—"தேசிகரே! உமாதேவியார் செயற்கையாய் உற்பவித்த தாமரை மலரின்மீது எழுந்தருளி, தவஞ்செய்து நின்ற மலைமன்னனுக்கு அனுக்கிரகித்து, பின்னும் அத்தாமரை மலரின்மீது மூன்று வயது குழந்தையாய் அவதரித்தனர். தேவியார் குழந்தைப் பருவத்தையடைந்து மலரின்மீது விளையாடுதலை தேவர்கள் கண்டு அரிய மலர்களை வாரி இறைத்தனர்.

"சூரியனும் தன் தீக்ஷண்யம் பொருந்திய கிரணங்களை மறைத்து நின்றனன். வாயுதேவனும் அரிய தென்றற் காற்றை வீசியவண்ணமிருந்தனன். தடாகத்திலுள்ள கங்கையும் அலைவீசி பாராட்டினள். இக்காலத்தில் தேவியார் அசைந்தழுந் தன்மையை இங்கு எவரால் சொல்ல வியலும்? வேதங்களும் போற்ற அண்டங்களும் அதிர, பிரணவ தொனியுடன் ஆ! வென்று அழுதனர்.

"உமாதேவியாரின் வேத வாக்கினின்று எழுந்த தொனியால் அண்டங்களும் நடுங்கின வெனில், மலை மன்னனின் தவம் கலையாதிருக்குமோ? மலையரசனும் தனது தவங்கலைந்து தடாகத்தை நோக்கினர். தடாகத்தில் இதுவரைக் கண்டிராத தாமரை மலரின் மீது, கோடி சூரியப் பிரகாசமாய் ஓர் குழந்தை விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டார்.

"ஆச்சரியமுற்றார். ஓடோடியும் வந்தார். தடாகத்திலிறங்கினர். பின்னும் குழந்தையை உற்று நோக்கினர். ஆனந்த பரவசத்திலாழ்ந்தார். சுற்றுமுற்றும் பார்த்தார். திடங்கொண்டார். இடையில் ஓர் நினைவும் தோன்றியது. ஓ! நமது தவத்திற்கு இரக்கங்கொண்டு, பரமேஸ்வரரும் பரமேஸ்வரியும் கிருபை கூர்ந்து, இவ்வரிய பெண் குழந்தையை நமக்கீந்தருளினர் போலும், என்று நினைத்து குழந்தையை வாரியெடுத்து முத்தமிட்டு உச்சிமோந்து ஆனந்தக் கண்ணீர் பெருக, தேவியாரை கரத்துதவியோடு மார்புறத்தில் அமர்த்தி, கரை சேர்ந்தார்.

("புத்திர சோகத்தினின்றும்கூட) ஓடோடியும் தனதில்லத்தையடைந்தார். கணவன் ஓர் அரிய குழந்தையுடன் வருவதை மேனையென்பார் பார்த்து பேரானந்தக் கடலில் ஆழ்ந்தவளாய், எதிர் வர, தன் மனைவியாகிய மேனை யென்பாளின் கையில் கொடுத்தனர். அங்கு இத்தம்பதிகளுக்குற்ற களிப்பை இங்கு எம்மால் புகல வியலுமோ?

“மலைமன்னன், தனக்கு குழந்தை கிடைத்த தன்மையை மனைவி யாளுக்குச் சொல்லி, இருவரும் மகிழ்ந்து, அரிய அமுத மூட்டுவித்து, நாளொரு மேனியாய் வளர்த்துவர, ஐந்தாம் வயதில் தக்க முனிபுங்க வரைக்கொண்டு பார்வதி என நாமகரணஞ் செய்வித்து வித்யாப் யாசம் செய்வித்தனர். வேதசாஸ்திர முதலிய பல நூல்களையும் கற் பித்து வந்தனர்.

“தேவியின் கல்விப்பயிற்சியைப் பற்றி என்னென்ன எம்மால் சொல்லவியலும்? சகல சாஸ்திர விற்பன்னராயினர். எதினும் பிரகாசித்துவர, வயதும் பதிமூன்றாயிற்று.

ஒரு நாள் பார்வதி, “தந்தையே! நான் அரிய தவத்தைச் செய்து பரமேஸ்வரரை மணஞ் செய்து கொள்ளப் பிரியப்பட்டுள் ளேன். ஆதலின் தவஞ் செய்யும் தன்மையை நன்கு எடுத்து உரைக் கும் அரிய முனிபுங்கவரை அடுத்து உபதேசம் பெற்று இமயமலைச் சாரலில், ஓர்புறத்தில் தவஞ் செய்வதற்கான ஏற்பாடுகள் யாவையும் செய்து கொடுங்கள்” என்று தந்தையான மலைமன்னனை வேண்ட, மலைமன்னன் முதலில் புதல்வியைப் பிரிந்திருக்கச் சகியாதவராய், தடுத்தும், தேவியின் விடா முயற்சியைக் கண்டு, பின் இணங்கி, ஓர் அரிய தினத்தில் பார்வதி தேவியை அழைத்துக்கொண்டு இமயமலை யின் தென்பாலுள்ள வசிஷ்ட முனிவர் ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்றார். அம் முனிவனை மன்னன் போற்றி தனது புதல்வியின் மனப் பான்மையை முழுதும் புகல, பராசக்தி என அறிந்த முனிவர் பயபக்தியுடன் பார்வதிக்கு ஓர் அரிய ஆசன முண்டுபண்ணிக் கொடுத்து, அதில் அமரும்படி வேண்டிக்கொண்டார். அரசன் மாத் திரம் விடைபெற்று, தனதிருப்பிடஞ் சென்றனர்.

“முனிவர் தேவியாருக்கு தவஞ் செய்யுந் தன்மையைச் சொல் லத்தொடங்க, அப்பொழுது முனிவர் ஆசிரமத்தின் எதிரில், ஓர் யுவதி தள்ளாடி வருதலைக் கண்டனர்.”

(தொடரும்)

பரதேசத் தபால்

மேடைப்பிரசங்க சகோதரர்களுக்கு

என்னை உங்களுக்கு நன்றாகத் தெரியும். உங்கள் பேரில் குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் என்னிடம் துளிக்கூட இருக்காது என்றும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். உங்களோடு பல ஆண்டுகளாக, ஊர் ஊராகச் சென்று, பிரசாரம் செய்தவர்களில் நானும் ஒருவன்.

இவ்வள்வு காலமாகப் பிரசாரம் செய்துவந்திருக்கிறோமே, என்ன பயனை நாம் கண்டிருக்கிறோம்? இருபது வருஷங்களுக்கு முன், இருந்தது போலவா, இப்பொழுது ஜனங்கள் இருக்கிறார்கள் என்று நீங்கள் கேட்கலாம். உண்மைதான். ஓரளவில், அவர்களுக்குக் கண் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

நாம் என்ன என்ன விஷயங்களைப்பற்றிப் பிரசாரம் செய்தோம்?

அவைகளை, எவ்வளவு வரையில், ஜனங்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்? எவ்வளவு வரையில், நமதுபிரசாரத்தால்,அவர்கள் அறிவிலும் குணத்திலும் உயர்ந்திருக்கிறார்கள்? நமது பிரசாரத்தால், மருக்கலப்பில்லாத நன்மை ஒன்றே ஏற்பட்டிருக்கிறதா?

இந்தக் கேள்விகள் நியாயமான கேள்விகள் என்று நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்கள். இந்தக் கேள்விகளின் பதிலைப் பொறுத்து இருக்கிறது, நாம் செய்து வந்த பிரசாரத்தின் தன்மை. நாம் வாய்க்கு வந்தபடி பேசியிருக்கிறோமா? அல்லது நிதானத்தோடு விஷயங்களை மட்டும், தெளிவாகப் பேசியிருக்கிறோமா? இந்த சங்கதிகள் தெரிந்து விடுமல்லவா?

பொதுவாக, ஜனநாயகம் என்ற சொல்லை, நாம் அடிக்கடி பிரசங்கங்களில், உபயோகப்படுத்தி வந்திருக்கிறோம். ஜனநாயகம் என்பது என்ன என்று அவர்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளுவது மாதிரி, நாம் பிரசாரம் செய்திருக்கிறோமா என்பது என் சந்தேகம். ஜனநாயகம், சுயமரியாதை என்ற சொற்களை ஆனந்தமாகக் கேட்டுவிட்டு, அந்த வார்த்தைகளைக் கொண்டு, சண்டைக்கு இழுக்கிறாப்போல்,

பொது ஜனங்கள் ஆகிவிட்டார்கள் என்று நான் சந்தேகப் படுகிறேன்.

முதலிலே, சுயமரியாதை என்ற வார்த்தையை எடுத்துக் கொள்ளுவோம். சுயமரியாதை என்றால் திமிர்தண்டித்தனம் என்பதுபோல அர்த்தம் செய்து கொள்ளும்படியாக நாம் பிரசாரம் செய்துவிட்டோமா? சுயமரியாதை என்பதில் சக்தியோடு பொருந்திய அடக்கம் தான், அதிகம் என்பது பெரியார்களின் கருத்து.

சுயமரியாதை என்ற வார்த்தையைச் சொன்னவுடனே, யாருக்கும் எதற்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டியதில்லை என்ற உணர்ச்சியும் எண்ணமும் நம்மைக் கேட்பவர்களின் உள்ளத்தில் உண்டாகி விடுகிறதோ என்று நான் நினைக்கிறேன். மரியாதை என்றாலே எல்லை என்று அர்த்தம். சுயமரியாதை என்பதற்கு தானே வகுத்துக் கொண்ட எல்லை என்று அர்த்தம்.

நான் என்ன செய்யலாம் என்பதற்கு, நானே ஒரு எல்லையைக் கோலிக்கொண்டால், அதில் நான் ரொம்பவும் ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டாமா? எனக்கு நானே அதிகாரி என்ற எண்ணம் ஒவ்வொருவரின் உள்ளத்தில் தோன்றிவிடுமாயின், சுயமரியாதையைக்கொண்டு, எப்படி பொதுக் காரியத்தை, கூட்டாகச் செய்ய முடியும்?

எனக்கு நானே எஜமானன் என்பதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். சுயமரியாதை முடுக்கினால், பிறனுக்கும் நான் எஜமானன் என்று சொல்லத் துவக்கி விட்டால், அது சுயமரியாதை அல்ல. அதற்கு அகம்பாவம் என்று பெயர். சுயமரியாதையின் பெயரால், இந்த அகம்பாவம்தான் வளர்ந்து வருகிறதோ என்று நான் சந்தேகப் பட்டு, உங்களைக் கேட்கிறேன்.

அகம்பாவம் வளர்ந்து வருமாயின், நாம் இதுவரையிலும் பிரசாரம் செய்துவந்த முறை தவறு என்று நிச்சயமாகச் சொல்லிவிடலாம்.

ஜனநாயகம் என்று வெகுவாக, இந்தக்காலத்தில் அடிபடுகிறது. ஒவ்வொரு வோட்டரும், தானே அரசியலுக்கு அதிபதி என்று எண்ணிக் கொள்வதுதான் ஜனநாயகம் என்று சொல்லுகிறார்கள். அதை, உண்மை என்றே ஏற்றுக்கொள்ளுகிறேன். அதிகாரம் ஒன்று மட்டும் ஜனநாயகத்துக்கு அர்த்தமில்லை.

ரூபாயில் தலையும் பூவும் இருப்பதைப் போலவே, ஜனநாயகத்தில், இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வாக்காளனும் அரசியலில் அதிபதி என்பது உண்மையானால், அந்த அரசியல் பக்குவமாகவும் சீருடனும் நடக்கும்படியாக, நடந்துகொள்ளும் பொறுப்பும் கடமையும் ஒவ்வொரு பேர்வழியின் தலைமேலே சுமந்து நிற்கிறது என்பதை பொது ஜனங்கள் உணர வேண்டும்.

இதைப் பொது ஜனங்கள் உணர்ந்திருக்கிறார்களா என்று நான் உங்களை வணக்கமாகக் கேட்கிறேன். ஜனநாயகம் என்ற சாக்

கிலே, அரசியல் நடத்துபவர்களைத் தாக்குவதைத்தான் கடமையாகக் கொள்ளுவதா?

தன் கையில் அரசியல் அதிகார பாத்தியம் இருக்கிறது என்று உண்மையாக எண்ணும் ஒவ்வொரு பேர்வழியும், அரசியல் நிர்வாகப் பொறுப்பும் தன்னிடம் இருப்பதாக எண்ணிக் கொள்ளவேண்டும். பொறுப்பை மறந்து, அதிகாரத்தை மட்டும் மேற்கொள்ளப் பார்ப்பது ஜனநாயகமாகாது. அது சண்டைக் கிழுக்கும் சர்வாதிகாரத் தன்மையாகும்.

மேலும், பொதுவாக, நாம் என்ன பிரசாரம் செய்கிறோம்? விஷயம் தெரிந்த சிலரைத் தவிர, விஷயத்தை நேரே தெரிந்து கொள்ளாத பலர், என்னென்னமோ பேசுகிறார்கள். கேட்பவர்களை உற்சாகப்படுத்தவேண்டும் என்று பொருத்தமில்லாமல் விஷயங்களையும் விகடத்தையும் கொண்டுவந்து விட்டுக்கொண்டு, கையிலெடுத்துக்கொண்ட விஷயத்தை, அப்படியே மறந்துவிடுகிறோம்.

ஆகவே, நமது பிரசார முறை, பஞ்ச நிவர்த்தி வழி மாதிரி ஆகிவிட்டதேயல்லாமல், சாசுவதமாக, நல்ல பயனை அளிப்பதாகத் தெரியவில்லை.

உலகத்தில் எத்தனை கண்டங்கள் இருக்கின்றன? அவைகளில், எத்தனை தினுசான நாகரிகங்கள் இருக்கின்றன? அந்த நாகரிகங்கள் ஒன்றை ஒன்று தாக்குகின்றனவா? அல்லது தழுவி, வளர்கின்றனவா? உலகத்திலே, எங்கெந்தப் பகுதிகளில், எங்கெந்த சாமான்கள் உற்பத்தியாகின்றன? எங்கெந்த சாமான்கள் விலை போகும்? இவைகளைப்பற்றி, நாம் பிரசாரம் செய்யக்கூடாதா?

இன்னும் எத்தனையோ விஷயங்கள் அழகாகவும் அவசியமாகவும் கண்ணில் படும்பொழுது, வெறும் பூசல்களை விளைவிக்கும் பிரசாரம் மட்டும் நாம் செய்து கொண்டிருப்பது தர்மமாகுமா?

ஏதோ, நான் உங்களிடத்தில், இதையெல்லாம், வாய்விட்டுச் சொல்லலாம் என்று சொல்லிவிட்டேன். நல்ல எண்ணத்தோடு சொன்னசங்கதியானதால், பிழை இருந்தாலும், பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

உங்கள் அன்பன்,

சகோதர பிரசாரகன்

துக்கம் எதற்காக?

(போன்னி)

மனிதர்கள் துக்கப்படுவதைப் பார்த்தால், எனக்குத் தாங்க முடிவதில்லை. ஏன் துக்கப்படுகிறார்கள்? ஏன் துக்கப்படவேண்டும்? ஏதாவது ஒரு காரியம் செய்ய வேண்டுமே, அதற்காக துக்கப்படுகிறார்கள் போலிருக்கிறது.

துக்கம் எதற்காக வரவேண்டும்? நிறைவேறாத ஆசையினால் என்று, படீர் என்று என் முகத்தில், நீங்கள் பதிலை எறிந்து விட்டு, என்னைப்பார்த்து ஏளனம் செய்தாலும் செய்வீர்கள்.

நிறைவேறாத ஆசைக்கு ஏன் துக்கப்பட வேண்டும்? துக்கப்படுவதே, யோசிக்காமல் செய்கிற காரியங்களில் ஒன்று. ஒரு ஆசை நிறைவேறுமா, நிறைவேறாதா என்று யோசித்துப் பார்க்கவேண்டுமா வேண்டாமா? நிறைவேறக்கூடாத அதாவது குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் நிறைவேறக்கூடாத ஆசை என்றால், அதைப்பற்றி துக்கப்படலாமா?

"நிறைவேறக்கூடிய ஆசை; ஆனால், அது நிறைவேறவில்லை. ஆகையால், அதற்காக துக்கப்படுகிறேன்" என்று சிலர் சமாதானம் சொல்லப் பார்க்கலாம். இதுவும் யோசனை செய்யாமல், சொல்லுகிற சமாதானம் ஆகும்.

நிறைவேறக்கூடிய ஆசை, நிறைவேறாமல் போனால், அதற்காக என்ன செய்கிறது? துக்கப்படுகிறதோ! மிகவும் அழகாயிருக்கிறது! நிறைவேறாமல் போனால், மறுபடியும், முந்தியதைக் காட்டிலும் அதிகமான வேகத்தோடும் விவேகத்தோடும் முயற்சி செய்ய வேண்டும்.

முயற்சி செய்வதுதான் புத்தி; முயற்சி செய்வதுதான் முறை. முறையையும் புத்தியையும் பறிகொடுத்து விட்டு, துக்கப்படுவது என்றால், அது மனிதன் செய்யக்கூடிய காரியமே இல்லை. ஒவ்வொரு தடவை தோற்றாலும், அதற்குமேல், வெறி கொண்டது போல, மனிதனுக்கு, தைரியம் உண்டாக வேண்டாமா?

உங்களுக்கு 606 என்ற பெயர் கொண்ட மருந்து ஒன்று இருக்கிறது என்று தெரியுமா? அது என்ன மருந்து, எந்த நோய்க்கு

அது உபயோகப்படும் என்ற விபரங்களைப்பற்றி, நாம் இப்பொழுது கவலைப்பட வேண்டியதில்லை.

606 என்ற பெயருள்ள ஒரு மருந்து, அதுவும் அபூர்வமான மருந்து இருக்கிறது என்பது மட்டும் நமக்கு இப்பொழுது தெரிந்தால் போதும். அப்பேர்ப்பட்ட அருமையான மருந்துக்கு, 606 என்ற பெயர் வந்த வரலாற்றை, நீங்கள் கேட்டால், உங்கள் துக்கமும் ஏக்கமும் பறந்துபோய்விடும்.

இதைக் கண்டு பிடித்தவர் ஒரு ஜர்மன் டாக்டர். அவர், மருந்துச் சரக்குகளை, பல மாதிரியாகச் சேர்த்துச் சேர்த்து, புடம் பண்ணிப் பார்த்தார். எத்தனை வருஷங்கள்? ஒன்று இரண்டு வருஷங்கள் அல்ல. பல வருஷங்கள். மருந்துச் சரக்குகளை, 605 வகைகளில் சேர்த்து, மருந்தாகச் செய்து, அதைச் சோதனையும் போட்டுப் பார்த்தார். 605 தடவைகளிலும் தோல்வி.

நிறைவேறாத ஆசையால், அவர் துக்கப்பட்டு கண்ணீர் விடுவதென்றால், ஒரு ஊருக்கே, ஜல "சப்ளை" செய்யும்படியாக, அவர் அவ்வளவு கண்ணீர் விட்டிருக்கலாம். தெய்வத்தை நிந்தித்திருக்கலாம். தோழர்களை வெறுத்திருக்கலாம். ஜன சமூகத்தின்பேரில், அவருக்கு கசப்பு உண்டாயிருக்கலாம்.

ஆனால், நிறைவேறாத ஆசைக்கு முயற்சிதான் மருந்து என்பது அந்த டாக்டரின் திடமான சங்கற்பம். துக்கப்படுவதால், சமாதானம் உண்டாகாது என்பதை அனுபவ மூலமாகவும் கண்டறிந்துகொண்டவர். அதாவது, காந்தி தம்மைப்பற்றிச் சொல்லிக்கொள்ளுவதுபோல, ஜர்மன் டாக்டர் அனுபவ வேதாந்தி.

ஆகவே, அவர் முயற்சியைத் தளர்த்தவில்லை. 605 தடவைகள் தோற்றோமே என்ற துக்கமே, அவருடைய சித்தத்தில் தோன்றவில்லை. ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே ஒரு பிடிவாதம் தான். 606-வது தடவை! அவருக்கு வெற்றி!

அவர், இந்தியர்களைப் போல, கண்டதற்கெல்லாம், அர்த்தமில்லாமல், துக்கப்படும் பேர்வழி அல்ல. துக்கம் ஆளைக்கொன்றுவிடும், அல்லது பலவீனப்படுத்திவிடும். மேலும், துக்கப்படுவது, அநாகரிகம்! கண்ணன் கீதையில் சொன்னது, "காரியம் செய்" என்று. காரியம் செய்யாமல், மூக்கைச் சிந்திக்கொண்டு, துக்கப்படு என்று அவர் சொல்லவே இல்லை.

ஆராய்ந்து செய்வோம்

(சிட்டு)

போன வெள்ளிக்கிழமை கோவிலுக்குப் போனபோது ஒரு தேங்காய்க்கு இரண்டாக வாங்கிக்கொண்டு போனேன். பிள்ளையாருக்கு நாற்றெட்டு தோப்புக்கரணங்கள் போட்டேன். "ஈசுவரா! இந்தி ஒழிக!" என்று தெய்வத்தினிடம் முறையிட்டேன்.

சட்டென்று வங்காளிகளின் ஞாபகம் வந்த உடனே எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. மறுபடியும் அதே கடவுளிடம் போய் "கடவுளே, வங்காளியும் ஒழிக!" என்று கதறினேன்.

அந்தப்பொல்லாத கடவுள் எனக்கு பதில் சொல்லவே இல்லை. 'சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல்' என்பது போல மொழி பெயர்ப்பாளர்கள் காலிலேயே வந்து விழுகிறேன். ரொம்ப தயவு செய்யுங்கள். மொழி பெயர்ப்புக்களைக் கொஞ்சம் நிறுத்திவையுங்கள்.

இதனால் மொழிபெயர்ப்பாளர்கள், இன்னும் கொஞ்சம் உபயோகமான காரியம் செய்யலாம் என்பது மாத்திரமல்ல, இதனால் அவர்கள் பொது ஜனங்களுக்கும் தமிழ் மொழிக்குமே ஒரு பெரிய தொண்டைச் செய்தவராவார்கள்.

ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர்கள், ஜப்பானியர் எல்லோரும் சிறு கதை, நவீனங்கள் எழுதுவதின் மூலம் அவரவர்கள் பாஷைக்குச் சிறந்த தொண்டு செய்தார்கள். அவைகளை நாம் மொழிபெயர்த்துத் தானா நாம் தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும்? அவர்களை முழுவதும் மொழி பெயர்ப்பதின் மூலம் அவர்களை அகௌரவிப்பதாகவே நான் கருதுகிறேன். இந்தியர்கள், அதிலும் தமிழர்கள், பிறரை மரியாதையாக நடத்துவதில் பேர்போனவர்கள். ஆனால் இதில் மாத்திரம் ஏன் தமிழர்கள் நெஞ்சு இவ்வளவு கல்லாய்ப் போய்விட்டது?

ஐரோப்பிய நாகரிக வளர்ச்சியே தனிமுறையில் அமைந்திருக்கிறது. அதற்கேற்றது போல அவர்களுடைய நவீனங்களும், சிறு கதை சிருஷ்டிகளும் அமைந்திருக்கின்றன. ஆகையால் நமக்குக் கொஞ்சமும் பொருந்தாத அவைகளுடைய உருவம், சாரம், எல்லாவற்றையும் சேர்த்துக் கபளீகரம் செய்வது..... என்னவென்று அதைச் சொல்வது என்றே எனக்குத் தோன்றவில்லை.

மகாகவி பாரதியார் " தமிழில் இன்னும் அநேக நூல்கள் மொழி

பெயர்க்கப்பட்டு வரவேண்டும்" என்று சொன்னபோது, இது போன்ற மொழிப் பெயர்ப்புகளை அவர் நிச்சயம் சொல்லவில்லை என்று திடமாக நம்பலாம்.

* * *

பிறபாஷைகளிலிருக்கின்ற இலக்கியங்கள், நம்முடைய இலக்கியங்களைக் காட்டிலும் மேலான அழகைக் கொண்டிருந்தால், அது தான் நமக்கு வேண்டும். மூன்றும் தர, நாலாம் தரமான சிறு கதைகளும் நவீனங்களும், இங்கு நமக்கு மொழி பெயர்த்துத் தரப்பட வேண்டியதில்லை. அப்படிப்பட்ட புத்தகங்கள் இப்போது பிற பாஷைகளிலிருந்து வந்து நம் பிராணனை வாங்குகின்றன!

இது தான் தமிழுக்கு நாம் செய்யக்கூடிய தொண்டா? ஒரு விக்ஞான புத்தகத்தைத் தமிழில் எழுதித் தமிழருக்கு உதவி செய்தவருடைய தொண்டுக்கு, ஆயிரம் மொழிபெயர்ப்பாளர்கள் தொண்டு ஈடாகாது என்பதே என் எண்ணம். இப்படிப்பட்ட தொண்டைத்தான் பாரதியாரும் நினைத்து ஏங்கியது.

ஆனால் மொழி பெயர்ப்புக்கள் எவையுமே கூடாது என்பது என் கட்சியல்ல, தமிழ் இலக்கியத்தில், சிறு கதை சிருஷ்டியிலோ, நவீனத்திலோ, சிகரங்களை எட்டக்கூடிய எதுவும் நமக்கு வேண்டும். அதையும் மிஞ்சுபவை நமக்கு வேண்டும்.

பிற பாஷைகளைக் கற்றுக் கொண்டு, தமிழ் பாஷைக்குத் தொண்டு செய்யும் முறையே வேறாக இருக்கிறது. மொழி பெயர்ப்புக்குத் தகுதியுள்ள முதல் நூல்களைத் தேர்ந்து எடுப்பதற்கு எவ்வளவோ புலமை வேண்டும். அதோடுகூட நம்மிடம் இருக்கும் உயர்ந்த தமிழ் இலக்கியங்களைப் பிறபாஷைகளில் மொழி பெயர்த்து, அவர்கள் ஆச்சரியப்படும்படி செய்ய வேண்டியது நமது கடமை யல்லவா? அது தமிழுக்கே செய்யும் பெரிய தொண்டு ஆகாதா?

இதைத்தான் நாம் இப்பொழுது செய்ய வேண்டும். மொழிபெயர்ப்புக்கள் செய்வோம். ஆனால் அதை ஆராய்ந்து செய்வோம். மகா காவியங்களை நாம் எக்காரணத்தைக் கொண்டும் விட்டுவிட மாட்டோம்.

பாங்க் ஆப் ஹிந்துஸ்தான், லிமிடெட்

மூன்று வருஷ உத்தாவாதமுள்ள சர்டிபிகேட்டுகள்

ரூபாய் 100-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் மூன்று வருஷங்களுக்கும் நிர்ணயமான 2¼% வட்டியுடன் கூடிய சர்டிபிகேட்டுகள் கொடுக்கப்படும். அவற்றை கூட்டாகவும் மைனர்கள் பேரிலும் வாங்கலாம்,

பணம் செலுத்துவோர்களுக்கென பிரத்தியேகமான உத்தரவாதமுள்ள செக்யூரிடிகளின் பேரில், வரூலாகும் பணங்களை போட்டு வைப்பதால் டிபாசிட்டு செய்வோர்களுக்கு சந்தேகமற்ற உத்திரவாதமளிக்கப்படுகிறது.

சர்டிபிகேட்டுடன் சேர்க்கப்பட்டிருக்கும் கூபன்கள் மூலம் மூன்று மாதத்திற்கு ஒருமுறை வட்டியைப் பெறலாம்.

விதிகளுக்கு பாங்கின் தலைமை ஆபீசுக்கோ அல்லது எந்த கிளை ஆபீசுக்கோ எழுதிக் கொள்ளவும்.

ஆசையும் நாய் வளர்ப்பும்

"சாவி"

என்னுடைய வாழ் நாட்களில் எனக்கு ஏற்பட்ட ஆசைகளில் 'நாய் வளர்க்க வேண்டும்' என்பதும் ஒன்று.

மனித வர்க்கத்தின் ஆசைகள் அத்தனையும்பூர்த்தி பெற்று விட்டதா? அது போலத்தான் என்னுடைய நாய் வளர்ப்பு ஆசையும்.

ஆசைப்பட்டுக் கொண்டிருப்பது என்ற நல்ல எண்ணம் நம் ரத்தத்தில் ஊறிப்போயிருக்கிறது. மனித வாழ்வு உள்ளவரையில் அது அவனைவிட்டு அகலப்போவதில்லை என்பது நிச்சயம்.

தெருவில் காரில் போகிறவர்களைப் பார்த்ததும் நமக்கும் கார் சவாரி செய்யவேண்டுமென்ற பேரவா ஏற்படுகிறது.

உச்சாணிக் கொப்பிலே உள்ள அழகிய மாம்பழத்தைக் கிளி கொத்தித் தின்னும்போது நாம் ஏன் கிளியாய்ப் பிறக்கவில்லை என்று ஏக்கமடைகிறோம். கிளியாய்ப் போகவேண்டும் என்று நாம் வெகு சீக்கிரத்தில் முடிவு செய்து விடுகிறோம். ஆனால் அப்படி நடக்கிற காரியமா?

கிளைகளிலே ஊசலாடும் பழங்களைக் காணக்காண நாக்கிலே ஜலம் ஊற்றெடுக்கிறது. ஆஹா, நாம் மட்டும் ஒரு குரங்கு வளர்த்துக்கொண்டிருந்தால் அதைப் பழக்கிவிட்டு, நாம் எப்பொழுது ஆசைப்பட்டாலும் இளநீர்க்காய்களையோ, மாம்பழங்களையோ பறித்துப்போடச் சொல்லலாமே என்று, பழத்தின்மேல் ஏற்பட்ட நம்முடைய மோகம் குரங்கு வளர்ப்பதில் மாறுகிறது.

உடனே, அந்தக்கிளி கொத்திச் சாப்பிடும் பழத்தை நாம் ஒரு விதமாய் அலட்சியம் செய்கிறோம். எட்டாது என்ற ஒரு காரணத்தினால்! "சீ, இந்தப் பழம் புளிக்கும்" என்று அன்று அந்த நரி திராக்ஷைக் கொத்தைக்கண்டு சொல்லிவிட்டுப் போனது போல, "சை! இது என்ன பழம்!" என்று அப்பால் நகர்கிறோம், ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே!.

இப்படி நாம் ஆசைப் பட்டுக்கொண்டே போனால், அதற்கு ஒரு எல்லை வேண்டாமா? எப்பொழுதுதான் அதற்கு முடிவு ஏற்படும்?

... எனக்கு உண்டான அத்தனை ஆசைகளும் பூர்த்தியாவதாக வைத்துக்கொள்வோம். நான் அத்துடன் திருப்தி அடைந்து விடுவேனா? முடியாத காரியம்!

குழந்தைகள் பிறந்ததும் அவைகளைப் படிக்கவைத்து உத்தியோகத்திலமர்த்தி, தான் சுகமாய்வாழ ஆசைப்படுகிறார் தகப்பனார். உத்தியோகம் ஆன பிறகு, அந்தக் குழந்தைகளுக்குக் கலியாணம் செய்து வைப்பதில் ஆசை ஏற்படுகிறது. கலியாணமானதும், பேரன் பிறக்கும் வரை, தான் ஜீவித்திருக்க வேண்டுமே என்று எண்ணுகிறார். இப்படிப் பேரனுக்குப் பேரன் என்று ஆசைப்பட்டுக்கொண்டே போனால், அதற்கு முடிவு ஏது?

இன்று எழுத்தாளனாகப் பிறக்கிறான். நாளைக்கே தான் ஒரு பிரபல பத்திரிகை ஆசிரியனாக மாறிவிட வேண்டுமென்பது அவனுடைய பரம ஆசை.

சரி; என்னுடைய நாய் வளர்ப்பு ஆசை என்ன ஆயிற்று? ஓ! இன்னும் இருந்து கொண்டுதானிருக்கிறது.

நேற்று தான் ஒரு நாய் பிடித்து வந்தேன். அந்த அழகிய கறுப்பு நாயை நாலணாக் கொடுத்து வாங்கினேன். வீட்டிற்கு அதை அழைத்து வந்ததும், அது என்னுடைய மைத்துனன் சிவசாம்புவைக் கடித்து ரணமாக்கி விட்டது. பையன் இன்று மகா கோபத்துடன் ஊருக்குக் கிளம்பிப்போய் விட்டான்!

இதுவரை அவனை ஊருக்கு அனுப்ப, நான் பட்ட பிரயத்தனங்களெல்லாம் வியர்த்தமாயிற்று. எதிர்பாராத விதமாய் அந்த நாய் எனக்கு இந்தப் பேருபகாரத்தைச் செய்து முடித்ததற்காக, அது இருக்கும் திசையை நோக்கி ஒரு கொழுக்கட்டையைப் போடுகிறேன்.

இது என்ன? இப்போது அந்த நாய் எங்கே போயிற்று?

நாய் எங்கோ போய்விட்டது. அது எங்கு போயிற்று என்று ஒன்றும் விளங்கவில்லை.

துப்புத் துலக்கும் துளசிங்கத்திற்கும் என் மைத்துனனுக்கும் நாயைக் கண்டுபிடித்துத் தரும்படிக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

இன்று காலை என் மனைவி சதுர்த்தி பூஜைக்காகச் செய்து வைத்திருந்த அவ்வளவு கொழுக்கட்டைகளையும் சாப்பிட்டுவிட்டு எங்கோ ஓடிவிட்டது.

அதை ஒரு சங்கிலி போட்டுக் கட்டிவைக்காமல் போனேனே என்று இப்போது வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்?

தோட்டத்திலே ஒரு குத்துக் கம்பி வாங்கி நட்டிருக்கிறேன். பலமான ஒரு சங்கிலியும் வாங்கி ஆயிற்று. வேறொரு நாய் வாங்க வேண்டுமென்பது இப்போதைய ஆசை. ஓடாத நாய் எங்கேனும் கிடைக்காதா, பார்க்கலாம்!

அதிருஷ்டம்

(வ. ரா.)

அதிருஷ்டம் என்பது தமிழ் பேசும் படம். இந்தப் படம் மயூரா பிலிம்ஸ் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டது. இதற்கு கதை, சம்பாஷணை எழுதித் தந்தவர் எனது நண்பர் ச. து. சுப்ரமணிய யோகி அவர்கள். படத்தை "டிரெக்ஷன்" செய்தவரும் அவரே.

இந்தப் படம், முதல் இரண்டொரு ஸீன்கள் தவிர, மற்றப் பகுதிகளில் எல்லாம் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் மிகவும் குதூகலமா யிருக்கிறது. சந்தோஷம் என்று சொன்னால் போதாது. ஆரம்ப முதல், கடைசி வரையில் பெரும்பான்மையான ஸீன்கள், வெறும் புரளிதான்.

சாதாரணமாக, யோகி அவர்களுடன் பழகியவர்களுக்கு, இந்தப் படத்தில் காண்பதும் கேட்பதும் புதிதாகவே இராது. சென்னை கடற்கரையில், ஸ்ரீ சுப்ரமணிய யோகி, நண்பர்களுக்குக் குதூகலம் வரும்படியாகச் சொல்லும் கதையை (அதன் கிளைகளோடும் வர்ணனைகளோடும்) அப்படியே தத்ரூபமாக இந்தப் படத்தில் காணலாம்.

படத்தைப்பற்றிச் சொல்லு முன்னர், அதன் ஆசிரியரைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லுவது பொருத்தம்தான். யோகியார், தமிழ் நாட்டுக் கவிகளில் ஒருவர். மிகச் சிறந்த எழுத்தாளர்களின் கோஷ்டியைச் சேர்ந்த யோகியார், மிகவும் குதூகலமான புருஷன். காளி ஒன்றைத் தவிர, வேறு எதுவும் தமக்குத் தூய்மை கொண்டதல்லப்போல, அவர் ரஸத்தோடு, ஹாஸ்யமாகப் பேசும் காட்சி மிகவும் பிரம்மானந்தமாக இருக்கும்.

புரட்சிக்காரர்கள் சிலர், விக்கிரகத்தை உடைப்பவர்கள் என்று பெயர் வாங்குவது இயற்கை. பழைய ஆசார விவகாரங்கள் பிடிக்காத சீர்திருத்தக்காரன், அவைகளை உடைத்தெறியத்தான் பார்ப்பான். அப்படி, அவைகளை உடைத்தெறியும்பொழுது, எழுத்தாளனா யிருப்பின், மறைமுகத் தாக்குதலான ஹாஸ்யத்தைக் கையாளுவது இயற்கை.

மனிதனை நேரடியாகத் தாக்கி, அவமானப்படுத்துவது மாதிரி பேசினால், பெரும்பாலும் சீர்திருத்தக்காரன் தனது நோக்கத்தில் வெற்றி பெறுவதில்லை. நேரடியாகப் பேசினால், விரோதிகள் ஏற்படுவதைத் தவிர, சீர்திருத்தக்காரன் வேறு நற்பயனை விரைவில் காண முடியாது.

ஆகவே, சீர்திருத்தக்காரனாகிய எழுத்தாளன், புரளிச் சாதனமாகிய ஹாஸ்யத்தைக் கையாண்டு பார்த்தால், நல்ல பயன் கிடைக்குமா என்று பார்க்கிறான். பெரும்பாலும், இதிலே, வெற்றி கிடைக்கும் என்றாலும், இதிலும் ஆபத்து இருக்கிறது.

ஹாஸ்யத்திலே, பொதுப்படையாக, இருவிதப் பாகுபாடுகளைக் காணலாம். ஒன்று குதூகலமான நகைச்சுவை. இன்னொன்று கிண்டல் செய்கிற நகைச்சுவை. இவையிரண்டும் பொதுப்படையான பாகுபாடுகள். இந்த இரண்டு வித நகைச்சுவைகளில், ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விபத்து தோன்றி விடலாம்.

கிண்டல் செய்கிற நகைச்சுவையில், பொறாமைக் குணம் சிறிது தான் இருக்கலாம். பொறாமை இல்லாத கிண்டலே கிடையாது என்பது இலக்கிய நிபுணர்களின் கருத்து. ஆனால், பொறாமை அதிகமாகப் போய்விட்டால், கிண்டல், சிரிப்பை உண்டாக்காமல், ஆத்திரத்தை உண்டாக்கி, பகைமையை மூட்டுகின்றது. ஆகவே, ஒன்றைச் சீர்திருத்தம் செய்ய வந்தவன், பொறாமை என்ற தீயகுணத்துக்கு, தானும் இருப்பிடமாகி, ஜன சமூகத்தில் அதை, எப்படியோ பரப்பி விடுகிறான்.

சூதூகலத்தைத் தழுவிய நகைச்சுவையில், பொறாமையைக் காண முடியாது. இதய விசாலத்தால் தான், மனிதனுக்கு குதூகலம் ஏற்பட முடியும். ஆனால் குதூகலத்தில் நேரக்கூடிய விபரீதம் என்ன என்றால், குதூகலத்தால் அடக்கம் தவறிப்போய், ருசியில், சில சந்தர்ப்பங்களில்; கீழான தன்மை எப்படியோ வந்து ஒட்டிக் கொள்ளுகிறது.

ஜனங்களைச் சிரிக்கச் செய்து, இன்பம் அனுபவிக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்ற ஆசை உயர்ந்தது. அந்த ஆசையை தொண்டாக மாற்ற முயலும்பொழுது, இந்த விபரீதங்கள் தோன்றுவது இயல்பு என்பதைக் குறிப்பிட்டேன். இந்த மாதிரி, சில சந்தர்ப்பங்களில் நேராமல் முடியாது என்பதையும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

இந்த விபரீதம் நேருவது, [illegible] னுடைய பூரணமான குற்றம் என்று முடிவு கட்டுவதும் தவறு. படம் பார்ப்பவர்கள், எழுத்தைப் படிப்பவர்கள்—இவர்களையும் பொறுத்திருக்கிறது அந்தக் குற்றம்.

உயர்ந்த ரக ஹாஸ்யம் விளங்காத ஜனங்களுக்கு, மட்ட ரகச் சரக்கைக் காண்பித்தாவது, அவர்களுக்கு இன்பம் ஊட்ட வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன், எழுத்தாளன், மட்ட ரக ஹாஸ்யமுள்ள சந்தர்ப்பங்களை சிருஷ்டி செய்யத் துணிகின்றான். ஆகவே, குற்றம் இரு புறத்திலும் இருக்கிறது. பைத்தியம் தெளிந்தால் கலியாணமா அல்லது கலியாணமானால், பைத்தியம் தெளியுமா என்ற பழைய கேள்விதான்.

குதூகல மேதாவியான ச. து. சு. யோகியார், நான் குறிப்பிட்ட ரகமான ஹாஸ்யத்தை, சில இடங்களில் கையாள நேர்ந்தது, நமது ஜன சமூகத்தின் தற்போதைய நிலைமையைப் பொறுத்துத்தான் என்று எனக்குத் தோன்றுகிறது.

அதிருஷ்ட படத்தில், பெண்கள் குஸ்தி போடுவதைப்போல, சண்டை போடுவது, கோடிசுரனும் அவர் அமர்த்திய தாதியும் வாக்குவாதம் செய்வது, பூங்காவனத்தில் காதலர்கள் சந்திப்பது, கோர்ட்டு ஸீன்கள் முதலியவை, அபரிமிதமான குதூகலத்தைக் கொண்டவை என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அவைகளை, யோகியார் மனது வைத்திருந்தால், உயர்ந்த ரகமான ருசிக்கு ஏற்றியிருக்க முடியும் என்று நம்புகிறேன்.

ஜோடுகளை ஒரே இடத்தில் குவித்துக் காண்பிப்பது, ஜம்பு மோட்டாரில் சவாரி செய்வது, டோரா மோட்டாரில் சவாரி செய்வது, ஜம்புவின் தோழன் காதல் களியாட்டத்தில் ஆழ்வது—முதலிய கட்டங்கள் முதல்தர வேடிக்கைகள்.

ஸ்ரீ சடகோபன், கொத்தமங்கலம் சுப்பு முதலியவர்கள் வெகு ஆனந்தமாக நடித்திருக்கிறார்கள். படம் பார்க்கத்தக்க படம். பார்க்கத் தவற வேண்டாம். குதூகலம் என்ற வார்த்தைக்கு உள்ள பூரண அர்த்தத்தையும் தெரிந்துகொள்ள வேண்டுமானால், படத்தைப் போய்ப் பாருங்கள்.

———

KA

'அதிருஷ்ட' நடனம்!

மாத்ரு பூமியில் 'ஹெலன்'
(எ. கே. ராஜலட்சுமி)



“விமோசன”த்தில்

பிச்சைக்காரன் மகள்

"மணி"

பதினாறு வருஷங்கள், மனிதனுடைய வாழ்க்கையில் ஒரு விளையாட்டல்ல. எவ்வளவோ மாறுதல்கள் நடந்து விட்டன. எவ்வளவோ மேடு பள்ளங்களைத் தாண்டிக்கொண்டு காலசக்கரம், தன் பயங்கரச் சுழலை ஒரு தடவை முடித்து விட்டது. அடுத்த பதினாறு வருஷங்களில், அதே சுழல் மறுபடியும் முடியும்போது, அவன் உயிருடன் இருப்பான் என்ற நம்பிக்கை அவனுக்கே இல்லை.

அவனுடைய வாழ்க்கைப் போராட்டத்தில் — அவனுடைய ஏழ்மையின் மத்தியில் — ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கண்டமாக இருந்தது. வயிற்றின் கொடுமை. நாட்டின் செல்வம், சிதறிச் சீர்கெட்டுக் கிடந்ததன் பலன்! எனவே எழுபத்தி ஆறு வயது வரைக்கும் அவன் உயிரோடு இருப்பான், என்ற நம்பிக்கை அவனுக்கு எப்படி வரும்?

அது மாத்திரமில்லை. ஆகாரத்தினால் மட்டுமா ஒருவன் உயிர் வாழ்கிறான்? அல்லது உணவு குறைந்து போனதினால் மட்டும் உயிர் போய் விடுகிறதா? இரண்டும் இல்லை. எல்லாவற்றோடு, கவலைகளும் சேர்ந்துகொண்டு அவன் காலத்தைக் குறைத்துவிடலாம்!
குழந்தையைப் பிரிந்து வாழ்வதைவிட அவனுக்கு இ
சோகம் வேண்டும்?

ஆச்சு! நாட்கள் குறுகிவிட்டன
இரண்டோ... அவனுடைய செல்லச்
போய்விடப்போகிறாள். அந்த
பிச்சைக்கார வாழ்வு வாழ
மனதில் விளங்குவதற்கு ய
பிரிந்துபோய் விடப்போகிறு

அவள் அவனிடம்
கஷ்டம். அது தான் அவனு
பாகம் என்றுகூடச் சொல்ல

அங்கே உன் ஹிருதயம்தான் உனக்கு வீடு. அந்த ஹிருதயத்தையும் உன் அன்பு ஒன்றினல் தான் கட்டுப்படுத்த முடியும்.

* * *

மிலான் தேசத்திலே திருப்தி மனது கொண்ட ஒருவன் இருந்தான். இந்த அறுபது வருஷ காலத்தில் அதற்கு வெளியே அவன் போனது கிடையாது. திடீரென்று அவனுக்கு ஒரு உத்திரவு போட்டு விட்டான் அதன் கவர்னர். அதற்கு வெளியே அவன் போகக்கூடாதென்று தடை போடப்பட்டது.

இதுவரை அந்தச் சிந்தனையே இல்லாமல் இருந்தவனுக்கு இந்தத் தடைபோடவும் உடனே ரொம்ப மனது கஷ்டமாகப் போய்விட்டது. அவஸ்தைப் பட்டான். இது வரையில் தான் கவலைப்படாதிருந்த அதைச் செய்து, ஊருக்கு வெளியே போக வேண்டும் என்ற ஆவலால் துடித்தான். அதற்கு அனுமதியும் கேட்டான்.

...லை அனுமதி மறுக்கப்பட்
...ன் உற்சாகமே போய்
...யில் அதே துக்
...ரை விட்

படுகிறது. அவர்களுடைய ஆசைகளுக்குத் தக்கபடி இல்லாமல், குறுகினதாக உலகமே அவர்களுக்குத் தோன்றுகிறது.

கிழக்கிலிருந்து மேற்கே, வடக்கிலிருந்து தெற்கே ஆடி ஓடி அலைவது, அவர்கள் கொள்ளும் உற்சாகம். பூமியை இப்படி அவர்கள் சுற்றி, வந்துவிட்ட போதிலும், அவர்களுக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. ஏனென்றால், ஐயோ! நாம் சந்திர மண்டலத்தைப் போய் எட்டிப் பார்க்க முடியவில்லையே என்ற வருத்தம் தான்.

* * *

ஹிருதயத்தின் ஒவ்வொரு தசைத் துணுக்கோடும், ஊடும் பாவும்போல் பின்னப்பட்டிருக்கிறது விடுதலை ஆசை.

* * *

நாம் இஷ்டப்பட்டதை செய்வதற்கு—அதுதான் இயற்கையான சுதந்திரம். நாம் அடங்கி இருக்கும் அந்த ஒரு சமூகத்தின் நன்மைக்காக இடைவிடாமல் நாம் இஷ்டப்பட்டதை செய்வதற்கு—அதுதான் பொதுஜன சுதந்திரம்.

* * *

சட்ட ரீதியாக ஏற்பட்ட சர்க்கார்களில்தான் ராஜீய சுதந்திரத்தைக் காண முடியும்.

* * *

விடுதலை! விலையற்ற சுரங்கம்!
...டுங்கோலர்கள் கவ்வ விரும்
...முத்து! மாணிக்கம்! ஆனலும்
...ல் அதை அநுபவிக்க முடி
...ல்லை!

...தற்காக அவன் பொக்கிஷம்
...ட்சி அடைகிறது. தேசம்

டது. அவனுக்குப் பிச்சை எடுப்பது தொழில்.

அவள் வந்து சேர்ந்தாள். அவனைப் பிடித்திருந்த தரித்திரமும், கஷ்டமும்கூட ஓரளவுக்கு மாறிவிட்டன. "நாளைக்கு என்ன செய்யப் போகிறோம்" என்ற கவலை இல்லாமல், அவர்களால் இருக்க முடிந்தது. இவ்வளவிற்கும், அவன் முன்போல் பிச்சை எடுக்க ஊரெல்லாம் கூடத்திரிவதில்லை. போன இடங்களில், மகாலட்சுமிகளைப்போல் பலபேர், அவனைக் கூப்பிட்டுச் சாதம் போட்டார்கள். அவனுடைய பொக்கிஷத்தின் பக்கம்கூட பணத்தின் காற்று அப்போதைக்கப் போது வீசிற்று ; அரையணு... ஒரு அணு, இப்படியாக !

எல்லாம், வந்து சேர்ந்தவளின் பாக்கியம் என்று அவன் நினைத்தான்: அவள், அவனுக்குப் பாக்கிய லட்சுமியாகவே இருந்தாள்.

அவள் வந்து சேர்ந்த புதிதில் எல்லோரும் அவன்மேல் சந்தேகப் பட்டார்கள். 'நாற்பத்தைந்து வயதுடைய பிச்சைக்காரப் பிரம்மச்சாரியிடம் குழந்தை எங்கிருந்து வந்தது என்ற பரபரப்பு அவனைப்போன்ற சகோதரத் தொழிலாளிகளிடையே ஏற்பட்டது. ஆனால் அவன், அவர்களுக்குப் பதில் சொல்ல முன் வரவில்லை. சிரித்துக்கொண்டு 'என்னுடைய குழந்தை' என்றான். சினேகிதர்களும் சிரித்தார்கள். அதோடு விஷயம் நின்றுவிட்டது.

அவனுடைய சிரிப்பில், மனப்பூர்வமான சந்தோஷத்தின் ஆர்வத்தைக் காண முடியவில்லை. அது, சமூக சிருஷ்டியின் ஆரம்ப காலத்திலேயே தோன்றிய மனிதனின் ஊழலிலும், ஹிருதய பூர்வ மான உணர்ச்சிகளற்ற மிருகத்தனத்திலும்போய் எதிரொலித்தது.

ஏனெனில், அதனுடைய விளைவுதானே அவள் ? கருப்பாயி என்று அவளுக்குப் பெயர் வைத்தான் அந்தப் பிச்சைக்காரன்.

இருட்டில் கண்டெடுக்கப்பட்ட பெண்ணுக்கு அதைவிட நல்ல பெயர் அவனுக்குக் கிடைக்கவில்லை. அவளுடைய நிறத்திற்கு அது பொருத்தமாக இல்லாமலிருக்கலாம் ; ஆனால், எல்லோரும் நிறத்திற்கும் தன்மைக்கும் ஏற்றவாறு பெயர்களை வைத்துக்கொள்ளுகிறார்கள்? இல்லையே ! இது அவனுடைய கட்சி.

அன்றுகூட அவனுக்கு நல்ல பசி. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. வழக்கமாகப்போடும் இரண்டொருவரும், அன்று 'ஒன்றுமில்லை' என்று கையை விரித்துவிட்டனர். பசியை மறப்பதற்காக ஆற்றங்கரையைப் பார்க்கப் போனான்.

ஆம்! பசியை மறக்கும் சம்பவம்தான் அங்கும் நடந்தது.

தூரத்தில் ஒரு குழந்தையின் அழுகைக்குரல் கேட்டது. இரவில் அந்த நேரத்தில், குழந்தையை வைத்துக்கொண்டு யார், என்ன செய்கிறார்கள் என்ற சந்தேகம் அவனுக்கு. இருந்தாலும் 'நமக்கென்ன' வென்று கனவில் ஆழ்ந்துவிட்டான்.

அவனை அழுகைக்குரல் விடவில்லை.

ஒரு தாய், இப்படி அலரும் ஒரு குழந்தையைப் பார்த்துக் கொண்டு, சும்மா உட்கார்ந்திருப்பாளா? அந்த எண்ணமே அவ னுக்கு விசித்திரமாக இருந்தது. குழந்தையின் குரல், சற்றுக் கம்மிக்கூட போயிருந்தது.

அந்த சப்தம் வந்த திக்கில்போய் பார்த்தபொழுது ஒரு குழந்தை, கவனிப்பாரற்றுக் கிடந்தது.

சுற்று முற்றும் பார்த்தான். 'யாருடைய குழந்தை யம்மா இது' என்று உரக்கக் குரல் கொடுத்தான். ஆற்றங்கரைக்கு அப்பாலுள்ள பாறைகளில் மோதி அவனுடைய குரலேதான் பிரதிபலித்தது. அவ னுடைய சந்தேகம் நிவர்த்தியாயிற்று. அது, சமூகத்தை எதிர்த்து நின்று போராடச் சக்தியற்ற எந்தப் பேதையின் குழந்தையோ? யார் கண்டது?

அன்று முதல் அது அவனுடைய குழந்தையாகிவிட்டது.

* * *

உயிர் கொடுத்தவனுக்கு, உயிர் கொடுத்துக் காப்பாற்றி வந்தாள் கருப்பாயி. அவனுடைய தள்ளாத வயதில் அவனுக்கு எவ்வளவோ உபகாரமாக அவள் இருந்தாள். அவள் ஒன்றிரண்டு வீடுகளில் வேலை செய்து பணம் சம்பாதிப்பதையும் அவனுக்காகவே செலவுசெய்தாள்.

அப்படிப்பட்டவள் அவனைப் பிரிந்து போவதை அவனால் பொறுக்க முடியவில்லை.

வாழ்க்கையின் அழைப்பை அவளால் மறுக்க முடியாது. அவன் எதை தைரியமாய் எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றானோ, அதை அவளிடமும் எதிர் பார்க்க முடியுமா? அவனும் அவளும் ஒன்றா?

எனவே, அதற்கு அவள் கொடுத்த பதில் அவனைக் கலக்கி விட் டது. அவனைத் தனியாக விட்டுவிட்டு அவள் போய் விடுவாள். முத்து அவளைக் கூட்டிக்கொண்டு போகும்போது அவனும் அவர்களோடு போக முடியாது. முத்து ஊர் ஊராகப் போய் கூலி வேலை செய்து

பிழைப்பான். அவனோடு கூட அந்தத் தள்ளாத கிழவனும் போக முடியுமா!

கடைசி நாள். என்றைய தினத்தையும்விட, அன்று அவள் அதிகக் கவனத்தோடே எல்லாக் காரியங்களையும் செய்து முடித்தாள். மேற்கொண்டு சில சிறிய வேலைகள் இருந்தன. அவனுக்கு இன்னொரு வேஷ்டியொன்று அழுக்குப் படிந்து கிடந்தது. அவனால் அதைத் துவைக்கமுடியாது என்று சவுக்காரம் போட்டு அதைத் துவைத்து காயப்போட்டாள். வீட்டிலேயும் இரண்டொரு நாளைக் குக் காணும்படி ஏதாவது செய்து வைத்துவிட்டுப் போகவேண்டு

மென்று ஆசை அவளுக்கு. ஆனால் வீட்டில் சாமான்கள் ஒன்றுமே இல்லை. ஒவ்வொரு நாளும் தேடி வயிறு வளர்ப்பவர்கள் வீட்டில் சாமான்கள் எப்படி இருக்கும்?

அவள் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைத்திருந்தது, முத்து கொடுத்தது — ஆக எல்லாமாகச் சேர்த்துப் போட்டு பாத்திரம் நிறையப் பாலை வாங்கிக் காய்ச்சி, அவனுக்குக் கொடுத்தாள் — அவளுடைய கலியாணத்தின் ஞாபகச் சின்னமாய்! அதைவிட அவளுக்குச் சக்தி இல்லை.

முத்துவும் அங்கே வந்திருந்தான். பொங்கி வரும் துக்கத்தையும், தைரியமாய் அடக்கிக்கொண்டு கிழவன் நிமிர்ந்து, "எனது விலையில்லா முத்தை இப்பொழுது உன் கைகளில் கொடுக்கிறேன். அவள் உனக்கு மனைவி மாத்திரமில்லை. வீட்டுக்கு விளக்கு" என்றான் நடுங்கும் குரலில்.

விடுதலை!

எவனொருவன் அடிமைத் தளையை அறுத்து எறிந்து ஒரு தேசத்தை மீட்கிறானோ, அவன் தான் அன்பு தர்மத்துக்குச் சிறந்த வியாக்யானி. மனிதன், மனிதனிடத்திலிருந்து பெறக்கூடிய சிறந்த ஆசீர்வாதத்தை அவன் விநியோகம் செய்து கொடுக்கிறான்.

அவனுக்கு அடுத்தபடியாக யாரைச் சொல்லலாம் தெரியுமா?

இந்த மாதிரி காலங்களில், விடுதலை என்ற கோபுர முனையை கவனித்துக்கொண்டே இருந்து, அது அழிவைத்தேடி சாய்வது போல் தோன்றும் சமயத்தில் அதன் அஸ்திவாரத்தை பழுது பார்த்து அதன் விரிசல்களைப் போக்கி, கெட்டிப்படுத்துகிறானே அவன்தான்.

* * *

சுதந்திரமே! தெய்வீக ஒளி கொண்ட தேவதை நீ! போகம் நிரம்பினவள்! மகிழ்ச்சி பொங்குபவள்! சாசுவதமான இன்பங்கள் உன் எதிரில் ஆளுகின்றன. மகிழ்ச்சியோடு உன் பரிவாரங்களைச் சிரித்த முகத்துடன் எத்தனையோ பேர்கள் அழைத்துச் செல்கிறார்கள். பாரம் குறையவே அடிமைத்தனமும் லேசான வஸ்துவாகி விடுகிறது.

உன் பார்வையில் வறுமைகூட உற்சாகமடைகிறது. இயற்கையின் மங்கலை நீ பிரகாசமாக்குகிறாய். சூரியனுக்கு அழகு கொடுக்கிறாய். பகலுக்குச் சந்தோஷம்!

* * *

விடுதலை ஜனங்களை வலியவந்து அடையாது. ஜனங்கள்தான் எம்பி அதனிடம் எட்டிப் போக வேண்டும். அனுபவிப்பதற்கு முன் விடுதலையை சம்பாதித்து ஆகவேண்டும்.

* * *

மனிதன் மட்டும் பேராசையோடு அடையப் பார்க்கிறான் என்பதில்லை. மிருகங்கள் கூட எல்லாவற்றையும்விட சிறந்ததாகக் கருதுகிறதே, அந்த விடுதலையைப் போல் வேறெது ஜனங்களுக்கு நன்மை தரக்கூடியது?

* * *

விடுதலை என்ற பெயரே ரொம்ப மயக்கக்கூடியது; வசீகரிக்கக்கூடியது. அதற்காகப் போராடுபவர்கள் எல்லோருக்கும் தங்களுக்குச் சாதகமான ஆசைகளை அடைந்து விடுவோம் என்பது நிச்சயம். அவர்களுடைய ஆசை மனித சமூகம் முழுவதுக்கும் சொந்தமானது.

* * *

கட்டுப்படாத மனிதனின் நிரந்தரப் பொருள் நீ! சிறைக் கோட்டங்களிலும் பிரகாசமாக இருக்கிறாய் நீ! ஏனென்றால்

ரத்த மயமாகிறது. தூக்கமில்லை! துக்கம்தான்! கோபிக்கிறான்! சொர்க்கம், நரகம் இரண்டையும் மறந்து விடுகிறான்! தனக்கும் நிம்மதியில்லை! பிறருக்கும் நிம்மதி கிடைக்க அவன் விடுவதில்லை!

* * *

சட்டம் எதை அனுமதிக்கிறதோ அதைச் செய்யும் உரிமை தான் சுதந்திரம்.

அவைகள் எதை மறுக்கிறதோ அதை ஒருவன் செய்ய முடியுமானால் அது சுதந்திரமே ஆகாது.

ஏனென்றால், அதே சக்தி தானே எல்லோருக்கும் இருக்கும்!

சுதந்திரமே! எல்லோரும் உன்னைத்தான் தனியேயும் பொதுவிலும் வழிபடுகிறார்கள். நீதான் நன்மையை தரும் தேவதை! அந்த வழிபாடு எப்போதும் இப்படியேதான் இருக்கும்.

இயற்கையே மாறும் காலம் வந்தால் அப்போது மாறலாம் இந்த வழிபாடும். ஒரு வார்த்தையும் ஒரு சக்தியும் உனக்குக் களங்கம் உண்டாக்க முடியாது. ஆகாரத்தைத் தின்றுகொண்டிருக்கும் ஒரு பன்றிமீது உன் புன்னகை விழும்போது அப் பன்றி அடையும் சந்தோஷம், யாருடைய கோர்ட்டிலிருந்து நீ விரட்டப்பட்டாயோ அந்த அரசன் அடையும் சந்தோஷத்தைவிட அதிகம்.

துப்பறியும் சீமாட்டி

விண்சர் கோமகனும் அவருடைய மனைவியும் பெவர்ப்ரூக் பிரபு முதலியவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். சட்டைக்கைக்குப் போட்டுக்கொள்ளும் 'கப்' பொத்தான்களின் மேல் திரும்பியது பேச்சு. விண்சர் கோமகன் தன்னுடைய 'கப்' பொத்தான்களைக் காட்டி, "இது என் மனைவி எனக்குக் கொடுத்தது" என்று பெருமை பாராட்டிக்கொண்டார்.

எல்லோரும், அவரவர்களுடைய 'கப்' பொத்தான்களைக் காட்டினார்கள். பெவர்ப்ரூக் திருட்டுப் பார்வை பார்த்துக்கொண்டே சட்டைக் கையை இழுத்து கைகளை மறைத்துக்கொண்டார். விண்சர் சீமாட்டி அதைப் பார்த்து விட்டாள்.

'எங்கே! பெவர்ப்ரூக் 'கப்' பொத்தான்களைப் பார்க்கவேண்டும் நான்' என்றாள் அவள்.

வேறு வழி இல்லாமல் அவர் ஷர்ட்டுக் கையைக் காட்டினார். பித்தளை 'சேப்டி' பின் ஒன்று அங்கே குத்தப்பட்டிருந்தது!

தியாகம்

அசுவதி

தியாகம்! ரொம்ப புனிதமான அர்த்தத்துடன் உலவி வரும் வார்த்தை. அதற்குத்தான் எவ்வளவு பெரிய அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது, மனித நாக்குகளில்! திடீரென்று ஒருவன் கேட்கிறான். 'என்னடப்பா! எனக்காக இந்த சின்ன தியாகம் செய்யக் கூடாதா' என்று.

அவனுக்கு ஒருகாரியம் ரொம்ப அவசரமாக ஆகவேண்டி இருக்கும். அதற்குஎன் உதவி அவசியம் வேண்டி இருக்கும். நான் 'கொஞ்சம் பொறு, ஒரு கப் காபி சாப்பிட்டுவருகிறேன்!' என்பேன். அப்போதுதான் அவனிடமிருந்து அந்தக் கேள்வி எழுகிறது, அவனுடைய ஆத்திர நினைப்பில்.

இந்த மாதிரி ஒவ்வொரு சின்ன விஷயத்துக்கும் தியாகம், தியாகம் என்று அடிபட்டு வருவதைப் பார்த்தால், அந்தத் தியாகத்தின் அந்தஸ்தைப் பற்றிய என் அபிப்ராயமே ஒருவிதமாக ஆகிவிடுகிறது. தியாகம் இவ்வளவு மலிவான சரக்காக ஆகிவிட்டதா?

ஆமாம். 'ஒரு கப் காப்பியை தியாகம் செய்யக்கூடாதா' என்று கேட்ட குரலில் புனித எண்ணம் எதும் இருப்பதாகத் தெரியவில்லை எனக்கு. தன் காரியம் ஆனால் போதும் என்ற ஒரு நினைப்பிலே தான் அந்த நினைவு பிறக்கிறது.

'என் சௌகர்யத்தை நீ கவனித்துப்பாரு. உன் சௌகர்யம் கிடக்கட்டும் பிறகு' என்றுதான் சொல்வதாகப்படுகிறது. இவ்வளவு மதிப்பு குறைந்துபோன அந்த வார்த்தை காட்டும் அர்த்தத்துக்கு வேறு வார்த்தை கண்டுபிடித்தால் கூடத் தேவலே என்றுதான் நினைக்கிறேன்.

தியாகம்செய்' என்று என்னைக் கேட்பவர்களைப்பற்றி எடுத்தெறிந்து பேசினேனே. அந்த தியாகத்தைப்பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்பதையும் மறைத்து வைப்பதில் பிரயோசனம் இல்லே.

'தியாகம் செய்' என்று கேட்கும் குரலுக்கு நான் என்ன மதிப்பு வைத்தேனோ, அதே மதிப்புதான் 'தியாகம் செய்தேன்' என்று நினைக்கும் மனதுக்கும் நான் மதிப்பு வைத்திருக்கிறேன் என்று சொன்னால் திகைப்பாக இருக்கலாம்.

என்னைத் தவிர, என் சம்பந்தமில்லாத, பிற விஷயங்களுக்காக, என் சௌகர்யங்களை விட்டுக் கொடுக்கும் ஒரு சிந்தனை, செய

னுக்குத்தான் தியாகம் என்ற வார்த்தை கொடுக்கப்பட்டிருப்பதாக நான் நினைக்கிறேன்.

இந்த செயலைச் செய்தவனைத் தான் உலகம் 'தியாகி' என்று தலையில் வைத்துக்கொண்டு கூத்தாடுகிறது. தர்ம கைங்கரியத்துக்கு அவன் இவ்வளவு சொத்து எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறான்! என்ன தியாகம்! அவனுக்கு ஞாபகார்த்தம் ஏற்படுத்து! தேசத்திற்கு அவன் தன் உயிரையே கொடுத்திருக்கிறான்! என்ன மஹத்தான தியாகம்! அவன் உருவத்தை, பெயரை அழியாத நிலையிலே பொறித்து வை! என்றெல்லாம் உச்சாணி கொப்பிலே ஏற்றிவைத்து விடுகிறது உலகம்!

எதற்காக இதெல்லாம்?

தர்மத்திற்கு அவ்வளவு சொத்தையும் எழுதி வைத்துவிட்டுப் போனவனின் உண்மை மனது என்ன என்பதை உலகம் கண்டிருந்தால் இதை செய்திருக்குமா? ஆனால், அந்த உண்மை எண்ணம் உலகத்துக்கு தெரியப் போவதே இல்லை. ஏன், தர்மத்துக்காக அவ்வளவு பொருளையும் செலவழித்த அந்த உருவத்துக்கே, தான் செயலின் உண்மையான எண்ணம் பட்டிருக்காது.

தர்மம் தலை காக்கும். இகத்திலே நல்லது செய்தவன் பரத்திலே சுகமடைவான். அவனுக்கு மோக்ஷம் கிடைக்கும். செய்யாதவனுக்கு அங்கே இடம் இல்லை. நரகத்தில் தான். இது தெரியாதா எனக்கு? நரகத்தின் கோரத்தை அனுபவிப்பதற்கு நான் தயாராக இல்லை. செத்த பிறகு சுகம் தரக்கூடிய அந்த மோக்ஷ உலகத்துக்கு நான் போக வேண்டும். அதற்கு வழி?

நானோ என்றானாலும் அழியப் போகிறவன். நிரந்தரமான வீட்டை சுகமானதாக்கிக் கொள்வதை விட்டு, இந்த அல்பாயுஸ் ஜன்மத்தைக் கட்டி அழுவதில் சுகம் எதற்கு?

மோக்ஷம்தான் நிரந்தரமான வீடு. அங்கே இடம் தேடிக் கொள்வதற்கு வழி சொல்லியிருக்கிறது. அது என் ரத்தத்தில் ஊறிப்போய் இருக்கிறது.

ஆகையால் புதிதாக நான் ஏதோ தர்மம் செய்து, பிரமாதமாக சாதித்துவிட்டவனாக எண்ணிக்கொண்டு விடுகிறேன். ஆனால் உண்மை? மோக்ஷத்தில் இடம் தேடும் சுயநலத்திலே தான் பிறக்கிறது என் தர்ம எண்ணம். வெளியே உணர முடியாத அந்த அடிப்படையான உண்மை நினைவு தான் அந்த தர்மத்தின் பகைப் புலத்தில்!

தூக்கி வாரிப்போடும் இந்த வியாக்யானம். தர்மம் சுயநலத்தின் அடியிலிருந்து கிளம்புகிறது என்பது. போகட்டும்.

உண்மையை ஒப்புக் கொள்வதில், தப்பர்த்தத்தை நீக்கி, உள்ளதை உள்ளபடியே மதிப்பிடுவதில் ஒரு தப்பும் இல்லை. தேசத்துக்காக நான் நாளை உயிரைக் கொடுத்துவிட்டால் அதை மஹத்தான தியாகம் என்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.

நான் உயிரைக் கொடுப்பேன் வாஸ்தவம்! ஆனால் எதற்காக?

நீங்கள் சொல்லும் தியாக குணத்தின் சாயல்கூட, என் உயிரைக் கொடுக்க நான் தயாராக இருக்கும் இந்த நிலையிலும், எனக்கு இல்லவே இல்லை என்று சத்யமாக சொல்கிறேன். என் சுயநலம்தான் எனக்குப் பெரிது. தனக்கு மிஞ்சித்தான் எதுவும்.

நான் சுதந்திரமாக இருக்க விரும்புகிறேன். கட்டுப்பட்டிருக்கும் என் கையை நான் அவிழ்த்துக் கொள்ள விரும்புகிறேன். என் கவலை எனக்கு. பிறர் அடிமையோ, சுதந்திரமோ—நான் கவலைப்படவில்லை. நான் சுதந்திரமாக இருக்க, என் தேசம் சுதந்திரமாக இருந்தால் தான் முடியும். அதற்கு நான் விலை கொடுக்கத் தயாராக இருப்பது என் உயிரை. என்னால் கொடுக்க முடிந்த உச்ச விலை அதுதான். எனக்கும் சுதந்திரத்திற்கும் ஒரு பேரம் அது! அதற்குத்தான் நீங்கள் கொடுக்கும் பெயர் தியாகம்!

நான் உயிரை விட்டு, நீங்கள் அடையும் பலனைப் பற்றியும் எனக்கு சிரத்தை கிடையாது. நான் தர்மம் செய்து, பிறர் வாழ்வதிலும் எனக்கு அக்கரை கிடையாது.

இரண்டையும் நான் செய்தது பின் எதற்காக? என் ஆத்ம திருப்திக்காக. என் சுய ஆசை நிறைவேறுவதற்காக. என் உயிரைக் கொடுப்பதிலே, என் சொத்தை தர்மம் செய்வதிலே பிறர் அடையும் பலனைவிட நான் அடையும் பலன் எத்தனை மடங்கு மேல் தெரியுமா? என் திருப்திக்காக தர்மத்தையும், உயிர் அர்ப்பணத்தையும் படியாக உபயோகித்துக் கொள்கிறேன்.

அவ்வளவுதான்!

நீங்கள் எனக்கு கொடுக்கும் அந்த மஹத்தான லக்ஷியங்கள் எனக்கு இல்லை. முழு நினைவும் என்னைப்பற்றிதான். நான் தேவன் அல்ல; மனிதன்தான். அதன் பலஹீனம் அவ்வளவும் அடங்கின ஒரு சின்னம்தான்.

பிறருக்காக நான் தியாகம் செய்கிறேன் என்னும் போதே பிறர் எனக்காக தியாகம் செய்ய வேண்டும் என்பதையும் எதிர்பார்ப்பவன்தானே நான். இப்படி ஒருவர் மற்றொருவருக்காக தியாகம் செய்துகொண்டே போவதைவிட அவரவர் காரியத்தை பார்த்துக்கொண்டு போவது மேலல்லவா!

அதைத்தான் நாம் செய்து கொண்டு வருகிறோம். மனிதன் செய்யும் எந்தக் காரியங்களுக்கும் அடிப்படை சுயநலம் தான். ஆழத்திலே அது நிரந்தரமாக பதிந்துபோய் இருக்கிறது. அத்தனை முழு ஆழத்தையும் ஆராய்ந்து, உண்மை நிலையை கண்டறிய மனிதனுக்கு சக்தி இல்லை. அதன் சாயல் கொஞ்சம் மேலெழுந்து தோன்றினாலும், அதை ஒப்புக் கொள்வதற்கு தைர்யம் இருக்கிறதில்லை.

வெளியுலகத்துக்கு என் சிந்தனையைப்பற்றி அக்கரையில்லை. வெளித்தோன்றும் செய்கையைத்தான் அது மதிப்பிடுகிறது. அடிப்படையிலே ஆழப்பதிந்து இருக்கும் சுய நலத்துக்கு, ஆத்ம திருப்திக்கு, தர்மம், தியாகம் என்றெல்லாம் பெயர் கொடுத்து அழைக்கிறது. இதற்கு முடிவு வரப்போகிறதே இல்லை. நிச்சயம்!

மலர்கொய் தோழி

தலைவியின்பால் தோழிக்கு அளவுகடந்த அன்பு. அந்த அன்பின் ஆர்வத்தால் தூண்டப்பட்ட தோழி பூப்பறிக்க நந்தவனத்துள் செல்கிறாள். ஒவ்வொரு செடியினிடமும் போகிறாள். ஒவ்வொரு கொடியினிடமும் செல்கிறாள். ஆனந்தத்தின் பெருக்கால் நாட்டியக் காரி போன்று ஆடிக் குலுக்கி நடந்து, ஒவ்வொரு பூக்கொத்தினிட மும் குனிகிறாள். எப்பொழுதும் அவளுக்குத் தலைவியின் நினைப் புத்தான்.

" தலைவிக்கு இதுதான் உகந்த பூ; அவள் இதைத்தான் அடிக்கடி அணிந்துகொள்ள விரும்புவாள். அவளுக்கு இந்த ரோஜாப் புஷ்பத்தின் மணம்தான் மிகவும் பிடிக்கும். மனத்தை கொள்ளை கொள்ளும் இந்தக் குண்டுமல்லி, அந்த சிவந்த ரோஜா, அதோ உயரவிருக்கும் சம்பங்கி, கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டி ஏமாற்றுவது போலக்காணும், இலைமறைவிலிருக்கும் அந்த மனோரஞ்சிதம், இவைகளாலான வேணிதான் அவள் அழகைப் பன்முறை அதி கரிக்கச் செய்யும். இந்த மாலையை அவளுக்குச் சூட்டுவேன். கூடவே காதலனுடன் வாழப்போகு மவளுக்கு புத்தியும் புகட்டுவேன்" எனக் கூறுகிறது பூரிப்படைந்த அவள் நெஞ்சு.

" காதலன் இன்று தலைவியைக் காண வருகின்றான். அவன் ...ம் சந்தோஷம் மாத்திரம் அடைந்தால் போதாது. இருவருக்கு ...டையே காதல் வெள்ளம் பெருக்கெடுத்த ஓடவேண்டும். உள்ளங் ...ள் உருகிக் கலத்தல் வேண்டும். அன்புத் தளையால் பிணைக்கப்பட்டு என்னென்றும் சக்கரவாகப் பறவைகள் போல அவர்கள் வாழ வேண்டும்" இத்தகைய விதவித எண்ணங்கள் தோழியின் மனத்தில் உதிக்கின்றன.

இதே தோழிபோன்றவன் எழுத்தாளன். படிப்போரிடம் அதே அன்பு, ஆர்வம். " இதுதான் பிரியமானது. அது மேன்மை யைத் தருவது" என எண்ணி இலக்கியப் பூங்காவிலிருந்து பொறுக்கி தெளிந்து ஆராய்ந்து எடுத்த புஷ்பங்களாகிய கட்டுரைகளைத் தலைவி யான வாசகர்களுக்கு அன்போடு தருகின்றான். தலைவனாகிய எதிர் கால வாழ்வில் இன்பத்தோடு வாழ புத்திமதியும் கற்பிக்கின்றான். அத்தகைய சேவை செய்பவன் எல்லார் அன்புக்கும் பாத்திரமானவன் தானே!

ஆகஸ்ட் மாதம் 1௳

(வ. ரா.)

ஒவ்வொரு தேசத்திலும், சில நாட்களை விசேஷ நாட்களாகக் கொண்டாடுகிறார்கள். சில நாட்கள், வெற்றி நாட்களாகக் கொண்டாடப்படும். இன்னும் சில நாட்களை வேறு வகையில் நினைத்துக் கொண்டாட வேண்டியிருக்கும்.

இந்தியாவுக்கு, ஆகஸ்ட் மாதம் 1௳ ஒரு மகத்தான தினமாகும். தமிழ்நாட்டுக்குச்சிறப்பான நாளாகும். ஆகஸ்ட் மாதம் 1௳ யில் தான் லோகமான்ய திலகர் மறைந்தார். அன்றே, சாத்வீக சத்தியாக்கிரகம் பிறந்தது. அதே ஆகஸ்ட் 1௳ யில், பம்பாய் நகரில், குடி ஒழிந்தது. தமிழ் நாட்டில் விற்பனை வரி அமுலுக்கு வந்துவிட்டது.

இந்த நான்கு நிகழ்ச்சிகளும் மகத்தான நிகழ்ச்சிகள். இந்த தினத்தைத் தியானம் செய்தாலே இந்தியனுக்குப் பெருமையும் புண்ணியமும் உண்டாகும் என்பது என் எண்ணம். இந்த நான்கு சம்பவங்களில், லோகமான்ய திலகர் மறைந்தது, விசேஷமாகக் குறிப்பிட வேண்டிய நாளாகும்.

எனக்கு காந்தியிடம் அளவு கடந்த பக்தி. அவரை அவதாரம் என்று சொல்லுவேன். இதைச் சொல்லுவதற்காக, ஸ்ரீ எஸ். சீனிவாஸ அய்யங்கார், மூடபக்தி கொண்ட முட்டாள் என்று எனக்குப் பட்டம் கட்டினாலும் பாதகம் இல்லை. அவதார புருஷன் என்று நான் எண்ணிக்கொண்டிருக்கிற காந்திக்கு முன்னர், இந்த நாட்டில் ஒரு வீர புருஷன் இருந்தார். அவர்தான் லோகமான்ய பால கங்காதர திலகர்.

திலகம் (நெற்றிப்பொட்டு, நெற்றி அலங்காரம்) எப்படி மனிதனுடைய முகத்துக்கு, ஒரு வித அழகைக் கொடுக்கிறது என்று ஹிந்துக்கள் சொல்லுகிறார்களோ, அவ்வித வனப்பையும், வல்லமையையும் இந்நாட்டுக்குக் கொடுத்து அருளியவர் லோகமான்ய திலகர்.

உலகத்தில், எந்தக் காரியத்தையும், வெற்றி—தோல்வி, என்ற அளவைகளால் அளப்பது வழக்கம். தோற்றுப்போனன் என்று சொல்லுவதே தவறு என்பது என் எண்ணம். தோற்பது என்பது ரூபாய் அணு பைசா என்ற சங்கதியில் இருக்கலாம். தோற்பது என்பது, உடம்பில் படுகாயத்தை அடைவதில் இருக்கலாம். இந்த கஷ்டங்களே, ஒரு மனிதன் கொண்டிருக்கும் இலட்சியத்துக்கு வெற்றி அடையாளங்கள் அல்லவா?

சிறை செல்லுவது என்பது நம்மில் பெரும்பான்மையோரை, இருபது வருஷங்களுக்கு முன்

னர் ரொம்பவும் பயமுறுத்திக்கொண்டிருந்தது. இந்த பயத்தினால், எந்தத் துறையிலும் முன்னேறிச் செல்ல முடியாமல், கிளிப்பிள்ளை வேதாந்தம் பேசிக்கொண்டு, தங்கள் வாழ்நாளை, நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியாமல், "விதி விதி" என்று சொல்லிக்கொண்டு, வாளா விருந்தார்கள்.

இந்த விதிப்பிசாசைக்கொன்று ஏக்கப்பட்டுக்கொண்டிருந்த ஏழை இந்திய பாமர மக்களைத் தைரியப்படுத்தி, கோழைத்தனத்தைப் போக்கி, அவர்களை மனிதர்களாகச் செய்ய சங்கற்பம் செய்துகொண்ட உத்தமன் லோகமான்ய திலகர்.

மோட்டார்காரில் வந்திறங்கும் விருந்தினனை உபசரித்து வரவேற்பதும், அரசியல் அதிகாரத்தில் தோய்ந்து கிடக்கும் மந்திரிமார்களைக் கும்பிடுவதும், பணக்காரர்கள் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரிப்பதும், ஒருவித உலகப் பழக்கம். அடி வலுவில்லாத மரம், கடுமையான காற்றுக்கு நிற்காது. அதைப்போலவே, இலட்சியமும் வீர்யமும் இல்லாமல், அடிவலு இல்லாமல், தவித்துத் தள்ளாடிக்கொண்டிருந்த இந்தியர்களுக்கு "தன் கையே தனக்கு உதவி" என்ற உண்மையை, விளக்கமாக எடுத்துக் காண்பித்தவர் திலகர்.

எவனோ, படாடோபமாகத் தெருவில் போனால், அவனைக் கண்டு பயந்து, எழுந்திருந்து, கும்பிடு போட்டு, தப்பித்துக் கொள்ளப் பார்க்கும் மனிதர்களின் உள்ளத்தில் தைரியத்தை ஊட்டும் வித்தை, லேசான வித்தையா என்று யோசித்துப் பாருங்கள். "மனிதர்களிடமிருந்து எந்த அசடையும் விலக்கிவிடலாம். தன்னலத்தைக் கூடப் போக்கிவிடலாம். ஆனால், கோழைத் தனத்தைப் போக்குவது மிகவும் கடினமான வேலை" என்று பெரியார் ஒருவர் சொல்லுகிறார்.

இந்த வாக்கியம் எவ்வளவு உண்மை என்பதை நம்மில் ஒவ்வொருவரும், தங்கள் சொந்த அனுபவத்திலேயே கண்டுகொள்ளலாம். பயந்து பயந்து, முதுகு எலும்பு நெளிந்துபோன, கூனிப்போன, ஒரு கூட்டத்தாரின் முதுகெலும்பை, செப்பனிட்ட மகான் திலகர் என்று நாம் அனைவரும் வாயாற வாழ்த்த வேண்டும்.

"சுயராஜ்யம் எனது பிறப்புரிமை; அதை நான் அடைந்தே தீருவேன்" என்று வேத மந்திரத்தைப் போன்ற அரிய வாக்கொன்றை, நமக்கு அளித்த திலகரின், அஞ்சாத நெஞ்சத்தை எப்படி வர்ணிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஒருவன் மேடைப் பிரசங்கம் அழகாகச் செய்யலாம், சாதுர்யமாக வாக்குவாதம் செய்யலாம், எழில் மிகுந்த சித்திரத்தை வரையலாம், இன்னும் எத்தனையோ அருமையான காரியங்களைச் செய்யலாம். ஆனால் மனிதனுடைய குணம் சீர்கெட்டுப்போனால், அதைச் சீர்படுத்தி, அவனை உயர்த்தும் வேலை மிகவும் கடினமான வேலையாகும்.

சென்ற இருபது வருஷங்களாக, காந்தி இடைவிடாமல் உபதேசம் செய்து வருகின்றாரே நம்மில் எத்தனைபேர்கள் நல்வழிப்பட்டு, திருந்தியிருக்கிறோம்? அஹிம்சை, அஹிம்சை

[என்று ஒரு ஆத்திரக் கடலில்] மூழ்கி, பிறனை அடிக்கும் வரையில் வந்து விடுகிறோம். அஹிம்சை, தோலுக்குள் ரத்தத்தில், சரியாகக் கலந்ததோ என்னவோ தெரியவில்லை.

திலகர் காலத்துக்கு முன்னும் அவர் காலத்திலும் இந்த நாடு இருந்த படு மோசமான நிலையைப்பற்றி எழுதுவதும் மிகவும் கஷ்டம். 'நெஞ்சுபொறுக்குதில்லையே!' என்று பாரதியார் எழுதியிருக்கும் பாட்டுகள் அத்தனையும், அப்பொழுது வாழ்ந்த மக்களுக்கு, மிகுதியும் பொருத்தமுள்ளதாகும். பொறுப்பு என்பதைச்சிறிதும் உணராமல், பகுத்தறிவு, சுயமரியாதை என்றவைகளைப் பற்றி சிந்தனையே இல்லாமல் வாழ்ந்த மக்களுக்கிடையே, பொறுப்பையும் தைரியத்தையும் எப்படியோ, திலகர் போதித்து விட்டார்.

இதை நினைக்கும் போதெல்லாம், எனக்கு மயிர்க்குச் செறிகின்றது. ஒரு சிறிய உண்மையைச் சொல்லி, அந்த உண்மையை பிறர் மனதில் படும்படியாகச் செய்து, அவர்களை, அந்த உண்மைக்கு பக்தி செலுத்தும் படியாகச் செய்யும் வேலையில், உங்களில் யாராவது ஈடுபட்டிருக்கிறீர்களா? ஈடுபட்டிருந்தால், உங்கள் அனுபவம் என்ன?

“நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். உபமான உபமேயங்களோடு சொல்லிப் பார்த்தேன். அழகாகச் சொல்லிப் பார்த்தேன். அணி அணியாக வகுத்து, விரிவாகச் சொல்லிப் பார்த்தேன். அவன் மண்டையில் ஏறினால் தானே? மண்டையிலே ஏற்றிக் [கொள்ளாதது மல்லாமல், அவன்] கோணல் கட்சிபேசுகிறான். அவனோடு, மனுஷன் பேசுவானா” என்று நாம் எல்லோரும் ஆத்திரத்தோடு பேசுவோம்.

ஆனால், உலகத்தின் தன்மையை மாற்ற வந்த புண்ணிய மூர்த்திகள், மேற் சொன்னவாறு சொன்னால், அவர்கள் வந்த காரியம் ஆகிவிடுமா? மேற் சொன்னது மாதிரி சொல்லி, அவர்கள் தங்கள் பொறுப்பைக் கழித்துக்கொள்ளப் பார்ப்பார்களா? அவ்வாறு, அவர்கள் செய்ய மாட்டார்கள்.

எவ்வளவு முட்டாள்தனமாகவும் கொண்டித் தனத்தோடும் குழந்தைகள் நடந்து கொண்டாலும், அன்பு தளராத தாய்மார்களைப்போல, உத்தமர்கள் நடந்து கொள்ளுவார்கள். ஆத்திரப்பட்டால், அவர்களுக்குக் கட்டுமா? பதறினால், அவர்கள் எண்ணிய காரியம் கைகூடுமா? மனிதர்களைப்பற்றி அலட்சியமாயும் அவமரியாதையோடும் அவர்கள் பேசக் கூடுமா? பேசுவார்களா?

அவர்கள் நெஞ்சு ஒடிந்துபோக மாட்டார்கள், நெஞ்சு ஒடிந்து போக முடியாது. அவர்கள் நெஞ்சு தளர்ந்து போனால் என்ன காரியம் செய்ய முடியும்? அவர்கள் யோசனை செய்யும் காரியத்தை, வேறு யார் செய்து முடிக்க முடியும்? அவர்கள் பொறுமையுடனும் திட சித்தத்துடனும் அன்பு மயமாகவும் இருந்தால்தான் அவர்களுடைய சங்கற்பம் கைகூடும்.

கோழைத்தனமும் மதியீனமும் மலிந்து கிடந்த காலத்திலே, உத்தமோத்தமனாகத் தோன்றிய

தொண்டை அளவிட்டுச் சொல்ல முடியாது. அஸ்திவாரத்தை ஆழமாயும் அழகாகவும் போட்டு விட்டால, மேலே கட்டிடம் எழுப்பும் வேலை யாருக்கும் எளிது.

சுயராஜ்யத்துக்கு அஸ்திவாரம் போட்டவர் லோகமான்ய திலகர். அதனால்தான், அவரது பேரால், காந்தி ஒரு கோடி ரூபாய் சுயராஜ்யநிதி திரட்டினர். திலகரைப் பற்றி, இரண்டொரு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானல், பின் வருமாறு சொல்லலாமோ, என்னவோ?

பின் வைக்காதவர். கட்டுப்பெட்டி அரசியல் வாதி அல்ல. நிலைமைக்கு எற்றவாறு, சமாளித்துக் கொள்ளும் சாமர்த்தியசாலி. இணையில்லாதவொரு ராஜதந்திரி. கூரிய மதி படைத்த பண்டிதர். அவர் சொல்லம்பு வீரன். எதிரிக்குக் கருணை காண்பிக்க மாட்டார்; எதிரியிடமிருந்து, கருணையையும் எதிர் பார்க்கமாட்டார். பரம விவேகி. கர்மயோக சாஸ்திர நிபுணன்.

அவர் ஆகஸ்ட் மாத 1உயில் மறைந்து, அந்த தினத்துக்குப் பெருமை அளித்துவிட்டார்.

எஜமானன்:— புதிசா உடைகள் தச்ச உடனே இந்தப் பழைய ஷர்ட் கோட் எல்லாம் உனக்குத் தாண்டா!

புதிய மனிதன்

'புதிய உலகத்தில் மனிதர்கள்தான் புதியவர்களாக இருப்பார்கள்; உலகம் பழையபடியேதான் இருக்கும்' என்றதைச் சென்றவாரம் படித்தேன். உலகத்தையே ஆக்கிரமித்து நின்று அதற்குப் புதிய உலகம் என்றே பெயர் கொடுக்கப்போகும் அந்தப் புதிய மனிதன் யார்?

முன்னேற்றத்தின் முற்றிய பழமாக வரப்போகும் தன்மையும் மனிதத் தன்மைதான். ஆனால் அதில் குற்றங்குறைவுகள் அற்றுப் போய்விடும். இயற்கை, சுபாவம் என்று பெயர்கள் சூட்டி நாம் சில குறைகளை மனிதனுக்கு உரியவையாகச் சொல்லுகிறோமே அவை நீங்கி அவன் குற்றமற்றவனாக இருப்பான்.

வால்மீகி ராமனை 'குற்றமற்றவன்' என்று சொல்லுகிறார். முன்னேற்றம் என்ற ரஸவாதத்தின் மூலம் இயற்கை மாறித் தோன்றப் போகும் லட்சிய புருஷன் குற்றமற்றவன், ராமன்.

நீட்ஷாவும் அவருக்குப் பிறகு ஷாவும் குறிப்பிடும் ஸூபர்மன் (அதி மானுஷன் என்று சொல்லலாமா?) அவன்தான். ஸ்ரீ அரவிந்தர் கனவு காணும் பூரண யோகியும் அவன்தான். காந்திஜியின் சத்தியாக்கிரகியும் அவன்தான்.

இந்தப் புதிய மனிதன் உண்மையில் பழைய மனிதன்தான். பிறந்த மேனியாகக் களங்கமற்று வாழ்ந்த புராதன மனிதன்தான் தன்மேல் படிந்துவிட்ட பாசம், அழுக்கு, துரு பூராவையும் அகற்[illegible] விட்டுப் புது மனிதனாகிறான்.

மனிதனுக்கு வந்த சிறுமையெல்லாம் நடுவில் வந்தது. ஆதி[illegible] மனிதன் பெரியவன், உயர்ந்தவன், மேன்மையானவன். பரிணா[illegible] வளர்ச்சி, என்ற மாறுதல்களில் அவன் உரு மாறிவிட்டது. அர்ஜுனனுக்கு வந்த சாபம்போல அவன் உருமாறிவிட்டான்.

சாப விமோசனமாகி வருகிறது. மனிதன் தன் சுய நினைவையும் சுய ரூபத்தையும் பெறும் காலம் வந்துவிட்டது. மறுபடியும் மனிதன் மனிதனாகிறான். தன்னைச் சூழ்ந்துகொண்டிருந்த சிறுமையை ஒரு ஆடைபோலக் களைந்தெறிந்து விட்டான்.

பழைய நிலையை அடையத்தான் நாம் பெரும்பாடு படுகிறோம்—தண்ணீரில் ஆழ இறங்கிவிட்டவன் கரையேற முயலுவதுபோல. இந்த முயற்சிதான் முன்னேற்றம்.

முன்னேற்றமே இந்த முறையில் ஒரு பிற்போக்கு. பரிணாம சக்கரத்தில் சுழல ஆரம்பித்து மறுபடியும் இருந்த இடத்திற்கு வரும் முறை. விதை பல மாறுதல் அடைந்து மறுபடி விதையாவது போல.

என்ன அத்தாட்சி?

(கு. ப. ராஜகோபாலன்)

அந்தத் தட்டிக்குப் பின்னால் நின்றிருந்த உருவத்தைப் பார்த்தது முதல் ராமுவுக்கு மனது சமாதானமற்றுப் போயிற்று.

"அந்தச் சனியனைப் பற்றி என் நினைத்துச் சாகிறாய்? அது ஒரு கழிசடை. எங்கோ கிராமத்திலிருந்து ஒரு நாடகக் காரனுடன் இங்கே ஓடிவந்தவள். சில மாதங்களுக்குள் அவன் இவளை இங்கே சந்தியில் நிறுத்தி விட்டுப் போய் விட்டான். திரும்பி ஊருக்கும் போக முடியாமல் வேறு வழியின்றி இந்த மாதிரி ஆரம்பித்து விட்டாள். பிராமணப் பெண்ணும், யாரோகூடச் சொன்னார்கள்" என்று அவன் நண்பன் சொன்னதிலிருந்து அவன் கலக்கம் அதிகம் தான் ஆயிற்று.

தினமும் ராமுவும் மணியும் அந்தத் தெருவழியாகத் தான் மாலையில் அரசலாற்றங் கரைக்குப் போவார்கள். போகும் போதெல்லாம் ராமு அந்த வீட்டை உற்று கவனிக்காமல் இருக்க மாட்டான்.

வீடு மேற்குப் பார்த்தது. சிறிய பழைய வீடு. சுவர்களில் பூசியிருந்த காரைச் சுண்ணம்பு பூராவும் உதிர்ந்து போய் உப்பரித்த செங்கல்கள் தென்பட்டன. அந்தச் சுவரில் மங்கல் நீலச் சாயம் சேர்த்த சுண்ணம்பு பூசப்பட்டிருந்தது. வாசலில் இரண்டு திண்ணைகளுக்கும் நடுவில் படியேறினதும் ஒரு பச்சை வர்ண மூங்கில் தட்டி கட்டியிருந்தது.

தட்டிக்குப் பின்னால் தான் அவள் நாள் தவறாமல் சாயந்திரங்களில் நின்றிருப்பாள். அவளுடைய கால் மட்டும் கீழே தெரியும். அந்தப் பாதங்களைப் பார்த்தாலே ராமுவுக்கு ஒரு கிளர்ச்சி உண்டாகி விடும்.

நல்ல யானைத் தந்தம் போன்ற வர்ணங்கொண்ட பாதங்களின் கீழிருந்து அடிப் பக்கத்து ரோஜா நிறம் தலை காட்டி நிற்கும். பாதங்களைச் சுற்றி நலங்கிட்டது போலவே இருக்கும். கால்களில் பாதசரங்கள் இருந்தன.

அன்று மாலை அவன் தட்டியோரமாக, உள்ளே பார்த்துக் கொண்டே போனபொழுது அந்த உருவம் சற்று பின் வாங்கி பெருமூச்சு விட்டது போல அவனுக்குத் தோன்றிற்று. அந்தப் பின் வாங்கலும் பெரு மூச்சும் அவனுக்கு எரிந்து போன ஒரு குப்பலிலிருந்து கிளம்பும் ஜ்வாலையும் புகையும் போலப் பட்டன. பாழடைந்து போன அவளுடைய வாழ்க்கையில் இன்னும் தங்கியிருந்த வெட்கமும் துக்கமுமோ அவை!

அன்று அவனுக்கு அதற்கு மேல் ஒன்றுமே ஓடவில்லை. அரசலாற்று மணலில் போய் இருவரும் துண்டை விரித்துப் படுத்துக் கொண்டார்கள். வெய்யில் விழுந்து விட்

டது. 'லயன் கரை'யின் மேல் வீட்டுக்குத் திரும்பிப் போய்க் கொண்டிருந்த குடியானவர்களும் மாடுகளும் ராமுவின் கண்களுக்கு எப்போ அடிவானத்தின் பக்கமாகப் போய்க் கொண்டிருக்கும் கனவுருவங்கள் போலத் தென்பட்டனர். ரயில் பாலத்தின் மேல் முடிவற்றதோ என்று நினைக்கும் படியாகப் போய்க் கொண்டிருந்த 'குட்ஸ்' வண்டியை கவனமின்றி பார்த்த வண்ணம் ஆழ்ந்த ஆலோசனையில் ஈடுபட்டான் ராமு.

"கிளம்பு, போவோம், உன்னுடன் இனிமேல் வெளியில் வருவதைக் காட்டிலும்—" என்று முனகிக் கொண்டு மணி எழுந்தபொழுது தான் ராமுவுக்குத் தன் நினைப்பு வந்தது.

"மணி, நீ முன்னால் வீட்டுக்குப்போ! நான் சற்றுகழித்து வருகிறேன்" என்றான்.

"எதற்காக? அவளுடன் பேசவா? என்ன பைத்தியமா உனக்கு? யாரோ ஊரில் கெட்டலைந்தால் உனக்கென்ன வந்தது, இவ்வளவு யோசனை? உலகத்தை நீதான் தாங்குகிறாயா? சரிதாண்டா, கிளம்பு நாழியாச்சு."

"நீ போ என்றால் போயேன், மணி. என்னுடன் எதிலும் அனுதாபப்பட முடியாவிட்டாலும் என்னைத் தனியாகக்கூடவா விடமுடியாது உன்னால்?"

"உன்னைத் தனியாக விட்டால் ஏதாவது செய்து வைப்பாய். அது விபரீதமாக வந்துமுடியும்."

"நான் குழந்தையல்ல, நீபோ!"

* * *

ராமு படியேறின நிமிஷமே அவள் உள்ளே போய்விட்டாள்.

அவன் தடுமாற்றத்துடன் உள்ளே நுழைந்தான். கூடத்தில் 'பவர் லைட்' விளக்கு எரிந்துகொண்டிருந்தது. சுவரோரத்தில் ஒரு கிழிந்த பாய் கிடந்தது. அடுத்திருந்த அறை வாசலில் அவள் நின்றுகொண்டிருந்தாள்.

ஒல்லியாக ஒடிந்து விழுபவள் போல இருந்தாள். முகம் உலர்ந்து போயிருந்தது. அதில் ஒரு சமயம் அழகு தாண்டவமாடினதின் சின்னம் மட்டும் இருந்தது. கன்னத்தின் எலும்புகள் எடுத்துப்போய் இருந்தன. கண்கள் குழிவிழுந்து போய் ஒளியற்று இருந்தன. வெளுத்துப்போயிருந்த உதடுகளில் வெற்றிலைக்காவி பொருத்தமின்றி தென்பட்டது.

ஆனால் அவள் முகத்தில் ஏதோ ஒரு சக்தி இருந்தது. அவள் முகத்தைப் பார்த்த நிமிஷம் முதல் அவன் அவளிடம் அதற்குமுன் கொண்டிருந்த வெறுப்பு எங்கோ போய்விட்டது. மரியாதையுடன் அவளைக் கவனித்தான்.

நகைகள் ஒன்றுமே அவள்மேல் அதிகம் இல்லை. வெள்ளைத்தோடு இருந்தது காதில். கையில் ஒரு ஜதை வளையல் இருந்தது. கழுத்தில் ஒன்றுமில்லை. சாயம்போன பெங்களூர் தலைப்புப் பச்சைப் புடவை கட்டிக் கொண்டிருந்தாள்.

"அம்மா, நான் ஒரு கேள்வி கேட்கலாமா?" என்று ராமு கேட்டான் முதலில் என்ன பேசுவது என்று தெரியாமல்.

"என்ன கேள்வி? எதற்காக?" என்று திடீரென்று பொங்கிய கோபத்துடன் கேட்டாள் அவள்.

"நீங்கள் பிராமணப் பெண்—?"

"யாராயிருந்தால் உங்களுக்கு என்ன?"

"அம்மா, நீங்கள் கோபப்படக் கூடாது. உங்களைக் கண்டிக்க நான் இங்கே வரவில்லை."

"என்னை நீங்கள் கேள்வி கேட்கத்தான் உங்களுக்கு என்ன அதிகாரம்?"

"ஒரு அதிகாரமும் கிடையாது. நான் ஒரு நண்பனாக உங்களுக்கு--"

"நண்பரா—?" என்று அவள் ஏளனம் செய்தாள். முகத்தில் அவளுடைய வயதிற்கு மீறின ஒரு அறிவும் அனுபவமும் தென்பட்டன.

"இல்லை, ஏளனம் செய்யவேண்டாம்."

"எவ்வளவோ நண்பர்களைக் கண்டாகி விட்டது என் பாழாய்ப் போன உயிரில்" என்று சொல்லிவிட்டு ஏக்கப் பார்வையுடன் எங்கோ பார்த்தாள்.

"அம்மா சற்று உட்காருங்கள். என்னை நம்புங்கள்" என்று ராமு சொன்னான். அவனுடைய குரலிலிருந்த குழைவைக் கேட்டதும் அவளுடைய ஏளனம் மறைந்தது.

"நம்புவதற்கென்ன ஆட்சேபணை? நம்பியே நானே இந்த கதிக்கு வந்தேன்!" என்று தன் அந்தரங்கத்தை வெளியிடுவது போலச் சொன்னாள்.

"இந்த கதிக்கு வரவேண்டிய அவசியமென்ன? கேட்கலாமா நான்?" என்று ராமு மரியாதையாகக் கேட்டான்.

"மிகவும் கொடியதான அவசியம் தான்—உயிரில் இருக்கும் பற்றுதான்."

"வேறு விதமாக ஜீவனம் நடத்த—"

"வேண்டாம். மன்னியுங்கள் உங்களுக்கு அதையெல்லாம் கேட்க அதிகாரம் இல்லை! என் வாழ்க்கை பாழடைய ஆரம்பித்தபொழுது யார் என்னைக் கேட்டார்கள்? இன்று எதற்காக வந்து கேட்கிறீர்கள், போங்கள், ஒன்றும் கேட்கவேண்டாம்."

உணர்ச்சிப் பெருக்கில் சிரமம் அடைந்தவள்போல வாசற்படியின் மேல் சாய்ந்துகொண்டு உட்கார்ந்தாள்.

“அம்மா! அன்று உங்களை யாரும் ஏனென்று கேட்காததாலா நீங்கள் இப்படி வாழத் துணிந்தீர்கள்?”

அவள் சட்டென்று தலையெடுத்து அவனை உற்று நோக்கினாள்.

“ஆமாம் என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன்!”

“ஒரு சிலர் அசிரத்தையால் கோபம் கொண்டு நீங்கள் ஒரு சமூகத்திற்கே இழுக்கு ஏற்படுத்துவது சரியா?”

“சமூகமா! அது என்னவென்று எனக்குத் தெரியாது. எங்கள் ஊர் தான் எனக்குத் தெரியும். எங்கள் ஊர் என்னை ஏன் என்று கேட்கவில்லை.”

“அதற்காக?”

“அதற்காக — அதற்காக — ஒன்றும் இல்லை. அதெல்லாம் எதற்கு உங்களுக்கு?”

“நான் என்னால் கூடிய உதவியை—”

“உதவியா? என்ன உதவி செய்யப் போகிறீர்கள்! என்ன உதவி செய்ய முடியும் இப்பொழுது உங்களால்?”

“இந்த வாழ்விலிருந்து உங்களை விடுவிக்க என்னால் ஆனதைச் செய்கிறேன்”.

“எதற்காக?” என்று கேட்டுக் கொண்டே அவள் அவன் முகத்தை உற்று கவனித்தாள்.

“உங்கள் கஷ்டத்தைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை” என்று அவன் தடுமாற்றத்துடன் சொன்னான்.

“நீங்கள் சொல்லுவது பொய்! என் கஷ்டத்தைப்பற்றி உங்களுக்குக் கவலையில்லை. நீங்கள் சற்று முன் சொன்னீர்களே—சமூகம். அதன் சார்பாக நீங்கள் என் வாழ்க்கையைக் கண்டு வெட்கப்படுகிறீர்கள். பட்டவர்த்தனமாய் சொல்லட்டுமா? ஒரு பிராமணப்பெண் விபசாரம் செய்வது உங்களுக்கு அவ[illegible] தானே?”

“ஆமாம். இருக்கட்டுமே! அது பிசகா?”

“பிசகோ சரியோ எனக்குத் தெரியாது. அதைப்பற்றி எனக்குக் கவலையும் இல்லை. என் கஷ்டத்தைக் கண்டு அனுதாபப் படவில்லை நீங்கள். அதுதான் எனக்குத் தெரியும்.”

“அதெப்படித் தெரியும்?”

“எப்படித் தெரியுமா? அதற்கு— உங்கள் அனுதாபத்திற்கு—அத்தாட்சி இல்லை.”

“என்ன அத்தாட்சி வேண்டும்?” என்று ராமு கொஞ்சம் ஆச்சரியத்துடன் கேட்டான்.

“என்ன அத்தாட்சி தேவை உங்களுக்கு?” என்று சாவதானமாகக் கேட்டான் மறுபடியும்.

“அத்தாட்சியா! அதை நான் சொல்லி என்ன பயன்? அதை நான் எங்கே எதிர்பார்க்க முடியும்! ஆகையால் அது உங்களிடம் இல்லாததைக்கண்டு நான் ஆச்சரியப் படவில்லை........ஆனால் ... ஆனால்... நீங்கள் இவ்வளவு தூரம் சிரத்தையெடுத்துக்கொண்டதற்கு, என்னைப் பற்றி இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டதற்கு, நான் என்ன செய்யக்கூடும்?......ஒன்றுமில்லை” என்று சொன்ன பொழுது அவள் குரல் கம்மிவிட்டது.

“அம்மா, அதெல்லாம் ஒன்றும் சொல்லாதீர்கள். என்ன அத்தாட்சி வேண்டும் சொல்லுங்கள்!” என்று ராமு மறுபடியும் கேட்டான்.

“அது கிடக்கிறது. என் நண்பனை நீங்கள் இங்கே வந்ததாகச் சொன்னீர்கள். அதை நான் இப்பொழுது நம்புகிறேன். நண்ப... முதல் முதலாக இன்று தான் உயிரில் ஒரு ஆறுதலைக்காண்கிறேன். உங்கள் வார்த்தைகள்...முதல் முதலாக...இங்கே நுழைந்தவர்களில்

நீங்கள் தான் என்னை அவமானப் படுத்தாமல், என்னைக் கேவலப்படுத் தாமல்......"

அதற்குமேல் அவளால் பேசமுடிய வில்லை. மௌனமாக சிலைபோல உட்கார்ந்திருந்தாள் அவன் முன்.

"அம்மா, அத்தாட்சி கேட்டீர்களே, என்ன அத்தாட்சி வேண்டும் சொல்லுங்கள்."

"அது கிடக்கிறது. என் வார்த்தையை மறந்து விடுங்கள். எதையோ நடக்காததை உளறி விட்டேன். உங்கள் மனது தெரிகிறது எனக்கு. அது போதும் எனக்கு. அதற்குமேல் ஒன்றும் வேண்டாம். உதவுவதாகச் சொன்னீர்கள், உதவி விட்டீர்கள் போதும். மேலும் நான் ஒன்றும் எதிர்பார்க்கக் கூடாது."

"இல்லை, அதை நான் அறிந்து தான் ஆக வேண்டும்" என்று ராமு பிடிவாதம் செய்தான்.

"அறிந்து தான் ஆகவேண்டுமா? வேண்டாம், கேட்டுக் கொள்ளுகிறேன். அதைக் கேட்டால் இங்கிருந்து கோபத்துடன் எழுந்திருந்து போய் விடுவீர்கள். இந்த உதவியும் எனக்கு அற்றுப்போய் விடும்."

"ஒன்றும் ஆகாது, சொல்!" என்று ராமு உணர்ச்சி வேகத்தில் கத்தினான்.

அவளும் அவனுக்குச் சரியான உணர்ச்சிப் பெருக்கில் உயர்ந்து நின்றாள்.

"அத்தாட்சி கேட்கட்டுமா?...... நீங்கள் என் கஷ்டத்தை உண்மையாகக் கண்டு உருகினால் அதைத் தீர்க்க வழி இருக்கிறது!"

"என்ன, அதைச் சொல்!"

"என்னைக் கலியாணம் செய்து கொள்ளுங்கள், அதற்கு உங்களுக்கு தைரியம் உண்டா, கேட்கிறேன். சொல்லுங்கள்!"

ராமு அப்படியே ஸ்தம்பித்து உட்கார்ந்து விட்டான் சில நிமிஷங்கள்.

அவளை உற்று நோக்கினான். அவ்வளவு நேரம் ஊனமாகவும் அரை மனதுடனும் பேசினவள் முகம் ஜ்வலிப்பு கொண்டிருந்தது.

"உன்னைக் கலியாணம் செய்து கொள்கிறேன்!" என்று உறுதியான குரலில் சொன்னான் ராமு கடைசியாக.

அவள் முகத்தில் திகிலும் துக்கமும் தென்பட்டன.

"ஆ, இன்னும் உலகத்தில்...நான் எண்ணினது பிசகா? உயிர் வாழ்வதிலும் உபயோக மிருக்கிறதா? என்ன காரியம் செய்தேன்!" என்று மனதில் தோன்றினதை அர்த்தமின்றி உரக்கச் சொல்லிக் கொண்டு கீழே சாய்ந்தாள் அவள்.

ராமு பதட்டத்துடன் அவளைத் தூக்கப் போனான்.

"வேண்டாம்! என்னைத் தொடாதீர்கள். அது நடக்க முடியாது. உங்களைக் கொடுமையாகச் சோதித்தேன், மன்னியுங்கள்."

"ஏன் முடியாது? எனக்குக் கலியாணம் ஆகவில்லை."

"அதல்ல!"

"நீயும் யௌவனத்தின்—"

"ஐயோ வேண்டாம், கூடாது. நடக்க முடியாது!"

"என்ன இப்படிப் பேசுகிறாய்? நான் தான் உன்னுடன் சமூகத்தை எதிர்க்க—"

"அதல்ல, அதல்ல!"

"பின்?"

"நான் வாய்திறந்து சொல்ல முடியாது."

ராமு திடீரென்று அவள் முகத்தை அருகில் கூர்ந்து கவனித்தான். அவன் முகம் கருத்தது. திகில் அதில் தென்பட்டது.

"பாதகமில்லை, எழுந்திரு!" என்றான் தீர்மானமாக.

"உண்மையாகவா?"

"வா, வெளியே போகலாம்."

நட்சத்திர குணாதிசயங்கள்

(12) உத்திரம்.

ஜென்ம நட்சத்திரம் :	உத்திரம்.
இதற்கதிபதி :	குஜன்.
இஷ்டதேவதை :	சப்த மாதர்.
பகை :	பூரட்டாதியில் பிறந்தவர்கள்.
உருவம் :	ஆண்.
குணம் :	ராசதம்.
சுபப்பலன் தரும் வாரம் :	வெள்ளி.
திசாதிபன் :	சூரியன்.

குணாதிசயங்கள் :—வஞ்சக மன்னியில் பேசுவோன். வல்லமை பொருந்திய கரங்களுடையவன். அழகிய வாயினை உடையவன். முகத்திலும் மார்பிலும் மச்சமுள்ளவன். அற்பப் பசியுள்ளவன். பக்திமான். கீர்த்தியடைய விரும்புபவன். தபசிகளால் ஞானம் பெற விரும்புபவன்.

பின்னும் முதற்பாகத்தில் பிறக்கின் இனிய வசனமுரைப்பான். கண்ணிய முள்ளவன். அஞ்சாத திட நெஞ்சம் படைத்தவன். பிறர் படும் கவலையைச் சகியான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் சிலநாள் தரித்திரம். நற்போஜனப் பிரியன். எப்போதும் சஞ்சலப்படுபவன். பிறர் ஒத்தாசையை எதற்கும் விரும்புபவனுமாவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் உண்மை உரைப்போன், ஆசாரமுடையவன், அற்ப சந்தோஷமுள்ளவன், ஆய்ந்தோய்ந்து காரியம் செய்யாமல் அவஸ்தைப்படுபவனும் ஆவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் நன்றி மறவாதவன், யாரையும் மதியாதவன், தாயை சிறுவயதில் இழப்பவன் அல்லது தாய் அன்பு அற்றவன்.

(13) அஸ்தம்.

ஜென்ம நட்சத்திரம் :	அஸ்தம்.
இதற்கதிபதி :	புதன்.
இஷ்ட தேவதை :	சூரியன்.
பகை :	சதயத்தில் பிறந்தவர்.

உருவம் :	பெண்.
குணம் :	தாமதம்.
சுபப்பலன் தரும் வாரம் :	திங்கள்.
திசாதிபன் :	சந்திரன்.

குணாதிசயங்கள் :—வித்வான், தரும சிந்தனையுள்ளவன், சுகம் அனுபவிக்கப் பிரியமுள்ளவன். சூரன். நல்ல அழகு உடையவன். பின்வயதில் பாக்கியமனுபவிப்பவன். அகன்ற மார்புடையவன். குருபக்தியுள்ளவன். சிறு பசியுள்ளவன்.

இத்துடன் முதற் பாகத்தில் பிறக்கின் கலகப்பிரியன், காரிய சித்திக்காகச் சிறு பொய்யைச் சொல்லுபவன், கர்வ முடையவன்; அமிர்தபானப் பிரியனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் சுகுணன், எக்காரியமும் ஆய்ந் தோய்ந்து செய்பவன், வாலிபத்தில் தாயை இழப்பவன். ஆடல் பாடலில் பிரியமுள்ளவனுமாவான்.

மூன்றாம் பாகத்தில் பிறக்கின் சிறு வயதில் தந்தை சுகங் குறை வுள்ளவன், தந்திரசாலி, சில ரோகமுள்ளவன், வியாபாரப் பிரியன், தெய்வபக்தி உள்ளவனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் நன் நடக்கையுள்ளவனும், நீண்ட உருவமுள்ளவனும், எதிலும் சந்தோஷம் அடைபவனாகவும், பிரபுக் கள் நேசமுள்ளவனும், தாய்பக்தி யுடையவனும் கீர்த்தியுள்ள வனுமாவான்.

---

(14) சித்திரை.

ஜென்ம நட்சத்திரம் :	சித்திரை.
இதற்கதிபதி :	குரு.
இஷ்ட தேவதை :	விஸ்வகர்மா.
பகை :	அசுவனியில் பிறந்தவர்.
உருவம் :	ஆண்.
குணம் :	சாத்மீகம்.
சுபப்பலன் தரும் வாரம் :	சனி.
திசாதிபன் :	செவ்வாய்.

குணாதிசயங்கள் :—திடமான சரீரமுடையவன், அகன்ற மார்பி னன், கடின நடை யுடையவன், சற்குணமுள்ளவன், யார்க்கும் நண் பன், திடவாக்குடையவன், முகத்தில் மரு மச்சமுள்ளவன், நித் திரை சுகமற்றவன், பொருளை வீண் விரயம் செய்யான், சௌரிய வான்.

இத்துடன் முதற் பாகத்தில் பிறக்கின் துற்காரியப் பிரியன், நேத்திரப் பிணியுள்ளவன், தர்க்கவான், அந்நிய தேசம் சஞ்சாரம் செய்பவனும் ஆவான்.

இரண்டாம் பாகத்திற் பிறக்கின் வாக்கு சாதுர்யன், தன் தேகத்தை போஷித்துக்கொள்ளுபவன், உயரமுள்ளவன், எப்போதும் சஞ்சல சித்தம் உள்ளவனுமாவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் அரிய கீர்த்தி யுள்ளவனுகவும், பராக்கிரமமுள்ள வனுகவும், வித்வத்வம் உள்ளவனுகவும், நன்னடக்கை யுடையவனுகவும் இருப்பான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் பகைவர்களைப் படியச் செய்பவனும், சுயபுத்தி யுள்ளவனும், பிறர் சொற் கேளாதவனும், எதிலும் ஜெயமடைபவனும் ஆவான்.

(15) சுவாதி.

ஜென்ம நட்சத்திரம் :	சுவாதி.
இதற்கதிபதி :	சுக்கிரன்.
இஷ்ட தேவதை :	லக்ஷ்மி.
பகை :	மிருகசிரத்தில் பிறந்தவர்.
உருவம் :	ஆண்.
குணம் :	ராசதம்.
சுபப்பலன் தரும் வாரம் :	புதன்.
திசாதிபன் :	இராகு.

குணதிசயங்கள் :—போஜனப் பிரியன், தொடையில் மச்சமுள்ளவன், ராஜசேவைப் பிரியன், அன்னிய பாஷையில் பிரியமுள்ளவன், தேவதா பக்தியுள்ளவன், அழகில் இச்சை யுள்ளவன், தாய் தந்தையரிடம் பிரியமுள்ளவன், யாரிடத்திலும் விசுவாசமுள்ளவன், நெறியாய்ப் பேசுவோன், வலுத்த தேகமுள்ளவன், தியாகம் செய்யப் பிரியமுள்ளவனும் ஆவான்.

இத்துடன் முதற் பாகத்தில் பிறக்கின் தீரனும், சொற்பனுவஸ்தை யுள்ளவனும், ஞானியும், பிரபுக்கள் நேச விசுவாசமுள்ளவனும், பிரசங்க சாதுர்யமுள்ளவனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் திடவான், வார்த்தையில் சாதுர்யன், காரியவாதி, உண்மை பேசுபவன், அந்தரங்க ஆலோசனையுள்ளவன், சிற்றின்பப் பிரியமுள்ளவன்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் திடவான், கொடூர குணமுடையவன், துற்சினேக முள்ளவன், கலகப்பிரியன்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் சொற் சாதுர்யன், முன் கோபி, துற்சன நேசன், சீலமுள்ளவன், மறைந்திருந்து பிறருக்கு இடுக்கண் செய்பவன். சிறு வயதில் குறும்புச் செயல்கள் செய்பவனுமாவான்.

ஆளுக்குள் ஆளு; எழுதின ஆளு!

மூன்றாவது தரமாக மெட்ரிகுலேஷன் பரீக்ஷையை முற்றுகை போட்டுப் பின் வாங்கிய உடனேயே, ராமனாதனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. "சை! இதற்கும் நமக்கும் கட்டாது" என்று அவன் தீர்மானித்தான்.

அதற்கு முன் ராமனாதனுக்குப் படிப்பில் இருந்த ஆசை, சொல்ல முடியாது. ஆனால் ஆசை மாத்திரம் இருந்து என்ன பிரயோஜனம்? "ஆசையும், ஆர்வமும் ஒன்று சேர்ந்தால் முடியாத காரியம் ஒன்று உண்டா? மனிதனால் செய்யக் கூடாதது எது? 'முடியாது என்ற வார்த்தையே என் அகராதியில் கிடைக்காது' என்று நெப்போலியன் சொன்னதாகக் கேட்டதில்லையா?" என்றெல்லாம் மேடைமீது நின்றுகொண்டு கர்ஜனை செய்யலாம்! ஆனால், அந்த ஏட்டுச் சுரைக்காய்களெல்லாம், கறிக்கு உதவுமா?

ராமனாதன் பரீக்ஷைக்குப் படிக்க ஆரம்பித்து விட்டானென்றால், அடுத்த டீக்கடைக்காரனுக்கு நல்ல வியாபாரம். ஏக மண்ணெண்ணெய் செலவு! அவ்வளவுதான். புத்தகத்திலுள்ள விஷயங்கள் என்னமோ அங்கேயேதான் இருந்தன. அவன் தலைக்குள் போகக் கண்டிப்பாய் மறுத்து விட்டன!

எனவே, அவனுக்கு அந்தப் பரீக்ஷையின்மேல் சட்டென்று அசட்டை கொடுத்துப்போயிற்று. 'படித்தவர்களெல்லாம் வேலைக்குத் திண்டாடும்போது, நாமும் ஏன் படித்துவிட்டு அந்தச் சோம்பேறிக் கூட்டத்தோடு சேர வேண்டும்?' என்று படிப்பை நிறுத்திவிட்டான்.

ராமனாதனை என்னவென்று வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். அவனைப் 'போக்கிரி' என்று மாத்திரம் சொல்லிவிடக்கூடாது. மகா சாது! அவனுடைய தமிழ்ப் பண்டிதர் கூட "அடே! நீ இவ்வளவு நல்லவனாக இருப்பதற்கு, ரெண்டு எழுத்தும் சேர்ந்தாற்போல உனக்கு வந்துடக்கூடாதா?" என்று அவனைப் பார்த்துப் பரிதாபப் படுவார்.

அதே 'தமிழ் ஐயா' இன்று ராமனாதனைப் பார்த்தால்

மூர்ச்சை போட்டு விழுந்திருப்பார். அவன் மேல் போட்டுக்கொண்டிருக்கும் செண்டு வாசனையினால் அல்ல! அவன் வாயிலிருந்து வரும் சிகரெட்டுப் புகையினால்!

அவ்வளவிற்கும், அவன்மேல் குற்றத்தைச் சுமத்திப் பிரயோஜனம் இல்லை. அது சகவாச தோஷம். அவனுடைய தகப்பனார் கூட ஆச்சரியப் பட்டார், 'நம்ம ராமுவா இது?' என்று! அவ்வளவு மாறுதல். "என்றைக்கு ராமனாதன், அந்த அனுமந்தராவுடன் சேர்ந்தானோ, அன்றைக்கே எனக்குத் தெரியும். பையன் உருப்பட்டாற் போலத்தான் இனிமேல்!" என்றார் அவர். அநுமந்தராவ் அவ்வளவு பிரசித்தம். மகாக் காலி! அவனுடன் சேர்ந்துகொண்டு ராமனாதன் எங்கே போய் நின்றான் என்பது எழுதக்கூடாத விஷயம். மகா பாதகத்தின் உச்ச நிலை எது? அங்கேதான்!

ராமு, இப்பொழுது வெகு நன்றாகச் சீட்டாடக் கற்றுக்கொண்டுவிட்டான். அதில், வரவை விட செலவு அதிகமாக இருந்தது என்பது ஒரு புறம் கிடக்கட்டும். ஆட்டத்திலேயே ஒரு குஷி இல்லையா? "பணம் கிடக்கிறது, ஸார்—பணம்! இன்றைக்கு வரும் நாளைக்குப் போகும். நல்ல சிநேகங்கள், இந்தக் குஷி இவை ஒவ்வொரு நாளும் மனிதனுக்கு வருமா?" என்பான் ராமு!

"சீட்டாடினால் ஆடிவிட்டுப் போகட்டும்—இப்படி அநியாயமாகக் குடிக்காமல் இருந்தால் சரி" என்று அவனிடம் அத்யந்தப் பிரியம் உள்ள இரண்டொருவர்—விஷயம் தெரிந்தவர்கள்—சொன்னார்கள். இது அவனுடைய தகப்பனாருக்குத் தெரியாது.

ஆனால் எத்தனை நாளைக்கு இவைகளை எல்லாம் மூடி மூடி வைக்க முடியும்? சிலநாளைக்குள், பையன் குடிக்கும் விஷயம், தகப்பனார் காதுக்கும் எட்டிவிட்டது. "இவ்வளவுக்கும் பணம் ஏது?" என்று அவருக்குத் தோன்றின சந்தேகம், எல்லோருக்கும் தோன்றுவது இயற்கைதானே என்னமோ? என்னைப் பொறுத்தவரையில், அந்தச் சந்தேகம் எனக்கு வரவில்லை. ஏனெனில் ராமனாதனையும் தெரிந்துகொண்டு, அவனுடைய சகவாசத்தையும் தெரிந்து கொண்டதில், அவனுக்குப் பணம் எங்கிருந்து வருகிறது என்பது, வெகு நன்றாக, எனக்கு விளங்கிவிட்டது. சமயத்திற்கு உதவாத சிநேகிதர்களும் உண்டோ? வேண்டியபோது பணம் கொடுப்பார்கள், சாவகாசமாக வாங்கிக் கொள்வார்கள்!

'சாவகாசம்' என்பதற்கும் ஒரு எல்லையுண்டு. அந்த எல்லையையும் மீறியபோதுதான் அவனுடைய தகப்பனாருக்குப் பிடித்தது சனியன். அவனுடைய கடன்காரர் தொல்லை பொறுக்கமாட்டாமல், இரவோடு இரவாய் மனைவியுடன் எங்கேயே கிளம்பிப்போய் விட்டார் அவர்.

தகப்பனார் போய்விட்டதும் கடன்காரர்களுக்கெல்லாம், தங்

கள் தங்களுடைய பணத்தைப் பற்றிய பயம் உண்டாயிற்று. சினேகிதர்களெல்லாம் கையை விரிக்க ஆரம்பித்தார்கள். எதைக் கொண்டு, கொடுத்த கடனை வசூலிப்பது, என்ற யோசனையை எல்லோரும் செய்ய ஆரம்பித்தார்கள். அவன், தகப்பனார் தாயாருடன் குடி இருந்த வீடுகூட வாடகை வீடாயிற்றே!

ஊரில் நல்லவர்களாக இருந்த ஒருவர் இருவர் "அடாடா! எப்படி இருந்த நம்ம ராமு, என்ன அநியாயமாகப் போயிட்டான், பார்த்தேளா?" என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

கொடுத்த பணத்தை, அவனிடமிருந்து வாங்கக் கடைசியில் அவர்கள் நியாயஸ்தல வழியையாவது கைப்பற்றலாம் என்று ஆரம்பித்தார்கள். அதன் முடிவுதான் ராமனாதன் சிறைச்சாலைக்குப் போனது.

சிறைச்சாலையில் வயிற்றுக்குச் சரியான உணவு கிடையாது. எத்தனை ஜென்மங்களாகச் செய்த புண்ணியமோ, அப்பொழுதுதான் 'சிறைச்சாலைகளில் மோர் கொடுக்க வேண்டும்' என்ற சட்டம் வந்திருந்தது. உயர்தரச் சாராய வகைகளுக்குப் பதில், மோரைக் கொஞ்சம் குடித்து வைத்தான் ராமு!

பழைய சினேகிதர்களை இப்பொழுது காணவே காணோம். அவர்கள், அவனை வந்து பார்த்தனால் என்ன பிரயோஜனம்? எனவே அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புத்தி வந்தது. கடவுளைப் பற்றியும் கொஞ்சம் நினைத்தான். ஏனெனில், அவர்கள் தர்மத்திற்காகக் கொடுத்த மோர் கூட இல்லாவிட்டால்......

இது யார் செய்த தர்மம்? ஆம்! தர்மம், அஹிம்ஸை, சத்தியம் இவைகளெல்லாம் யாருடைய ஆயுதங்களோ, எவர்கள் இவ்வளவிற்காகவும் உயிரையும் கொடுத்துப் போராடுகிறார்களோ, அவர்களுடைய செயலாகத்தான் இருக்கவேண்டும். ஏன், அவனும் அவர்களில் ஒருவனாக இருக்கக் கூடாது?

அந்த எண்ணம் வந்த உடனே, ராமனாதனுக்குத் தானும், தேசத்துக்குத் தொண்டுசெய்யும் கோடான கோடியில் ஒருவனாக இருக்கவேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது.

அது, மெட்ரிகுலேஷனை பரீக்ஷை செய்துவிட வேண்டும் என்ற ஆர்வத்தைப்போல் இல்லை. இது நிலைத்து நின்றது. எப்படி என்று கேட்கிறீர்கள்?

அதோ காங்கிரஸ் கொடியைப் பறக்கவிட்டு, பாரத தேவியின் தொண்டுக்கு மனமுருகி அழைக்கிறானே, அவன்தான் ராமனாதன். "அட! ராமனாதனுக்குள் இப்படிப்பட்ட மஹத்தான தியாகி ஒருவனா இருந்திருக்கிறான்!" என்று சந்தோஷத்தால் மயிர்க்கூச்செடுக்கிறதோ?

ரோட்டு - ரயில் போட்டி

———

(கரிச்சான்)

——

"ரோட்டு—ரயில் போட்டி" என்று அடிக்கடி பத்திரிகைகளில் படிக்கிறோம். சட்டசபையில், ரயில்வே வரவுசெலவைப்பற்றி விவாதம் நடக்கும்பொழுது, இந்தப்பேச்சு மிகவும் அடிபடுகிறது. சமீபத்தில் ரயில்வே கமிஷனர் ஸர். கத்ரே ரஸல் சென்னை வந்திருந்தபொழுது, இதைப்பற்றி ஏதேதோ சர்ச்சை நடந்ததாகப் படித்தோம்.

"ரோட்டு—ரயில் போட்டி" என்று சொல்லுவது என்னவென்பது நமக்கெல்லோருக்கும் தெரியும். அது வேறெந்த விதமான போட்டியும் அல்ல; பஸ்களுக்கும், ரயில்களுக்கும் போக்குவரத்தில் ஏற்படும், வருமான விஷயமான, போட்டி. எங்கு பார்த்தாலும் இப்பொழுது பஸ்கள் அதிகமாகி ரயிலின் வருமானத்தையே குறைத்துவிட்டன. குறுக்கு வழியாகக் குறைந்த சார்ஜில், (சில சமயங்களில் குறைந்த கால அளவில்கூட) பஸ் நம்மை, நாம் போகவேண்டிய வீட்டு வாசலிலேயே கொண்டுபோய் இறக்குகிறது. காரைக்குடியில் இருப்பதுபோல, ரயில்வே ஸ்டேஷனுக்கும் ஊருக்கும் இரண்டு மைல் இருந்தால், பஸ் போனால், பஸ் தானே சௌகரியம்?

அது கிடக்கிறது, அதைப்பற்றி நான் பேசவரவில்லை. ரோட்டு—ரயில் போட்டி என்ற சொல் தொடரில், எனக்கு ஒரு விசேஷமான அர்த்தம் தொனிக்கிறது. அதில் கவிதையே கொட்டிக்கிடப்பது போல எனக்குப்படுகிறது. அதைத்தான், நான் இப்பொழுது சொல்ல முன் வந்தது.

ரோட்டு—ரயில் போட்டி! எது எத்துடன் போட்டிபோடுகிறது? ரோட்டு ரயிலுடனா, ரயில் ரோட்டுடனா? இந்தக்கேள்விக்கு, நமது பதில் மிகவும் சுலபமானது.

ரயில்தான் ரோட்டுடன் போட்டி போடுகிறது. ரோட்டுதான் முதலில் வந்தது; ரயில் பின்னால் வந்த பிறவி. ஆதியில் கடவுள் உலகத்தை சிருஷ்டித்தவுடன், மனிதன் ரோட்டுகளை சிருஷ்டித்தான் —அதாவது, ரோட்டுகளின் மூலங்களான காட்டுப்பாதைகளையும், "ஒத்தையடி"ப் பாதைகளையும் சிருஷ்டித்தான். மனிதன் சிருஷ்டித்தான் என்று சொல்லுவது ஒரு முறையில் பிசகுதான், ஒப்புக் கொள்ளுகிறேன். ஒத்தையடிப்பாதையை யார் சிருஷ்டிக்கிறார்கள்,

... யோசித்துப்பார்த்தால், ஒற்றையடிப்பாதையே ஒரு அற்புதம்.

பிறகு மனிதன் கிராமங்களையும் நகரங்களையும் உண்டாக்கின பொழுது, சாலைகளையும் ரஸ்தாக்களையும் உண்டாக்கினான்—குறுக்கும் நெடுக்குமாக அவன் அலைவதற்காக! பிறகு வண்டிகள் வந்தன.

கடைசியில்தான் ரயில் வந்தது. சில இடங்களில் ரோட்டை அனுசரித்தும், சில இடங்களில் ரோட்டின் குறுக்கேயும், மற்றும் சில இடங்களில் ரோட்டிற்கு நேர் விரோதமாகவும் ரயில் தன் பாதையைப் பதித்துக்கொண்டது. ஆனால் அதென்ன சாபமோ, எப்பொழுதும் ரயில் பாதை ரோட்டில்தான் போய் முடிவுபெற்றது. ரோட்டில்லாமல் ரயிலுக்குப்போக முடியாது. ரோட்டிற்கு அந்தமாதிரி துவந்துவம் ஒன்றும் கிடையாது. ஆனால் ரோட்டின் மகத்துவம் கொஞ்சம் குறைந்தது.

பஸ் வந்தது, ரோட்டின் கௌரவத்தை நிலை நாட்ட. ரயில் கட்டை வண்டியை தோற்கடித்தது; பஸ் வந்து ரயிலைத் தோற்கடித்து விட்டது. ரயில் வந்ததும் பாழடைந்து போன பல பெரிய ரஸ்தாக்கள் மறுபடியும் புத்துயிர் பெற்று விரிந்தன.

ரஸ்தாப் பிரயாணம் தான் எனக்குப் பிடித்தம்; அதில்தான் ஒரு உயிர் இருக்கிறது. ரயில் பிரயாணம் சுவையற்றது. மற்றொரு விசேஷம். ரஸ்தா பிரயாணம் பூராவும் பகல். ரயில் பிரயாணம் முக்கியமாக இரவுதான். பகலிலும் ரயில் ஓடுகிறது என்பதை நான் மறுக்கவில்லை.

ரஸ்தாவில்தான் 'வழி நெடுக' இரு பக்கங்களிலு மிருக்கும் பகல் உலகத்தைப் பார்த்து அனுபவித்துக் கொண்டே போகலாம். சாலை யோரத்து நிழல்களில் அயர்ந்து கிடக்கும் அழகுகளைப் பார்த்து மகிழலாம்.

ரயிலில் கூட, இரு பக்கங்களிலும் வயல்களையும் வேலிகளையும் பார்க்கிறோமே என்று நீங்கள் சொல்லலாம். ரயில்கத்தாழையைக்கூட இடைவிடாமல் பார்க்கிறோம் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் உயிரின் சந்தைக் கூட்டம் அங்கே கிடையாது. ரஸ்தாக்களின் ஓரங்களில் தான். ரயிலோரத்தில் தென்படுவது கழிவு. அங்கும், அருகில் ரஸ்தா இருந்தால்தான் ஏதாவது கொஞ்சமாவது புல், பச்சை, பசுமை, நிலம் நடவு கண்ணில் படும்.

ரஸ்தாவில் அமைதி இருக்கிறது. ரயிலைப் போல அடித்துக் கொண்டு போகிற அவசரம் அதில் இல்லை. ஓடும் பஸ்கூட, ஒவ்வொரு கிராமத்தருகிலும் நின்றுதான் போகும். அதிலிருக்கும் சுகமே தனி. ரயிலுக்கும் ரஸ்தாவுக்கும் இருக்கும் பேதத்தை ஒரே உதாரணம் சொல்லிக் காட்டுகிறேன்.

ஒரு சமயம், நான் சேலத்திலிருந்து பெங்களூர் போக வேண்டியிருந்தது. இரவு பெங்களூர் மெயிலில் போவதென்றே தீர்மானித்திருந்தேன். நடுவில் ரங்க விலாஸ் பஸ் கண்ணில் பட்டது. அது பெங்களூர் போவது. அதில் ஏன் போகக்கூடாது என்று தோன்றிற்று. மெயிலுக்குப் போகவில்லை. போயிருந்தால் மறுநாட் காலை பெங்களூர் போயிருப்பேன். என்ன அவசரம் என்று பஸ்ஸில் சென்றேன்.

காலை இருட்டுடனேயே பஸ் சேலத்தை விட்டுப் புறப்பட்டு விடுகிறது. தர்மபுரி போய் காபி சாப்பிடலாம். கிருஷ்ணகிரி போகும் போதுதான் என்ன அற்புதமான தோற்றம்! மைசூர் பீடபூமிக்கு இங்கே தான் ஏற்றம் ஆரம்பம். எங்கு பார்த்தாலும் பாறைகள்! அவற்றின் நடுவே மனிதன் வெட்டிய ரஸ்தா, அவன் வலிமையின் வழி போல ஏறிச்செல்லுகிறது. ஹொஸூரை தாண்டிப் போகும் போது நல்ல வெய்யில் வேளை.

இவ்வளவு தூரம் போவதற்குள்ளேயே எவ்வளவு ரகமான மனிதர்கள், பேச்சுகள்! ரயிலில், இந்த மாறுதலை வியக்தமாக உணரவே முடியாது. ஒவ்வொரு எல்லையை கடக்கும் போதும், அந்த மாறுதல் வெகு நன்றாகத் தெரியும்.

மைசூர் சமஸ்தான எல்லைப்புறத்தில், ஒரு சின்ன கிராமத்தின் சாலை யோரமாக பஸ் போய் நின்றது. பக்கத்தில் ஏழெட்டு அரச மரங்கள் சேர்ந்தாற்போல. அவற்றின் கீழ் மழுமழு வென்றிருந்த சிமிண்டு மேடை. அதில் பிரயாணிகள் ஆனந்தமாக இளைப்பாறலாம்!

அது கன்னட கிராமம். தலை முக்காடிட்ட கன்னடப் பெண்கள் மோர் கொண்டுவந்து விற்றார்கள். நல்ல வாழைப் பழம், வெள்ளிரிப் பிஞ்சுகள்! இன்னும் என்ன வேண்டும்?

"மொஸரு பேகா?" என்று அந்தப் பெண் கேட்கிறாள். மற்றொரு பெண் வெள்ளிரிப் பிஞ்சு காலணாவுக்கு மூன்று தருகிறாள். கள்ளம் கபடற்ற அந்தப் பெண்களின் முகங்களும் பேச்சுமே மனதிற்கு ஒரு நிம்மதியைக் கொடுக்கின்றன. வெயிலின் கொடுமை எங்கோ போய் விடுகிறது. அரச மரத்துக் காற்றும் அந்த அமைதியும் எங்கு கிடைக்கும்?

ரயிலில் எங்காவது இந்த சாவகாசமும் இனிமையும் உண்டா? இரவு மெயிலில் அதுவும்! நல்ல தூக்கம் கூடக் கிடையாது.

ரோட்டு—ரயில் போட்டி வலுக்கிறது. இன்று ரோட்டு தான் முந்தி விடும் போலிருக்கிறது. ரோட்டுக்குத்தான் என் ஓட்டு.

ரோட்டுக்கு ஜே!

எங்கள் "மானி"

("வரதன்")

18690

கார்த்திகை மாதம். தேய்பிறை ஆறாம் நாள் திங்கட்கிழமை இரவு பத்து மணி ஆயிற்று. தெருவில் எங்கு பார்த்தாலும் ஒரே காரிருள். "மினுக், மினுக்" என்று எரிந்து கொண்டிருந்த எங்களூர் பஞ்சாயத்து வெளிச்சமும் 'பொக்' கென்று நின்று விட்டது.

வானம் முழுவதும் வெகுவாய்க் கவிந்து கொண்டிருந்த மையிருளுடன் மகத்தான மல்யுத்தம் புரிந்து தோற்ற காரணத்தாலோ என்னவோ, அவ்வெளிச்சம் ஒரு வேளை வெட்கித்தற்கொலை புரிந்திருக்குமோ என்று சந்தேகிக்கும்படியாயிருந்தது. அச்சமயத்தில் ஊரெங்கும் ஒலியடங்கி ஒரே நிசப்தம் குடிகொண்டிருந்தது. ஆனால் எங்கள் வீட்டுக்குள்ளே நேர் எதிரிடையாயிருந்தது.

"பட்டப் பக"லென்று சொல்லும்படியாக நல்ல 'லைட்' ஒன்று எரிந்து கொண்டிருக்கிறது. தாழ்வாரத்தின் தெற்குக் கோடியில் "மெத்'தென்று விரிக்கப்பெற்ற ஒரு பாயின்மேல் மெதுவான பஞ்சணையில், தலையை வைத்து ஒருவர் படுக்க விடப்பட்டிருக்கிறார். அவரது சரீரம் ஸ்தூலப் பார்வைக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? அறுபது வருஷங்களுக்கு மேலாக 'ஆடிப் பாடி' பூத்து, காய்த்து, பழுத்து, ஆனால், இப்பொழுதோ சற்றுப் பின்னேயா, உலர்ந்து போகக்கூடிய நிலையில் இருப்பதாகத் தெரிகிறது.

நல்ல வைரம் பாய்ந்த சரீரம். சலிப்பில்லாத உழைப்பால், தன்னலமற்ற தியாகத்தால், தேய்ந்து உருமாறிக் காய்ந்துபோய், எலும்புக் கூடும் லேசான தோலும்தான் எஞ்சியதோ என்று நினைக்க ஏதுவாய் இருக்கிற சரீரம் ஒன்றைக் கண் கொண்டு காண்கிறோம். அவர் யார் என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறீர்களா? அவர்தான், தர்மமே உருவெடுத்து வந்த தாய், பொன்னம்மா!

அவரைச்சுற்றி உட்கார்ந்து கொண்டிருப்பவர்களைச் சுட்டிக் காட்டட்டுமா? வலது பக்கத்தில் முகவாய்க்கட்டையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்த வண்ணமே அவரது க[illegible] ஊன்றிப் பார்த்துக் கொ[illegible]டிருக்கும் என்னை எளிதில் கண்டு விட்டீர்கள்! இடது பக்கத்தில் அவரது அருமைப் பெண் ஒருத்தி, அரைத்தூக்கத்துடன் படுத்துக் கொண்டிருக்கிறாள். அந்தப் பெண்மணியைத் தொடர்ந்தாற்போல படுத்துக் கொண்டிருக்கிறவர்கள், கிழவியின் குடும்ப பாரத்தைத் தலைக்குக் கொஞ்சமாக வீதித்துக் கொள்வதற்கு என்று வீட்டுக்கு வந்திருக்கும் 'நாட்டு'ப் பெண்கள். கிழவியின் 'தலைமாட்டில்' அவரது பேரன்களும் பேத்திகளும், லேசாய்க்

“குறடு” விட்டுத் தூங்கக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் தாயை “மானி” என்றழைப்பது வழக்கம். ஏகாங்கியாய் விழித்துக்கொண்டு ‘மானி’யைக் காத்து வந்த என் கண்கள், சிறிது நேரத்துக்கு ஒரு முறை, பக்கத்தில் தூங்காமலேயே ஓடிக்கொண்டிருக்கும் என் கைக் கடிகாரத்தின் மீதும், “தூங்காமல் தூங்கிச் சுகம் பெறக்” காத்துக் கொண்டிருக்கும் எங்கள் மானியின் பேரிலும் மாறி மாறிப் பார்வையைச் செலுத்தி வந்தன. அவள் முகத்தை நான் உற்றுப்பார்க்கையில் ஒரு சமயம் ஆனந்தமும், மற்றொரு சமயம் சற்று அயர்வுடன் மருவிய ஆச்சர்யமும் தாண்டமாடினதை எப்படி எடுத்துரைக்காதிருப்பது? மண்ணுலகை விட்டுத் தான் சேரவேண்டிய விண்ணுலகை நோக்கி நடந்தோ, ஓடியோ, பறந்தோ ஆத்மா சென்று கொண்டிருக்கையில், குறிப்பிட்ட இடம் சமீபித்து விட்டதென்ற ஆனந்தம் தானோ? ஒன்று மாத்திரம் நிச்சயம். அவளது முகத்தில் உண்டான தேஜஸ் நிமிஷத்துக்கு நிமிஷம் சுடர் விட்டெரிய ஆரம்பித்தது.

அவள் முதல் நாள் சொன்னவைகளையெல்லாம் இமைப்பொழுதுக்குள் மனோ வேகத்தில் ஞாபகத்துக்குக் கொணர்ந்தேன்.

“நான் டிக்[illegible] வாங்கிவிட்டேன். வண்டிக்[illegible]கத்தான் காத்துக் கொண்டு இருக்கிறேன்” என்றாள். “மானி! நீ, ஸ்டேஷன் மாஸ்டர் தங்கை. உனக்கு லகுவில் டிக்கட்டு கிடைத்துவிடும். இருந்தாலும் எங்கிருந்து டிக்கட்டு வாங்கினாய்?” என்றேன். “எல்லாம் என் இஷ்ட தெய்வமாகிய வரதராஜப் பெருமாளிடம்தான்” என்றாள் பளிச்சென்று. “என்னுடைய தகப்பனார் சாகிறபோது ‘அம்மா! பொன்னு! பதிவிரதைக்குத் தெய்வம் பர்த்[illegible] போனது காதில் இன்னும் கேட்கிறது. அவரைத் தவிர எனக்கு கோவில், குளம், வேறு கிடையாது. எல்லாம் உங்கப்பாவாகிய என் பெருமானிடம்தான் டிக்கட்டு வாங்கிக் கொண்டேன்” என்றபோது நான் மலை மலையாய் விட்ட ஆனந்தக் கண்ணீரை அளவிட முடியுமா?

“அப்பா! என்னை உத்தேசித்து ஒரு கட்டில் வருகிறது. நான் போக வேண்டும். நாளைக்குள் குதித்தோடி விடுவேன்” என்றாள். சற்றுக் கழித்து, “இரண்டு குதிரைகள் பூட்டப்பெற்ற ஒரு ரதத்தைக் காண்கிறேண்டா” என்றாள். “மானி! கொஞ்சம் கவனித்துப் பார். குதிரைகள் நான்கு இருக்கவேண்டுமே! நாலு வேதங்களையும் நாலு குதிரைகளாகக் கொண்டு, ரதத்தை பகவான் செலுத்தி வருவதாகச் சொல்வது வழக்கமாயிற்றே! இப்பொழுது கவனித்துச் சொல்” என்றதும், ஒரு அழகான புன்முறுவல். “ஆமாம், நாலு குதிரைகள் தென்படுகின்றன” என்று அவள் சொன்னதை நம்பி ஆனந்தப்பட்டேன்.

தனது “நாட்டுப் பெண்கள் அனைவரையும் அருகில் அழைத்து, ஒவ்வொருவருக்கும் தனித்தனியான செய்தி சொல்லியதுமல்லாமல் பொதுவாக, “ஆயிரங்காலமாய் அழகாக நடந்து வந்த குடும்பம் இது. ராஜாக்கள் அரண்மனையில் கூட இருக்காது இவ்வளவு செல்வாக்கு. அதைக் குறைக்காதீர்கள்; சண்டை, பூசல் இல்லாமல் ஒத்து வாழுங்கோ. உங்களுக்கு ஒரு குறைவும் வராது. குழந்தைகளைத் திட்டாதீர்கள். இன்னும் நல்ல காலம் வரும்” என்றுரைத்த இனிய பொன்மொழிகளை நினைத்து நினைத்து இறுமாப்புக் கொள்ளாமல் இருக்க முடியுமா?

அவளை வந்து பார்த்துவிட்டுப் போனவர்களிடம் எவ்வளவு

...ருமை! "யாரது, வடிவேலுவா! ...வன் நல்லவண்டா. நம்ப பிள்ளை ...மாதிரிடா. ரொம்ப யோக்கியன். அவனுக்கு வெற்றிலை, பாக்குக் கொடுத்தனுப்பு" என்பாள். "வல்லத்தாளா! கள்ளங் கபடமில்லாத சாது. நல்ல தயிர், நெய் கொடுத்து வந்தவள். அதிகப் பொய் சொல்ல மாட்டாள். வெற்றிலை பாக்கு கொடுத்தனுப்பு".

"அண்ணாமலை! நீ நம்ம குழந்தை மாதிரி. ஐயா எல்லோரையும் பார்த்துக்கோடா. ஸம்ஸாரி. சூது வினை தெரியாதவன். அவனுக்கு வேஷ்டி கொடுத்துச் சாதமும் போட்டு அனுப்புங்கள்" என்பாள்.

"அடுத்தாத்து லெட்சுமியா, வா! ...வளும் நம்பாத்திலே பிறந்த பெண் ...மாதிரி தான்! குங்குமம் கொடுத்து, வெற்றிலை சீவல் தந்து அனுப்புங்கோடி" என்று கட்டளை யிடுவாள். இப்படியே வந்து போனவர்களுக்கெல்லாம் ஏதாவது கொடுத்துக் கொண்டே, தான் அடையவேண்டிய ஊருக்குச் சென்றுகொண்டிருந்தாள்.

கடைசியில் "நீங்கள் எல்லோரும் நன்றாயிருப்பீர்கள். நாட்டுக்கு க்ஷேமம் உண்டு. பஞ்சம், பசி என்பது கொஞ்சம் கொஞ்சமாய் அற்றுப் போகும். நல்ல காலம் நிலைத்திருக்கும். எல்லாம் பொய் என்று எண்ணாதே. போகப் போகத் தெரியும்" என்று சொல்லியதை நினைக்க, கண் கலங்குகிறது.

என்ன! மணி பதினொன்று மாதிரி இருக்கிறதே. இதென்ன விபரீதம்! ஒரு மணி நேரமா அதற்குள் ஆகி விட்டது?

அவளது கண்களில் ஒளி லேசாக அதிகரிக்கின்றது. ஒரு வேளை கண்ணீர் ஏதாவது வருகின்றதோ என்று மெதுவாகத் துடைக்கக் கையைக் கண் பக்கம் கொண்டு போனேன். ஆஹா! கண் இமைக்க வில்லையே! அப்படியே திறந்தது திறந்தாற்போல இருக்கிறதே என் பதைக் கண்ணுற்றேன். ஒரு வேளை ஓய்வில்லாமல் விழித்துக்கொண்டிருந்ததால் கண்கள் அசந்துபோய், நான் பார்ப்பதுதான் தவறோ என்று கூட ஐயுற்றேன்.

மணி பதினொன்றரை. அவளது மூச்சு தொண்டைக்கு வந்துவிட்டது. ஊஞ்சல் ஆடுவதுபோல் மூச்சானது அமரிக்கையாய் உள்ளும் புறமும் ஒருவித இழுப்புமில்லாமல் ஓடிக்கொண்டிருந்தது. பார்க்க வேண்டியவர்கள் எல்லோரையும் அநேகமாய்ப் பார்த்து விட்டுப் போவதற்காகவோ என்னவோ, பத்து நாட்களாகப் படுத்திருந்த எங்கள் மானி, தன் பிராணனையே சிறிது சிறிதாக அடக்கிக்கொண்டு வந்த காரணத்தால் மயிரிழைப் பிராணன் மாத்திரம் உடலில் ஓடிக்கொண்டிருந்தது; ஒட்டிக்கொண்டிருந்தது.

ஊஞ்சல் ஆடி அடங்கிப் போகிறதென்ற விஷயம் நமக்கு எவ்வளவு தெளிவாகப் புலப்படுகிறதோ அதே விதம் எங்கள் மானியின் ஜீவன் உடலைவிட்டு ஒதுங்கப் போகிறதென்பதை ஒருவாறு உணர்ந்து கொண்டோம். சரியாய் மணி 11-35 ஆயிற்று. மானியின் உடல் மாத்திரம் இங்கு இருந்தது. உயிர் அப்படியே அடங்கி விட்டது. உதடு ஒதுங்குதல், மூக்கு விரைப்பு, காதில் கனத்த சத்தம், கண் இமை கோணுதல் முதலிய ஒருவித கோளாறுமில்லாமல் ஆத்மா அடங்கினதைப் பார்த்தோம். தன்னைப் பெற்ற லோகமாதாவாகிய "சக்தியிடம்" சரண்புகுந்தாளே ஒழிய, வேறல்ல.

பரமானந்தத்தைக் கொடுக்கும் பாரதியாரின் தூங்கமில்லாக் கண் விழிப்பே சக்தி என்ற எழில் மிகுந்த வரியானது என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தது.

* முதல் கச்சேரி *

(சி.ரா. சேஷாத்திரி)

I

ராமநவமி தினம். வெங்கய்யா வீட்டில் ஒரே அமர்க்களம். மைசூர் பிரதேசத்தில் மட்டுமின்றி எங்குமே அவர் கீர்த்தி பரவி இருந்தது. "கேட்டால், தோடி ராகத்தை அவரிடம் கேட்கவேண்டு" மென்பார்கள் சிலர். "பைரவியை அவர் பாட வேண்டும்" என்பார்கள். மற்றும் சிலர். அவருடைய மனைவிக்கு அவருடைய ஹிந்துஸ்தான் காபியில் பிராணன். அவளுக்கு அவர் மேல் என்ன கோபமிருந்தாலும் அவர் "ஆடிசிதளெ சோதா!" என்று பாடினால் போதும்.

ஆனால் வெங்கய்யாவின் விருப்பம் மட்டும், எது என்பது யாரும் சொல்ல முடியாது. அவருக்குத் தோடி ராகம் பாடவேண்டுமென்று தோன்றினால், வாரம் பூராவும் அதையே பாடுவார். பாட ஆரம்பித்தால், தனக்கு உடல் என்று ஒன்று இருக்கிறது என்பதுகூட, அவருக்கு நினைவிருக்காது. எந்த இடத்தில் பாடுகிறோம் என்பதைக் கூட மறந்து விடுவார். கேட்பவர்களுக்குக்கூட இடம், காலம், சிந்தையே இல்லாமல் போய்விடும்.

அவர் குரூபி; தடித்த சரீரமுடையவர். பாடிக்கொண்டே சில சமயங்களில் இடையிடையே சிரிப்பார்; சில சமயங்களில் கண்ணீர் விடுவார். சில சமயங்களில் பாட்டையே நிறுத்திவிட்டு, கைகளைக் கூப்பி, "தாயே! நான் உன் மகன் அல்லவா? என்னை ஏன் பரீக்ஷிக்கிறாய்? தெளிவாகா ராகக் கலைகளை எனக்குத் தெளி படச்செய், தாயே!" என் பிரார்த்தனை செய்வார். "பாட்டில் பாவம் வேண்டும், ஜீவன் வேண்டும், பாடுபவனுடைய ஹிருதயம் பாட்டின் பாவத்தில் லயிக்க வேண்டும்" என்று அடிக்கடி சொல்லுவார்.

அவருடைய அந்தரங்க சிஷ்யன் ராமு, அன்றுதான் முதன் முதலாகக் கச்சேரி செய்யப் போகிறான். பக்க வாத்தியக்காரர்கள் பிரபல வித்வான்கள். ஸதஸில் ரஸிகர்களும், கலாபிமானிகளும், சாகித்திய சிரோமணிகளும் நிறைந்திருந்தார்கள். ராமுவும் அந்த ஸதஸைக் கண்டு உற்சாகமடைந்தான். அவனுடைய குருவின் பத்தினிகூட பூரிப்புடன் அங்கே வந்து, அவன் பாட்டைக் கேட்கத் தயாராக இருந்தாள்.

கணபதி துதி முடிந்து, இஷ்ட தெய்வப் பிரார்த்தனையும் ஆகிவிட்டது. ராமு உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே, குருவையும்

ரு பத்தினியையும் வணங்கி ஷடானனு!" என்ற கீர்த்தனையை ஆரம்பித்தான். இடையே ஒரு இடத்தில் ஸ்வரமும் பாடினன். அவனுடைய பாட்டில் ஒப்பற்ற பாவமும், கலையழகும் ததும்பி நின்றன. "இவன் முதல் தடவையாகவா பாடுகிறன்!" என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

சுமார் ஒரு மணிநேரம் கச்சேரி நடந்தாகிவிட்டது. பாடகன் முகத்தில் களைப்பின் அறிகுறியே காணும்; ஒரு காந்திதான் இருந்தது. ராமு பைரவி ராகம் பாடி "ஸ்ரீ ரகுவர!" என்ற கீர்த்தனையை ஆரம்பித்தவுடனே, வெங்கய்யா மெதுவாக எழுந்து வெளியே போய்விட்டார். குதூகலத்தோடு ஜனங்கள் அவர் பக்கம் பார்த்தார்கள்.

II

...கோக அவர் தன் அறைக்குச் சென்றூர். ஒரு ஓரத்தில மேஜை ஒன்றின்மேல் ஒரு சித்திரப் படம் வைத்திருந்தது. ஒரு அழகிய பெண், தன் குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் அதில்.

சுருண்ட மயிர் விழுந்து புரண்டுகொண்டிருந்த விரிந்த நெற்றி. ஒளி வீசும் கண்கள். அழகிய மூக்கு—நல்ல முகவெட்டு. உதடுகளில் ஒரு புன்சிரிப்பு தென்பட்டது. அந்த முகத்தைப் பார்த்து, வெங்கையா பெருமூச்சு விட்டார். அளவு கடந்த ஆனந்தம் ஒரு புறமும், துக்கம் மற்றொரு புறமுமாக அவருக்கு ஏககாலத்தில் உண்டாயின.

அறையின் கதவை ...தாளிட்டார். படத்துடன் ... ஆரம்பித்து விட்டார்!

"சுந்தரி! உன் மகன் கொண்டாடப்படுவதை நீ பார்க்கவில்லையே! ராமுவுக்கு உன் சாரீரம் தான்! பைரவியை உன்னைப்போலவே பாடுகிறன். அதே எடுப்பு! அதே கம்பீரம்! ராமு நம்......"

சட்டென்று நிறுத்திக்கொண்டு, படத்தினிடமிருந்து ஏதோ பதில் எதிர் பார்த்தவர் போல, உட்கார்ந்திருந்தார் சிறிது நேரம். திடீரென்று அவர் கண்களிலிருந்து ஜலம் பெருகி படத்தின் மேல் விழுந்தது.

நிழல் நம்மை அறியாமலே பின் தொடர்வது போல, பழைய நினைவுகள் நம்மை விட்டு அகலாமல் எப்படிப் பின் தொடருகின்றன!

III

இருபத்திநான்கு வருஷங்களுக்கு முன்!

மழைகால ஆரம்பம். ஒரு நாள் காலை, வெங்கய்யா பூஜை ஜபங்களை முடித்துக்கொண்டு எழுந்த சமயம். தாசி வகுப்பைச் சேர்ந்த ஒரு கிழவியும் ஒரு சிறு பெண்ணும் வந்து அவரை வணங்கினர்கள்.

"ஸ்வாமி, இந்தப் பெண்ணை நீங்கள் பெண் போலக் கருத வேண்டும். இவள் அனாதை. இவள் உங்களுக்கு அடைக்கலம்" என்று கிழவி சொன்னாள்.

அதைக் கேட்டதும் வெங்கய்யா அந்தப் பெண்ணைத் தன் சிஷ்யையாக வைத்துக்கொண்டு விடலாமா என்று எண்ணினர்.

அவர் அதிகமாக சிஷ்யர் ளையே வைத்துக் கொள்வ ல்லை. வருபவர்களைப் பரிசைஷ செய்து பார்த்து, யார் கலை அபி ருத்தியில் ஈடுபடக்கூடியவர்கள் ன்று அவருக்குத் தோன்று றதோ, அவர்களைத்தான் தேர்ந்தெடுத்து, சிட்சை சொல்லிக் கொடுப்பார். சாதாரணமாக ஸ்திரீகளுக்கே அவர் பாடம் சொல்லிக் கொடுப்பதில்லை. பெண்களுக்குச் சங்கீதம் கலியாணம் ஆகும் வரைதான் உபயோகம் என்று, அவர் சொல்லுவதுண்டு. தாசிகளுக்கு அவர் போதிப்பதே கிடையாது. அவர்களைக் கண்டாலே அவருக்கு ஒரு வெறுப்பு. கலையில் ஒழுக்கத்தைப் பாழ்படுத்துபவர்கள் அவர்கள், என்பது அவர் எண்ணம். கலைஞன், தூய்மையும் ஒழுக்கமும் கொண்டிருக்க வேண்டுமென்பது அவர் கொள்கை.

ஆனால் முன்னால் நின்ற பெண்ணை அவரால் வெறுக்க முடியவில்லை; அவளை வேசியென்றே நினைக்க முடியவில்லை அவரால். அவளுடைய முகத்தில் அவ்வளவு தெளிவும், தூய்மையும் தென்பட்டன. அவள் அழகு மாசுபடக்கூடாத வஸ்துபோல அவருக்குப் பட்டது.

“உன் பெயர் என்ன அம்மா?” என்று கேட்டார் கடைசியாக.

“சுந்தரி” என்றாள் அவள்.

“நீ என்னிடம் சங்கீதம் கற்க வந்தாயா?”

“ஆமாம், ஸ்வாமி!”

“என்ன கற்க விரும்புகிறாய்?”

“உங்களைப்போல் உள்ளம் உருகும்படி பாட!”

“பாடினால் மட்டும், உனக் யார் பணம் கொடுப்பார்கள்? நாட டியம் அல்லவா உனக்குமேல். சங் கீதம் உன்னை அழகுபடுத்தாது!”

“குருவே, நீங்கள் என்னை அப்படி இப்பொழுதே மதித்து விடக்கூடாது.”

குருவென்று அவள் சொன்னது, அவருடைய உள்ளத்தில், திடீரென்று ஒரு மாறுதலை உண்டாக்கிற்று. ஆனால் சந்தேகம் விடவில்லை.

“சங்கீதம் கற்றுக்கொண்டு நீ என்ன செய்வாய்?” என்று கேட்டார்.

“அவள் கலியாணம் செய்து கொள்ள விரும்புகிறாள்” என்று கிழவி சொன்னாள்.

அதைக்கேட்ட பிறகு வெங்கய்யா அவள் வேண்டுகோளை நிராகரிக்க இஷ்டப்படவில்லை.

* * *

அவளுக்கு இருபது வயதான பொழுது, அவளுடைய சங்கீதத் தேர்ச்சி, குருவிற்கே வியப்பை அளிக்கும்படியாக இருந்தது.

சிட்சை முடியும் தினத்தன்று, கடைசி முறையாக, குருவைக் வணங்கி விடைபெற்றுக் கொள்ள வந்தாள் சுந்தரி.

கலையே உருவெடுத்து வந் சௌந்தரிய ரூபமாக இருந்தா பூரணமாக மலர்ச்சிகொ யௌவனம் அவள் கண்ச பிரகாசித்தது. தான் சிட்சை சொல்லிக் கொடுத்து உதவி அவள் வாழ்க்கையையே வேறு பாதையில் திருப்பியிருக்காவிட்டால், அவள் அப்பொழுது எவ்வாறு இருப்பாள் என்ற யோசனை தட்டிற்று. அதிலிருந்து அவர் மனம் தடுமாறிற்று.

[illegible]
அவளைக் கலை வழியில் தயாரித்தார். அவ்வளவு சௌந்தரியம், அவ்வளவு ஞானம்! தன் வாழ்க்கையில் நிறைபெறாத ஒரு சூன்

புஷ்பம் அழகு தருவதுபோ[ல] பிறைச்சந்திரன் இரவில் பிரகா[சி]த்துக்கொண்டிருந்தான். வெகு நேரம் கழிந்துவிட்டது. காற்று மெல்ல அடித்துக் கொண்டு

யத்தை அப்பொழுது அவர் நினைத்துக்கொண்டார். உயிர் பூராவும் தேங்கிப்போனது எதனால்?

அந்த நிமிஷம் அவருக்கு அதையெல்லாம் நினைப்பூட்டினது, அவளுடைய கண் கொள்ளாத அழகுதான். அவள் தன் சிஷ்யை என்பதை மறந்தார்.

சுக்லபக்ஷத்து இரவு. இளந்தளிர்களிடையே பாதி விரிந்த

இருந்தது. அதில் சங்கீதத்தின் இசையும் கலந்தது.

சுந்தரி, பூபாளம் முதலிய சில மனோகரமான ராகங்களைப் பாடிவிட்டு, மங்களம் பாடினாள்.

"சுந்தரி, குரு தக்ஷிணை என்ன?" என்று வெங்கய்யா விபரீதமான குரலில் கேட்டார்.

"எது வேண்டுமானாலும். ஏகலைவன் போல, என் நாவையே

காடுக்க வேண்டுமென்ருலும் கொடுக்கிறேன்."

"அதுமட்டும் போதாதது. உன் முழு......" என்று அவர் தடுமாறினுர்.

சுந்தரிக்கு அர்த்தமாகி விட்டது.

"என்ன! என் குரு, என் உடம்பையா விரும்புகிருர்! கலை ரகசியங்களின் அரசனை இவர், பிச்சைக்காரனின் எச்சிலுக்காகவா ஆசைப்படுகிருர்? இவரா, என் குரு வெங்கய்யா?" என்று ஆச்சரியப்பட்டாள்.

"நான் உங்கள் சிஷ்யை, உங்கள் பெண்ணல்லவா!" என்று கண்ணில் நீர் ததும்பக் கேட்டாள்.

"தாசி எனக்கு உபதேசம் செய்கிருயா?" என்று கோபம் மேலிட்டுக் கத்தினுர் வெங்கய்யா.

அவருடைய கலையும், அறிவும் எங்கேபோய் விட்டன. அவை இருந்த இடத்தில்......அதன் பலன்.......

நிறங்கெட்டுத் துக்கத்தால் வெளுத்துப்போன சுந்தரியின் [illegible], அவர் நினைவிற்கு வந்தது.

சுந்தரியின் நெஞ்சு பிளந்து போயிற்று. ராமுவைப் பெற்ற பிறகு, இரண்டு வருஷங்கள் தான் இருந்தாள்.

வெங்கய்யா படத்தின் முன்பு கதறினுர்.

* * *

கச்சேரி முடிந்தது. மங்கள ஆரதியானவுடனே சபையி லிருந்த பெரியோர்களுக்கு வெங் கய்யாவின் ஞாபகம் வந்தது. அ[வ]ரைத் தேடிப் பிடித்துக்கொண்டு வந்தார்கள்.

ராமு, குருவின் பாதங்களில் விழுந்தான்.

"குழந்தாய்! உன் தாயாரைப் போலப் பாடுகிருய்!" என்ருர் அவர்.

ராமு ஒன்றும் தெரியாமல் திகைத்தான்.

வெங்கய்யா, பிள்ளையைத் தழுவிக்கொண்டு கண்ணீர் விட்டார்.

(கன்னடக் கதையைத் தழுவியது)